விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள் : இருபத்து நான்கு

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 08 ஞாயிற்றுக்கிழமை (23.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சர்வதேச விசாரணையை இலங்கை சந்தித்தே ஆகவேண்டும்!

## மன்னிப்புச்சபையின் செயலாளர் உறுதிபட தெரிவிப்பு

(ஜெனிவா)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து இலங்கை அரசு சுயாதீன சர்வதேச விசாரணை யொன்றை சந்தித்தே ஆக வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் சலில் செட்டி தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரி 30ஆம் திகதிக்குள் ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(மல்லாவி)

வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்களின் இடமாற்றம் எதிர்வரும் 2013ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதிக்குள் இடம்பெறும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கும்வடக்குமாகாணகல்வித்திணைக்கள அதிகாரிகள், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணத்திலுள்ள வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக் கிடையிலான சந்திப்பொன்று நேற்று காலை (23ஆம் பக்கம் பார்க்க)

## திருப்பி அடித்தால் பயங்கரவாதமா?

### -சீமான்

(சென்னை)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நம் இனத்தின் விடுதலைக்காக நடந்த போரில் தம் இன்னுயிரைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கு விளக் கேற்றி வீரவணக்கம் செய்த மாணவர்கள் மீது சிங்கள இராணுவமும், பொலிஸாரும் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



இதனை இந்திய மத்திய அரசு ஏன் என்றும் கேட்க (23ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திரிகள் நியமனம்!

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேலும் இரு அதிகாரிகள் இராஜதந்திர பதவிகளுக்கு நியமிக் கப்பட்டுள்ளனர்.

இதன்படி இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன பிரேஸில் நாட்டுக்கான இலங்கையின் பிரதித்தூது (24ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மையினருக்கு உரிமை உண்டு - கோத்தா

(கொழும்பு)

இன்று இந்நாட்டில் சிறுபான்மையினருக்கு உரிய உரிமைக்களை வழங்கப்படவில்லை எனும் சர்வதேச அழுத்தங்கள் இந்தநாட்டின் மீது பிரயோகிக்கப்படும் நிலையில், இந்தநாட்டு சிறுபான்மையினத்தவர்களின் இனப்பரம்பலை குறிப்பிடும் போது கொழும்பில் பௌத்தர்களை விட முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் விகிதாசாரம் கூடியுள்ளதை பிறநாட்டு தூதுவர்களிடம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## 1 1/2 இலட்சம் இராணுவத்தினர் வடக்கில் குவிக்கப்பட்டுள்ளனர்

### 15ஆயிரம் என்பது அப்பட்டமான பொய் - சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த கத்துரு சிங்க வடக்கில் 15 ஆயிரம் இராணு வத்தினரே நிலை கொண்டுள்ளதாக கூறுகிறார்.

அவர் கூறுவது பொய், நான் மீண்டும் கூறுகின்றேன் இங்கு ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் உருவச் சிலைதிறப்புவிழாவில்கலந்துகொண்டு உரை (23ஆம் பக்கம் பார்க்க)

## நீதியின் சுதந்திரத்தை உறுதி செய்யுங்கள் - ஷிராணி

(கொழும்பு)



நீதிபதிகளின் வருடாந்த மாநாடு கொழும்பில் நேற்றுச் சனிக்கிழமை நடந்தது. அங்கு சிறப்புரையாற்றிய நாட்டின் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, ஜனநாயகம் என்ற ஒன்று இருக்க வேண்டுமானால் ஒருநாட்டில் நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டும் என்று கூறினார்.

நாட்டிலுள்ள எல்லா பிரஜைகளும் சமமாக நடத்தப்படும் அளவுக்கு (23ஆம் பக்கம் பார்க்க)

காலம் பொன்னானது!
க.பொ.த சா/த சித்தி அல்லது அது இல்லாமல்கூட
OPTION 1
மாதம் 50,000 ரூபா வருமானத்துடனான ஹொட்டேல் பயிற்சிநெறி
வேலைவாய்ப்பு with WORK PERMIT
DEGREE ← DIPLOMA @ SEGi University
◆ No IELTS needed + No Embassy Interview
◆ யாழ்ப்பாணத்திலேயே விசா
OPTION 2
with O/L
1 YEAR FOUNDATION → 3YEARS DEGREE in UK / Australia/ Canada America/ New Zealand/Malaysia
2 YEARS DIPLOMA → 2YEARS DEGREE in UK / Australia/ Canada America/ New Zealand/Malaysia

SkillsMalaysia
மலேசிய அரசாங்கத்தின் INVITE
ஜனவரியில் 20 பேர் பயணம்
மார்ச் அணியில் இணைந்துகொள்ள முந்துங்கள்
(சி-1882)
MEDIA & EDUCATION
சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
இல. 221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்
விற்பனைக்கு பிந்திய இலவச சேவைகள்
SAFARI

72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்
GALAXY 100

100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்
CAMY 80

80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்
SUPER CUP

4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN
Rs. 145000/=
Rs. 130500/=
ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொடிகாமம், பரித்தித்துறை
தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்
சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர்களுக்காக இந்தியா மாறினால் தமிழீழக் கனவு நிச்சயம் மெய்ப்படும்

## மாவையின் உரையில் நம்பிக்கைத் தொனி

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வோ அல்லது தமிழீழமோ கிடைக்கவேண்டுமாயின் இந்தியாவின் கொள்கை மாற்றியமைக்கப் படல் வேண்டும். அவ்வாறான மாற்றத்தினை நாமே கொண்டுவரல் வேண்டும். தனியே பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேசாமல் அன்னத்து தரப்பினருடன் பேச்சுக்களை நடத்தி எம் நிலைப்பாட்டினை எடுத்துக் கூற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பொதுச்செயலாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கோப்பாய் கோமானின் உருவச் சிலைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது நீண்ட உரையில் தெரிவித்ததாவது,

பல்கலைக்கழக மாணவர்களினை வெலிகந்தையில் சென்று பார்ப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினராகிய எமக்கு சிறப்பு உரிமை உண்டு.

ஆனால், நாம் மாணவர்களினைப் பார்ப்பதற்கு இராணுவம் அனுமதிக்காது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் தாக்கப்பட்ட போதும் தற்போதும் முட்கம்பிக்குள் இருக்கும் போதும் தமிழர்கள் சிங்கள அரசாங்கத்திற்கு எதிராகவே வாக்களித்து வருகிறார்கள்.

எமது கட்சியினை தடை செய்வதற்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்குக்கூட நடந்து வருகிறது.

மக்கள் எமக்கு வாக்களிக்கிறார்கள். நாம் மக்களுக்கு விசுவாசமாக இருக்கின்றோமா என்பதை சற்று யோசிக்க வேண்டும்.

ஆரம்ப காலத்தில் 13 இராணுவ முகாம்களை வெளியேற்றுமாறு போராடினோம்.

ஆனால் இன்று ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் இராணுவம் அடாவடித்தனமாக உள்நுழைந்துள்ளது.

எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்கும், மீட்பதற்கும் துணிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறந்த அரசியல் தலைவர்கள், சர்வதேச அரசியலினை புரிந்து கொண்டு செயலாற்றக்கூடிய வினைத்திறனுடைய அரசியல்வாதிகள் எமக்கு அவசியமாகவே உள்ளது. அதனை எம் மக்களிடமிருந்தே பெற வேண்டும்.

தமிழர் வரலாற்றில் துரோகிகள் என்றும் இருந்து கொண்டே இருக்கிறார்கள்.

அதனை இனங்கண்டு நாம் விழிப்புடன் செயற்படல் வேண்டும் என்றார் மாவை சேனாதிராஜா. (ந-4)

# இந்தியாவுக்கு எதிராக இலங்கை செயற்படாது

## உறுதியளித்தார் வன்னி கட்டளைத் தளபதி

(வவுனியா)

அணிசேரா மாநாட்டின் உறுப்பு நாடாகிய இலங்கை, எமது மூத்த சகோதரனாகிய இந்தியாவுக்கு எதிராக எதையும் செய்யாது என்று வவுனியாவுக்கு விஜயம் செய்த இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் குழுவினரிடம், வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய இராணுவத் தளபதி வவுனியாவுக்கான ஒருநாள் விஜயமாக நேற்று முன்தினம் வருகை தந்த போது யுத்தத்தின் பின்னர் என்னென்ன துறைகளில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு இராணுவத்தினர் உதவி வருகின்றார்கள் என்பது பற்றி வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா எடுத்துரைத்தார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பயிற்சி பெற்று வருகின்ற முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு நிலையங்களில் அளிக்கப்படுகின்ற புனர்வாழ்வுப் பயிற்சிகள், புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலிகளின் வாழ்வாதாரத்திற்கென வழங்கப்பட்டு வருகின்ற சுயதொழில் வாய்ப்புக்கான உதவிகள் பற்றியும் வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விளக்கிக் கூறியுள்ளார்.

இதனையடுத்து, பூந்தோட்டத்தில் அமைந்துள்ள முன்னாள் விடுதலைப் புலிகளுக்கான புனர்வாழ்வுப் பயிற்சி நிலையத்தை இந்திய இராணுவத் தளபதி பார்வையிட்டார். அங்கு தையல் பயிற்சியில் ஈடுபடுகின்ற விடுதலைப்புலிகளின் முன்னாள் பெண் உறுப்பினர்களுடன் உரையாடினார். (அ-2)

# பரீட்சை ஆணையாளரிடம் சி.ஐ.டியினர் விசாரணை

கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சை வினாத்தாள் கசிவு தொடர்பில் பரீட்சை ஆணையாளரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பரீட்சை ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட 12 பேரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வாக்குமூலங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

சாதாரண தரப் பரீட்சையின் கணிதம் மற்றும் விஞ்ஞானம் பாட வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும்; ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ந-11)

# திஸ்ஸ வாவியில் படகு விபத்து ஐந்து பேர் சடலமாக மீட்பு

கதிர்காமம் பிரதேசத்தில் உள்ள திஸ்ஸ மகாராம, திஸ்ஸ வாவியில் படகொன்று நேற்று நண்பகல் விபத்துக்குள்ளாகியுள்ளது.

படகோட்டி படகைச் செலுத்திக் கொண்டிருந்தபோது திடீரென அந்தப் படகு கவிழ்ந்துள்ளது.

குறித்த படகில் 21 பேர் பயணித்துள்ளனர். முன்னர் 4 பேர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட போதும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் மேலும் இருவர் காணாமல் போயிருந்தமை தெரியவந்துள்ளது.

காப்பாற்றப்பட்ட சிலர் அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே வாவியில் மூழ்கிய 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. (ந-11)


# கணனி திருத்தம்
(Computer Repair)
உங்கள் கணனிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள்.
0779086737
GUNAA BEST PC
52, Hospital Road,Jaffna.
(1317)







# மன்னாரில் வெள்ளப்பெருக்கு

மன்னார் மாவட்டத்தில் மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக அதனை அண்டிய இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கோரியுள்ளது.

இதன்படி, ஏற்படும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்படக்கூடிய மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தம்பணைக்குளம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை ஆகிய கிராமங்களின் மக்களுக்கே அரசாங்க அதிபர் ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.மொஹமட் ரியாஸ் இது குறித்து உறுதிப்படுத்தியுள்ளார். (ந-11)

# இளைஞர்கள் இருவர் விபத்தில் பலி

பண்டாரகம -ஹொரண பிரதான வீதியின் வித்தியாகம பாடசாலைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஹொரணயில் இருந்து பண்டாரகம நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் எதிர்த் திசையில் பயணித்த வானும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இவ் விபத்து நேற்று முன்தினமிரவு 11.20 அளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 20 மற்றும் 19 வயதுடைய இரு இளைஞர்கள் பலியாகினர்.

வானின் சாரதியை கைது செய்து பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

# முத்துமணி காமன்ஸ் திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இளைஞர்களின் உள்ளூர் வேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு திசைகாட்டி நிறுவனத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள முத்துமணி காமன்ஸ் ஆடைத் தொழிலக சம்பிரதாயபூர்வ திறப்பு விழாவும் திசைகாட்டி குழுமத் தலைவர் சின்னத்துரை செல்வராசாவின் பதவியேற்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்த திசைகாட்டி குழும தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)


# தேவை

திறமையுள்ள தொழிலற்ற உங்களுக்கு கப்பலில் வேலை செய்ய அரிய சந்தர்ப்பம். (தனியார்) நவீன கப்பல் புனர்நிர்மாண வேலைகளான பெயின்டர், தச்சு வெல்டிங், சாதாரண ஊழியர்கள் ஆண், பெண் மற்றும் கட்டட நிர்மாண துறையில் மேசன், தச்சு, செடலின் பாய், பெயின்டர் கையுதவியாளர்கள் விரைவில் தேவை. வயது 18-50 சம்பளம் 18000/- 45000/- கல்வியுள்ள/ அற்ற இருபாலாரும் இச்சேவையை பெறலாம்.

0775997579

(சி-1875)


# மரண அறிவித்தல்

## இராசையா குணசேகரம் (செல்வம்)



குருசுமதவடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா குணசேகரம் அவர்கள் 15.12.2012 அன்று பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா, செல்லம்மா இராசையா ஆகியோரின் அன்புப் புதல்வனும், சுசீலாவின் அன்புக் கணவரும், கஜன், பிரதீப், தினேஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும், இராஜமலர் (மலர்), ரஞ்சிதமலர் (லாலா), சந்திரசேகரம் (மாம்பழம்), சின்னமலர் (கிளி), பொன்மலர் (வவி), ஞானசேகரம் (தயா), நேசமலர் (ராஜினி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மைத்துனிமார், மைத்துனன்மார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், மருமக்களின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24.12.2012 திங்கட்கிழமை அன்று பிரான்சில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்பதையும் ஆனைக்கோட்டையில் தாயாரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்பதையும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

குருசுமதவடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
T.P.: 0776544464

(1316)



# ஈழத்து சிதம்பரத்தில் திருவெம்பாவை காண வாரீர்...

**சிதம்பர தரிசனம்**

**எழுந்தோடி எல்லோரையும் அழைத்திங்கே வாடி**

ஆதிரையான் பெருமைகளை ஆரறிவார் தோழி
அரவணிந்தோன் புகழ்பாட யார்வருவார் தோழி
மாதவளை பாகம் வைத்தோன் மகிமைதனை சொல்ல
மண்ணகத்தான் விண்ணகத்தான் புதுமைதனை பேச
தீக்கரத்தான் புலியுடையான் செம்மைநலம் காண
திருச்சடையில் கங்கைதனை வைத்தவனைக் காண
ஈழத்து சிதம்பரத்தில் மார்கழி தரிசனத்தைக் காண
எழுந்தோடி எல்லோரையும் அழைத்திங்கே வாடி.

- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

ஈழத்து சிதம்பரத்தில் இன்று (23.12.2012) ஞாயிற்றுக்கிழமை 05ஆம் நாள் உற்சவம்

(C.18E3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியசாயி நிலையத்தின் நத்தார் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நத்தார் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மேற்படி நிலையத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் மெழுகுவர்த்தி ஏற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் யேசுநாதர் பற்றிய பஜனைப் பாடல்கள், நத்தார் பாப்பா வருகை, பாலவிகாஷ் மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் நத்தார் கீதங்கள் ஆகியன இடம்பெறவுள் ளன.

மேலும் அன்புடன் கூடிய சேவை எனும் பொருளில் புனித திருக்குடும்ப சபை அருட்சகோதரி பொஸ்கோ ஜேகப்பின் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (ந-9)

# 45 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உதவிகள் வழங்கப்பட்டன

## நிப்பொன் கல்வி, கலாசார நிலைய ஏற்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 45 பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை நிப்பொன் கல்வி, கலாசார நிலையம் நேற்றையதினம் கற்றல் உபகரணங்கள் மற்றும் வங்கிப் புத்தகங்கள் என்பவற்றினை வழங்கியது.

ஜப்பான் நாட்டு மக்களின் நிதியுதவியுடன் இலங்கை நிப்பொன் நிலையம் யாழ்.பொது நூலகத்தில் வைத்து இந்த உதவிகளை வழங்கியது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் இந்த உதவித் திட்டத்தில் அதிகளவில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு எதிர்காலத்திலும் இவ்வாறான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் நிப்பொன் நிலையத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உதவிகளை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

# இராசி பலன்

23.12.2012
(மார்கழி 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.26 மணிக்கு
ஏகாதசி முழுவதும்
அச்சுவினி மாலை 6.03 மணிவரை
இராகுகாலம் 4.56-6.26 மணிவரை
சுபநேரம் 9.26-10.56 மணிவரை
ஸ்மார்த்த ஏகாதசி விரதம்.

**மேடம்** கனவு பலிதமுண்டு, நண்பர்கள் உதவியுண்டு, சயன சுகம் கிடைக்கும், பெரியவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**இடபம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலப் பயணம் ஒன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செய்தியொன்றை செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், பெருமையான நாள்.

**கடகம்** உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிங்கம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர் சந்திப்புண்டு, பயணத்தால் பலனுண்டு.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கும், வெளியூர் பயணங்களின் போது விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.

**துலாம்** சுற்றத்தார் வருகையுண்டு, பயணங்களால் ஆதாயமுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான சூழ்நிலைகள் ஏற்படலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**விருச்சிகம்** மனக்குழப்பம் அகலும், சுவாரஸ்யமான நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், திட்டமிட்ட காரியங்களை நிறைவேற்றுவீர்கள், போசன நன்மையுண்டு.

**தனுசு** வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும், பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சி கருதி புதிய சிந்தனைகள் உருவாகும், தாய் வழியில் ஆதரவு பெருகும், ரோக பயமுண்டு.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், அந்நியர் சந்திப்புண்டு, கௌரவமான நாள், உறவினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், பொதுநல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் ஏற்படும்.

வளவன்

# கட்டாக்காலி மாடுகள் விவசாய சம்மேளனத்திடம்

கோப்பாய் பிரதேசத்தில் வயல் காணிகளில் உள்ள நெற்பயிர்களை மேய்ந்த கட்டாக்காலி மாடுகள் இரண்டை கோப்பாய் மத்தி விவசாய சம்மேளனத்திடம் சம்பந்தப்பட்ட வயல் காணி உரிமையாளர்கள் ஒப்படைத்துள்ளனர்.

இம்மாடுகளை நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமைக்குமுன்னர் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு சம்மே ளனத்தின் தலைவர் மு.சண்முகலிங்கன் அறிவித்துள்ளார்.

இவ்வாறு கோப்பாய் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக திரியும் மாடுகளால் தமது வாழ்வாதார தொழிலான நெற்பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதாக நெற் செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்[illegible]

இவ்வாறு கட்டாக்[illegible] திரியும் களை பிடித்து கோ[illegible]த்தி விவ சம்மேளனத்திடம் ஒப்ப[illegible]குமாறு [illegible] பாய் மத்தி விவசாய சம்[illegible]ளனத் தலை[illegible] அறிவித்துள்ளார். (அ-3-[illegible]4)

## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

உசன் கந்தசாமி கோவில் வீதி புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

உசன் சந்தியில் இருந்து உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் வரையான பகுதி பெரும் குழிகள் நிறைந்து காணப்படுவதால் மழைநீர் தேங்கி நின்று பாடசாலை மாணவர்களது சீருடைகளை அழுக் காக்குவதுடன் போக்குவரத்திற்கு பெரும் சிரமத்தையும் ஏற்படுத்துகின்றது.

எனவே, இவ்வீதியை உடனடியாக புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-3-29)

## மகளிருக்கான தையல் பயிற்சி

(நல்லூர்)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தினால் மகளிருக்கான இலவச தையல் பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் மகளிர் மாதிரி விண்ணப்ப படிவம் ஒன்றினை தயாரித்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாரதி மன்ற சனசமூக நிலையம், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிலையத்தின் செயலாளர் நா.சிவசம்பு அறிவித்துள்ளார். (ந-3-134)

# வாரம் ஒரு தகவல்

## எங்கே இருக்கிறது குறை?

ஆசிரியர் ஒருவர் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தார். மாணவர்கள் அனைவரும் சலித்துப்போய் வகுப்பில் அமர்ந்திருந்து விடயத்தை அவதானித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், ஆசிரியர் சொல்லிக்கொடுப்பது எதுவுமே மாணவர்களுக்கு விளங்கவில்லை.

வகுப்பு எப்போது முடியும் என்பதே இவர்களின் கனவாக இருந்தது.

பாடம் கற்பித்து முடிந்ததும் கேள்வி கேட்கப்படும் நேரம் வந்தது. அந்த வகையில் ஆசிரியர் சில கேள்விகளைக் கேட்டார். மாணவர்களுக்குப் பதில் தெரியவில்லை.

பதிலளிக்காத மாணவர்களை ஆசிரியர் மிரட்டியதால் அவர்கள் பரிதாபமாக நின்று கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் இவற்றையெல்லாம் பெரியவர் ஒருவர் கவனித்து வைத்துவிட்டு ஆசிரியருக் கருகில் சென்றார்.

ஆசிரியரே! இன்று மாலை எங்கள் வீட்டுக்கு வாருங்கள் என்று அழைத்தார். ஆசிரியரும் அன்றையதினம் மாலை பெரியவரின் அழைப்பை ஏற்று வீட்டிற்கு சென்றார்.

அந்த நேரத்தில் பெரியவர் கையில் மீனெண்ணெய் போத்தலும் அவருக் கருகில் அவர் வளர்க்கும் நாயும் காணப்பட்டது.

"ஆசிரியரே! மீனெண்ணெய், நாய்களுக்கு நல்லது என்று கேள்விப்பட்டேன். இதை அந்த நாய்க்கு ஊட்டுவதற்கு உதவுங்கள் என்று கேட்டார்.

ஆசிரியர் நாயைப்பிடித்து தம் கால்களுக்கிடையில் நிறுத்தி நாயின் தலையைப் பற்றி உயர்த்தி வாயைத் திறந்து எண்ணெய்ப்போத்தலைக் கவிழ்த்தார். அந்தநேரம் நாய் திமிறியது.

எண்ணெய் முழுவதும் தரையில் ஊற்றப்பட்டு விட்டது. நாய் உடனே தரையில் ஊற்றப்பட்ட எண்ணெயை நக்கியது.

ஆசிரியர் வியப்போடு அவதானித்துவிட்டு அந்தப்பெரியவர் ஆசிரியரைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்போதுதான் ஆசிரியருக்கு தான் என்ன செய்தார் என்பது புரிந்தது.

நாய்க்கு எண்ணெய் பிடித்திருக்கிறது. ஆனால், எண்ணெயை ஊட்டிய முறைதான் பிடிக்கவில்லை என்பதை புரிந்துகொண்டார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 140 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-100 | 100 |
| பச்சைமிளகாய் | 260 | 200 | 300 |
| தக்காளி | 100 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 60-65 | 60 | 80 |
| கரட் | 100 | 80 | 140 |
| பூசணி | 35 | 30 | 60 |
| புடோல் | 40-50 | 60 | 80 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 115 | 120 | 160 |
| பாகற்காய் | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 70 |
| பயற்றங்காய் | 80 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 110 | 140 |
| பீற்றூட் | -- | 100 | 120 |
| கறிமிளகாய் | -- | 200 | 200 |
| முருங்கைக்காய் | 170 | 140 | 200 |
| போஞ்சி | -- | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 25 |
| தேசிக்காய் | 50 | 90 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 30-35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 ஆம் ஆண்டுக்கான புதிய பயிற்சிநெறிகள்

(துனங்கிளப்பு)


தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தினால் 2013 ஆம் ஆண்டுக்கான புதிய பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் தையல், அழகுக்கலை, கணனி (CAA), ஹாட்வெயர் ஆகிய பயிற்சிநெறிகள் 6 மாத பயிற்சிகளாகவும் கணனி MS Office, ஆங்கிலம், சிங்களம் ஆகியவை 3 மாதப் பயிற்சிகளாகவும் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிநெறிக்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 16 வயது தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்ட அனைத்து இளைஞர், யுவதிகளும் விண்ணப்பிக்க முடியும்.

இப்பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி வரை பயிற்சி நிலையம் அமைந்துள்ள கைதடி நுணாவில் அறவழி கட்டடத்தில் காலை 9 மணி தொடக்கம் பி.ப.2 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா அறிவித்துள்ளார்.


மேலதிக தகவல்களை 077 2247902 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.(அ-3-37)




# தனியார் காணிகளுக்கு நட்டஈடு வழங்கப்படும்

## யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி உறுதி







(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் காணிகளை அடாத்தாக இராணுவம் ஒருபோதும் பறிமுதல் செய்யாது. பாதுகாப்புக் கருதி படைமுகாம் அமைக்கப்படவேண்டிய இடங்களில்தான் இராணுவம் முகாம் அமைத்து வருகிறது.

அது தனியாருடைய காணியாகவிருந்தால் அதற்கான நட்டஈட்டை வழங்கியே பெற்றுக்கொள்ளும் என யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அல்லாரை கிராமசேவையாளர் (இராமாவில் முகாம் பகுதி பிரிவில் 60 ஏக்கர் காணியை இராணுவத்தினர் நேற்று முன்தினம் விடுவித்ததோடு 45 குடும்பங்களுக்கான காணி உறுதிகளையும் வழங்கினர்.

இந்தக்காணிகளை அதன் உரிமையாளர்களிடம் வழங்கும் நிகழ்வு இராமாவில் முகாம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு காணி உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக அவர்களது காணிகளுக்கான ஆவணங்களை வழங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக பல அழிவுகளை எதிர்கொண்ட இந்தப் பிரதேசம் அதன் உரிமையாளர்களிடம் இப்போது கையளிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டினுள் சுமார் 16 வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதியிருந்ததோடு பயிற்சி முகாமாகவும் பயன்படுத்தப்பட்டது.

பின்னர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட இந்தப்பிரதேசம் தற்போது கையளிக்கப்படுகின்றபோது இந்தப்பகுதி மக்கள் இவ்வளவுகாலம் அனுபவித்த துன்பத்தை யாராலும் மறக்கவும் முடியாது. அத்தோடு இழந்த மகிழ்ச்சியையும் பெற்றுக்கொடுக்கவும் முடியாது.

யார் யுத்தம் செய்தாலும் அதில் யார் வெற்றிபெற்றாலும் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கமுடியாது. அத்தோடு யுத்தத்தை யார் முடிவுக்கு கொண்டு வந்தாலும் நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டாலும் அது எல்லோருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

யுத்தத்தில் இழந்தவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால், எதிர்காலத்தில் பலவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். யுத்தம் இடம்பெற்றபோது பல்வேறு பிரச்சினைகளை மக்கள் எதிர்கொண்டனர்.

அதன் விளைவாக இன்னும் பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாதுள்ளனர். இருப்பினும் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானம் எல்லோரும் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

போர் இடம்பெற்ற காலகட்டத்தில் பொது மக்களின் காணிகளை முகாம் அமைப்பதற்காக பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், அந்த சூழ்நிலை தற்போது முற்றாக மாற்றப்பட்டு விட்டது. இராணுவத்தினர் படைமுகாம் அமைப்பதற்காக எடுத்துக்கொண்ட காணிகளை விடுவித்து வருகின்றனர்.

அத்தோடு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியாக நான் பொறுப்பேற்றபோது சுமார் 26 ஆயிரம் இராணுவத்தினர் இங்கு நிலை கொண்டிருந்தனர். தற்போது 15 ஆயிரத்து 100 இராணுவத்தினர்தான் இங்குள்ளனர்.

இருப்பினும் சில அரசியல்வாதிகள் பொய்யான தகவல்களைப் பரப்பி மக்களைக் குழப்பி வருகின்றனர். இராணுவம் யாரிடமிருந்தும் காணிகளைப் பறித்தெடுப்பதில்லை. அரச காணிகளையே அதிகளவில் படைமுகாம் அமைக்கப் பயன்படுத்துகின்றோம். சில இடங்களில் தனியார் காணிகள் படைமுகாம் அமைக்க பயன்படுத்தப்பட்டாலும் அந்தக் காணிகளுக்கான நட்டஈட்டை அதன் உரிமையாளர்களிடம் வழங்கியே பெற்றுக் கொள்கின்றோம்.

பொதுமக்களின் பாதுகாப்பிற்காகவே இந்தப் படைமுகாம்கள் அமைக்கப்படுகின்றன. இருப்பினும் படைமுகாம்களின் எண்ணிக்கையும் இராணுவத்தினரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு வருகிறது.

மக்களுடைய காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றது. மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்த அவர், விடுவிக்கப்பட்டுள்ள இராமாவில் முகாம் பகுதி மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலர் உறுதியளித்துள்ளார். மிக விரைவில் நிரந்தர வீடுகளும் அமைத்து தரப்படும் எனத் தெரிவித்ததோடு வெளிநாட்டு சக்திகளின் தவறான வழிநடத்தலுக்கு இடமளிக்காதீர்கள் எனவும் கேட்டுக் கொண்டார். (அ-6)




# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 38 ஆவது பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஜனசக்தி முன்றலில் நிலையத் தலைவர் மு.அரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெறவுள்ளதனால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (ந-9)

# காரைநகரில் இயற்கை வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன

## மக்கள் கவலை

(காரைநகர்)

காரைநகரில் பெருமளவான இயற்கை வளங்கள் கடந்த வாரம் முதல் அழிக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு அலங்கரிப்பதற்காக இயற்கை வளங்களாக காணப்படும் சவுக்கு மரங்கள் எவரது அனுமதியும் இன்றி கண்டபடி வெட்டப்பட்டு வருகின்றன.

காரைநகர் வலந்தலை சந்தியில் அமைந்துள்ள காணிகள் மற்றும் கடற்கரையோரம் உள்ள காணிகளிலும் சவுக்கு மரங்கள் வெட்டப்படுகின்றன.

இவ்வாறு வெட்டப்படும் சவுக்கு மரங்கள் உழவு இயந்திரங்கள் மூலம் காரைநகருக்கு வெளியே கொண்டு செல்லப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் கடற்கரையோரங்களில் மணல் அகழ்வுகளும் இடம்பெற்று வருவதுடன் இரவு வேளைகளில் பனை மரங்கள் தறிக்கப்பட்டு காரைநகருக்கு வெளியே கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக அரச அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்காதுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காரைநகர், அறுகம்புலம், கோவளம் ஆகிய பிரதேசங்களில் ஆட்கள் இல்லாத வீடுகளில் யன்னல்கள் உடைக்கப்பட்டு பழைய இரும்புகளுக்காக விற்கப்பட்டு வருகின்றன.

பகல் நேரங்களில் ஆட்கள் நடமாட்டம் இல்லாததை அவதானித்து இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனையும் உரிய அதிகாரிகள் கவனத்திற்கொண்டு பழைய இரும்பு விற்பனையாளர்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பணிப் பெண்களை அதிகம் எதிர்பார்க்கின்றோம்

## சிங்கப்பூர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சங்கம் அறிவிப்பு

வீட்டு வேலை வாய்ப்புக்கென அதிக இலங்கை பணிப் பெண்களை எதிர்பார்ப்பதாக சிங்கப்பூர் அறிவித்துள்ளது.

அடுத்த வருடம் தொடக்கம் 100, 200 மாத வேலை அடிப்படையில் 500 தொடக்கம் ஆயிரம் இலங்கைப் பணிப் பெண்களை இணைத்துக் கொள்ளவுள்ளதாக சிங்கப்பூர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சங்கம் அறிவித்துள்ளது.

சிங்கப்பூரில் தற்போது 4ஆயிரத்து 500 இலங்கை பணிப்பெண்கள் இருப்பதாக [illegible]குள்ள இலங்கை உயர்ஸ்தானிகரக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பணிப் பெண்களின் வசதிகள் , தேவைகள் குறித்து அடுத்த மாதம் இலங்கையுடன் சிங்கப்பூர் ஒப்பந்தம் ஒன்றில் [illegible] சாத்திடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பணிப்பெண்கள் சிங்கப்பூரில் சிறந்த சேவையை செய்து வருவதால் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் செல்லும் அநேக இலங்கைப் பணிப் பெண்கள் நன்கு ஆங்கிலம் பேசவதுடன் 10 வருட கல்வி அநுபவத்தைகொண்டிருப்பதோடு 40வீத மாணவர்கள் உயர்தரம் கற்றவர்கள் எனவும் சிங்கப்பூர் தெரிவித்துள்ளது. (ந-2)

# இரத்த சுத்திகரிப்பு பிரிவு இயங்காது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் இரத்த சுத்திகரிப்பு பிரிவு (Dialysis Unit) நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை அப்பிரிவில் அவசர திருத்த வேலை செய்யப்படவுள்ளதால் இப்பிரிவு இயங்கமாட்டாது என வைத்தியசாலைப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(அ-9)

# தாக்குதல் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்

(யாழப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேசத்தில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறான வன்முறை சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு, அளவெட்டி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் கடந்த வியாழக்கிழமை இரவுவேளை இவ்வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இச்சம்பவங்கள் தொடர்பாக தெரிய வருவதாவது,

பண்டத்தரிப்பு பகுதியில் கோவில் ஒன்றில் நின்றுகொண்டிருந்த இளைஞர்களுடன் அங்கு மதுபோதையில் வந்த கும்பல் ஒன்று தகராறில் ஈடுபட்டு அங்கிருந்த இளைஞர்களை தாக்கியுள்ளனர்.

இதில் அதேயிடத்தை சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதேவேளை அன்றையதினம் அளவெட்டி பகுதியில் 26 வயதுடைய இளைஞன் ஒருவரை ஹயஸ் வாகனத்தில் வந்த கும்பல் தாக்கியபின் கடத்திச் சென்று கம்பிகளால் தலையிலும் உடலின் பாகங்களிலும் தாக்கியுள்ளனர்.

இதனால் தலையில் படுகாயமடைந்த இளைஞன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இதேவேளை இவ்விளைஞனை காப்பாற்ற சென்றவர்களும் தாக்குதலுக்குள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நெல்லியடிப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் மேலுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த சில காலங்களாக யாழ்ப்பாண பிரதேசத்தில் சினிமாப் பாணியிலான தாக்குதல் சம்பவங்கள் சில கோமாளிகளால் அரங்கேற்றப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன
MACK POWER
கிர்லோஸ்கார் மின்சார பிறப்பாக்கி

- குறைந்த பட்ச செலவு
- இலகுவான பராமரித்தல்
- விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்
(731)
ரூ.595,000 இலிருந்து
- சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
- சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
- US Tire 1/11 வெளியேற்றல் நியமத்தின் பிரகாரம்
071-4269470
077-7563453
மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10. ஞானார்த்த பிரதீப மாவத்தை. கொழும்பு - 08.
தொலைபேசி : 011-2691186 தொலைநகல் : 011-2699454
மின்னஞ்சல் : me@mackwoods.com
இணையம் : www.mackwoodsenergy.com
(1167)
KIRLOSKAR GREEN POWER IDEAS

கரீனாவின் அழகிய சருமத்தின் இரகசியம் ....
ஆன் பிரேஞ்ஸ்
கெயார் ரிமூவர் கிறீம்
- சருமத்திலுள்ள தேவையற்ற உரோமங்களை மிகவும் இலகுவாக Anne French மூலம் அகற்ற முடியும்.
- Anne French கிரீமில் அடங்கியுள்ள விட்டமின் E ஆனது சருமத்திற்கு போஷணையனித்து பாதுகாப்பதுடன் அனைத்து விதசருமத்திற்கும் உகந்தது.
- ரோஜா, மஞ்சள், சந்தனம், லெமன் மற்றும் ப்ளோல் சாற்றினை கொண்ட 5 வாசனைகளில் Anne French கிரீமை பெற்றுக் கொள்ள முடியும்.

சர்மத்தில் காணப்படும் அனாவசியமான ரோமங்களை நீங்க நான் ஆன் பிரெஞ்ஸ் ஐ தினமும் பாவிக்கின்றேன். இதனை பாவிப்பது மிகச் சுலபம் அதேவேளை சிறந்த பலனை தருகின்றது....
Kareena Kapoor


0771 062 566

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 (கோவியர்)<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 17 3/4, 4இல் செ<br>உயரம்: 5' 7"<br>தொழில்/ தகைமை :A/L, Manager<br>அமெரிக்கா<br>தொ. இல : B - 828 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 1<br>உயரம்: 5'<br>கி.பா: 10 1/4<br>தொழில்/ தகைமை: A/L<br>தொ. இல : G - 832 |
| பிறப்பு: 1980 R.C (குருகுலம்)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>உயரம்: 5' 6"<br>கி.பா : 88 1/4, 7இல் செவ்<br>தொழில்/ தகைமை : MBBS Doctor<br>தொ. இல : B - 831 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>உயரம்: 164 செ. மீ<br>கி.பா: 52 3/4, 7இல் செவ்<br>தொழில்/ தகைமை: MBBS Doctor<br>தொ. இல : G - 835 |
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5' 6"<br>கி.பா: 8 1/4<br>தொழில்/ தகைமை: BSc (U.K PR)<br>எ.பா: சைவபோசனம்<br>தொ. இல : B - 833 | பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 5'<br>கி.பா: 02<br>தொழில்/ தகைமை: A/L, ஆசிரியை<br>(விவாகரத்தானவர்)<br>தொ. இல : G - 838 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>உயரம்: 5' 6"<br>கி.பா: 26 3/4<br>தொழில்/ தகைமை: BSc, Engineer (MIT)<br>தொ. இல : B - 834 | பிறப்பு: 1982 இந்து (கோவியர்)<br>நட்சத்திரம்: பரணி 2<br>உயரம்: 5'<br>கி.பா: 16 1/4<br>தொழில்/ தகைமை: A/L, கணனி இயக்குனர்<br>தொ. இல : G -841 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறைக்கும் நிறைவேற்று துறைக்கும் இடையில் முறுகல்

## த ஹிந்து சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கையில் நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையிலான முறுகல் களம் அமைக்கப்பட்டு விட்டதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.**

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் மீதான குற்றவியல் பிரேரணை தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை விசாரணை செய்ய அதிகாரம் உள்ளதாக இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையின் சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் மற்றும் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் 11 பேருக்கும் அழைப்பாணையும் அனுப்பியுள்ளது.

இலங்கையின் அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்றத்துக்கு நீதிமன்றம் உத்தரவிடமுடியாது. இதனை கடந்த நாடாளுமன்ற அமர்வுகளின் போது இலங்கையின் சபாநாயகர் உட்பட்ட எதிர்க்கட்சிகளும் வலியுறுத்தி வந்தன.

இந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம், இலங்கையின் அதியுயர் சபையான நாடாளுமன்றத்துக்கு உத்தரவிட்டுள்ளமை நீதித்துறையில் பாரிய பதற்ற நிலையை தோற்றுவித்துள்ளது.

தமக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கைக்கு இடைக்கால தடையுத்தரவு கோரி கடந்த வாரத்தில் பிரதம நீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதனை நேற்று முன்தினம் விசாரணை செய்த நீதிமன்றம் இந்த சர்ச்சைக்குரிய உத்தரவை பிறப்பித்துள்ளது. ஏற்கனவே பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விலக்கிக் கொள்ளப்படாவிட்டால் புதிதாக நியமிக்கப்படும் பிரதம நீதியரசரை வரவேற்கப் போவதில்லை என்று இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அத்துடன் பிரதம நீதியரசருக்கு எதிராக சாட்சியமளித்த அரசாங்கத்தின் சார்பான நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனவுடன் வழக்குகளில் பிரசன்னமாக நீதியரசர்கள் மறுத்தமையால் அண்மையில் பல வழக்குகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

இதற்கு பதிலாக நீதி சேவைகள் சம்மேளத்தின் வருடாந்த நிகழ்வுக்கு அரசாங்கம் தமது அனுசரணையை வழங்க மறுத்துள்ளது.

எனவே, இலங்கையில் நீதிச்சேவைக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும் இடையிலான போட்டி பாரிய பிரச்சினையை உண்டு பண்ணப்போகிறது என்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## கொங்கிறீற் பாதைகளின் தரத்தை ஆராய்தல்

(நுவரெலியா)

கொங்கிறீற் பாதைகளின் தரத்தை ஆராய்வதற்கான புதிய வேலைத்திட்டம் ஒன்று நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட செயலாளர் பி.பி.ஜே.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

கொங்கிறீற் பாதைகள் தொடர்பான தரநிலைகளை ஆராய்வதற்கான விசேட இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான தர நிலை சோதனைகளுக்கு இவ் வீதிகளின் ஒப்பந்தகாரர் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-11)

# வீதி விபத்தது காரணமாக போக்குவரத்து நெரிசல்

## சாரதிகளும் கருத்து முரண்பாடு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு வாகனங்கள் சேதத்திற்குள்ளாகியதோடு ஒரு மணி நேரம் வரையில் போக்குவரத்து நெரிசலும் காணப்பட்டது. குறித்த விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழ்.-பருத்தித்துறை பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தும் ஹயஸ் வாகனம் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

யாழில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த ஹயஸ் வாகனம் குறித்த பெற்றோல் நிரப்பு நிலையத்தை நோக்கி திருப்பும் போது பின்னால் வந்த தனியார் பேருந்து ஹயஸ் வாகனத்தை மோதியுள்ளது. இவ் விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படாதபோதிலும் இரு சாரதிகளின் கருத்து முரண்பாட்டினால் விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து வாகன[illegible] எடுக்கப்படாமையால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ந-4)

# சபையின் அதிகாரங்களுக்கு சவால் விடுக்க முடியாது

## அநுர பிரியதர்சன யாப்பா

நாடாளுமன்றின் அதிகாரங்களுக்கு எவராலும் சவால் விடுக்க முடியாது என அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் அதிகாரங்கள் குறித்த உரிமைகளுக்கு எவரும் சவால் விடுக்க முடியாது. நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

நாடாளுமன்ற செயற்பாடுகளில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியும் என நான் கருதவில்லை. அரசியலமைப்பின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டும்.

இந்த விடயம் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நீதிமன்ற அழைப்பாணை குறித்து கருத்து வெளியிடுவது பொருத்தமாகாது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மஹரகமவில் 30 வயது பெண் கழுத்து வெட்டிக் கொலை

### கணவன் தலைமறைவு

மஹரகம-பிலியந்தல வீதி பிரதேச கூலி வீடொன்றில் வசித்து வந்த 30 வயது பெண் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை 8.15 அளவில் இந்த கொலை இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த பெண் தாயுடன் வசித்து வந்ததாகவும் அவரது கணவர் கடந்த சில காலங்களுக்கு முன் வீட்டை விட்டு வெளியேறி நேற்றுமுன்தினமே வீட்டிற்கு வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய தினம் வீட்டுக்கு வந்த நபர் பெண்ணின் தாயுடன் சண்டை போட்டுக் கொண்டதை அயலவர்கள் அவதானித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இரவு வேலை முடித்து விட்டு பெண் நேற்று காலை வீட்டுக்குச் சென்ற போது தாய் வேலைக்கு சென்று விட்டார். அந்த நேரம் பார்த்து வீட்டுக்கு வந்த கணவர் பெண்ணுடன் மோதலில் ஈடுபட்டுள்ளார். அதன் போது அயலவர்கள் பெண்ணின் தாய்க்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துள்ளனர்.

தாய் உடனடியாக வீட்டில் வந்து பார்த்த போது மகள் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டு காணப்பட்டதை அடுத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபரை கைது செய்ய மஹரகம பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# புலிப்பிரிகேடியர்களா மாணவர்கள்? அவர்களுக்கு ஏன் புனர்வாழ்வு!

## சிறிதரன் எம்.பி. காட்டம்

(யாழ்ப்பாணம்)

எதையும் எதிர்பார்க்காமல் எம் இனத்தின் விடுதலைக்காக உயிர் நீத்தவர்களுக்கு நாம் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்பட வேண்டும். எமக்குள் பல கருத்து முரண்பாடுகள் காணப்பட்டாலும் எம் மக்களின் உரிமைக்காக நாம் ஒற்றுமையாக போராட வேண்டியவர்களாக உள்ளோம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கோப்பாய் கோமகன் அமரர் கு.வன்னியசிங்கத்தின் உருவச்சிலை திறப்பு விழா நேற்றைய தினம் நீர்வேலி வாழைக்குலை உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தற்போது நாம் மிக நெருக்கடியான காலப்பகுதிக்குள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். ஆயிரக்கணக்கான இளம் குருத்துக்களினை பறி கொடுத்து உள்ளோம். ஆயிரக்கணக்கான உறவுகளினை இழந்து தவிக்கின்றோம்.

இழந்த உறவுகளினை இன்று நினைவு கூர முடியாத நிலை காணப்படுகின்றது. ஆனால், இன்று ஆயுத ரீதியிலான போராட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்குமானால் இவ்வாறான நினைவு நிகழ்வுகள் பெருவிழா எடுத்துக் கொண்டாடப்பட் இருக்கும்.

இறந்து போன சகோதரர்களை தம்முடைய தாய், தந்தையரை நினைவு கூர்ந்து விளக்கு ஏற்றிய பல்கலை.மாணவர்களை இராணுவம் கைது செய்துள்ளது. பல்கலையில் அடாவடி புரிந்து உள்நுழைந்து மாணவர்களினை விளக்கேற்றத் தூண்டியதும் இந்த இராணுவம் தான். மேலும் பல்கலைக்கழகங்களில் இரண்டு மாணவர்களை புலிகளின் பிரிகேடியர்கள் எனப் பொய் கூறி வன்முறை செய்ததாக குற்றம் சாட்டியதும் இதே இராணுவம் தான்.

பட்டம் பெறுகின்ற மாணவர்களுக்கு புனர்வாழ்வு என்று கூறுகின்றனர். இனிவரும் நாட்களில் யார் யாருக்கெல்லாம் இந்த இராணுவம் புனர்வாழ்வு அளிக்கப் போகின்றதோ தெரியவில்லை. இராணுவம் எங்களுடைய பெண்களை களங்கப்படுத்துகின்றனர். அவற்றையெல்லாம் நாம் கைதட்டி வேடிக்கை பார்க்கின்றோம்.

அதற்கு எதிராக குரல் கொடுத்த என்னை 4 ஆம் மாடிக்கு அழைத்து விசாரணை செய்தார்கள். இராணுவத்திற்கும் இந்த அரசிற்கும் நான் ஒன்று கூறுகின்றேன். உண்மையைச் சொல்வதற்காக நான் எந்த அச்சுறுத்தலுக்கும் அடிபணிய மாட்டேன்.

இந்தியா, அமெரிக்கா எமக்கு உதவும் என்று நாம் எதிர்பார்த்து இருக்கின்றோம். ஆனால், எமக்காக இந்நாடுகள் குரல் கொடுக்கவும் தயாரில்லை. எம் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். எம் மக்களின் உரிமை கொள்கைகளுக்காக நாம் அவர்களை வழி நடத்த வேண்டிய தேவை எமக்கு உண்டு.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவில் முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டு தமிழ்- முஸ்லிம் உறவினையும் சீர்குலைக்கின்றது. இராணுவத்தினரால் எம் மக்கள் வலிகாமத்திற்கு போக முடியாதுள்ளது. சம்பூரிலே மீள்குடியேற முடியாதுள்ளது.

எவ்வளவோ இழப்புக்களின் மத்தியிலும் உயிரிழந்துபே ான அந்த மாவீரர்களையும் அவர்களின் சிதைந்து போன துயிலுமில்லங்களையும் நினைவு கூறி வாக்கு பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவான நாம் எம் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றார். (ந-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக் குளத்தின் 6 வான் கதவுகள் திறப்பு

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் ஆறு வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. குளத்தின் நீர்மட்டம் 30 அடி அளவில் உயர்ந்துள்ளதால் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு ஆறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளது. எனவே இரணைமடுக் குளத்தின் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் ஊரியான், மருதநகர், முரசுமோட்டை, சிவபுரம், நாகேந்திரபுரம், பரந்தன், உடுப்பாற்று, கண்டல், ஐயன் கோயிலடி, தட்டுவன்கொட்டி, புதுக்குளம், பன்னங்கண்டி, கோரக்கன் கட்டு ஆகிய ஊர் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-2)





## வாகனம் விற்பனைக்கு

புதிய மகேந்திரா மக்சிமோர்
வடி விற்பனைக்குண்டு
விபரம் யாவும் நேரில் மட்டும்
0777066487

## ஆசிரியைகள் தேவை

பிரபல ஆங்கில மொழிமூல
தனியார் பாலர் பாடசாலைக்கு
கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி,
பருத்தித்துறை ஆகிய இடங்களில்
கடமை ஆற்றக்கூடிய
ஆசிரியைகள் தேவை.
27.12.12 வியாழக்கிழமை
காலை 9 மணிக்கு நேரில்
வரவும்.
தொடர்புகளுக்கு : 021 222 5796
0777 009653, 0776646357
140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## திறமை, அனுபவம் உண்டு ஆனால் தகைமை இல்லையா ?

அவுஸ்திரேலியா மற்றும் UK
ஆகிய நாடுகளில் உங்கள்
திறமையையும் அனுபவத்தையும்
கொண்டு அங்கீகரிக்கப்பட்ட
தகைமைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்பு 077 301 3060
ICS Study overseas
77, Clock Tower, Jaffna.

சர்வதேச ரீதியில் அங்கீகரிகப்பட்ட
British பல்கலைக்கழகத்தின்
பட்ட படிப்பு மற்றும்
MBA படிப்புக்கள் இப்பொழுது
இணையத்தில்
Finance, Accounting, Marketing,
Computing, Managment / Business
மேலதிக தொடர்புகளுக்கு 077 301 3060
ICS Study overseas
77, Clock Tower, Jaffna.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurijaffna@gmail.com

நத்தார் புதுவருட தினத்தை முன்னிட்டு
உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித தபால்கள், பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் CD, Video கள் கடல் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட




Happy New Year!

## திருமுருகன் கொம் நெற்

கட்டணம் 650 ரூபாவில் இருந்து குறைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: எமது பற்றுச் சீட்டுடன் வரும் வாடிக்கையாளர்களுக்கு 5% முதல் 20% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.

வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தை மிக விரைவாக பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master

(எமது யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனம் தற்போது பழைய கடைக்கு முன்பாக ஆல்சிலோனிற்கு அருகாமையில் இயங்குகிறது) தொ.பே: 0212227835

2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு. 06 | இல. 208, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | இல.18, பிரதான வீதி, நெல்லியடி

## விற்பனைக்கு

41 SriXXXX தொடரிலக்கம்
உடைய ELF
விற்பனைக்குண்டு.
விலை நேரில்
தொடர்புகளுக்கு:
0779789467
(305)

## வான் விற்பனைக்கு

Toyota Hiace (Dolphin)
Super Custom 59-XXXX
தொடரிலக்கமுடைய வான்
விற்பனைக்கு (Full AC)
தொடர்புகளுக்கு:
0778881247

## புத்தாண்டிற்கான புதிய அலுவலக ஊழியர்கள்

அமெரிக்க கனேடிய அனுசரணையில் சர்வதேசிய தரமிக்க முகாமைத்துவ கற்கை பயிற்சியுடன் எமது நிறுவனத்தின் 20 ஆண்டுகளின் நிறைவையொட்டி புதிய ஆண்டின் புதிய கிளைகளுக்கான தொழில் வாய்ப்பு

- பயிற்சி கிளை : சாவகச்சேரி
- பயிற்சிக் காலம் : 6 மாதம்
- தகைமை O/L, A/L
- பயிற்சியின்போது 8,000 - 10,000 சர்வதேச தரமிக்க சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.
- பயிற்சியின் பின் 35,000- 40,000
- பயிற்சியின் பின் தொழில் இடங்கள், சுயமாக தெரிவு வசதி
- தூர இடத்தவருக்கு தங்குமிட வசதியுண்டு
- எமது பயிற்சியில் சுய தொழில் வாய்ப்பை பெறமுடியும்
- தொடர்பு : 0770308484, 0778920777, 021 7201521

## AUTO A/C

வாகன குளிரூட்டி

றொயாட்டா, மஸ்டா, சுசுக்கி, மிற்சு பிஷி மற்றும் அதிகுளிரூட்டி வாகனங்கள் (Freezer Trucks) போன்ற சகல விதமான வாகனங்களும் மிகச்சிறந்த முறையில் குளிரூட்டிகள் திருத்தம் செய்து தரப்படும்.

எமது ஏனைய சேவைகள்

1. காஸ் நிரப்புதல்
2. திருத்த வேலைகள்
3. குளிரூட்டிகள் மீள் திருத்தம் செய்தல்

அரசாங்க திணைக்கள, தனியார் நிறுவன வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் திருத்தித் தரப்படும். (ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்)

தொடர்புகளுக்கு :
Cool Air Kings
510, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக)
தொ.பே : 0777738888



## சவால்மிக்க எதிர்காலத்தை எதிர்கொள்ள உங்கள் பிள்ளைகள் தயாரா?



முறையான கல்வியின் மூலம் சவால்களை வெல்வோம்

Spoken English
Computer
Technology
Information Technology

ஒரே பாடநெறியில் அனைத்தும்

IDFP
INTERNATIONAL DEGREE FOUNDATION PROGRAMME

ஆங்கிலம் + சிங்களம் + தொழில்நுட்பம் + தகவல் தொழில் நுட்பம் உடன்
Personality Development, Leadership Training & Communication Skills

குறுகிய காலத்தில் முழுநேரம் / பகுதிநேர அடிப்படையில் தொழில் தகைமை அல்லது சர்வதேச பட்டப்படிப்பிற்கான கல்வித் தகைமையை வழங்கும் (பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ISO சான்றிதழ் வழங்கப்படும்)

தலைநகரின் பிரபல தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவமிக்க ஆசிரியர் குழாமின் முழுநேர வழிகாட்டலில்...

முதல் 25 மாணவர்களுக்கு
கணினி ஒன்று இலவசம்

**Dip In English**
- நவீன Audio & Video Visual தொழில் நுட்பத்துடனான Work Room Based Prictical English.
- Listening - Speaking - Writing - Reading ஒவ்வொரு பிரிவும் தனித்தனி ஆசிரியர்களால் நடாத்தப்படும்.

**Spoken Sinhala**

**Computer Studies**
- MS Office
- Graphic Designing
- Web Designing
- Net Work Administration
- Software Technology
- Hard ware Engineering
- Internet & E-mail

**Information Technology**

**Technology**
- Lab Electrical Wiring

மேலதிக விபரங்களுக்கு :
021 222 4728, 0777444225
IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூட்டிங்கில் அஜித்துக்கு காயம்

விஷ்ணுவர்தன் இயக்கத்தில் அஜித்குமார் நடித்துவரும் படத்தில் சமீபத்தில் படப்பிடிப்பின் போது அவருடைய காலில் முறிவு ஏற்பட்டது. இதற்கான வீடியோவை தற்போது படக்குழுவினர் யூடியூப்பில் வெளியிட்டுள்ளனர். இன்னும் பெயர் வைக்கப்படாத இந்த படத்தில் அஜித்துடன் நயன்தாரா, ஆர்யா, டாப்ஸி, விதார்த் என முக்கிய நட்சத்திரங்கள் இணைந்து நடிக்கின்றனர்.

மும்பை, கர்நாடகா என படப்பிடிப்புகள் நடந்துவரும் நிலையில் சமீபத்தில் இந்த விபத்து ஏற்பட்டது. உடனே அதற்குரிய முதலுதவி சிகிச்சைகள் கொடுக்கப்பட்டாலும் மீண்டும் அறுவை சிகிச்சை செய்யுமளவுக்கு இந்த காயம் ஏற்பட்டிருப்பதாக அஜித்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தனர்.

## இயக்குநரைத் தாக்கிய சார்மி

பாலியல் தொந்தரவு கொடுத்த இயக்குநரை நடிகை ஷார்மி கன்னத்தில் அறைந்தார் என தகவல் வெளியாகியுள்ளது. கொலிவுட்டில் காதல் அழிவதில்லை, லாடம் படங்களில் நடித்த சார்மி, தெலுங்கில் அதிகமான படங்களில் நடித்துள்ளார்.

இவர் தெலுங்கில் நாகர்ஜுனா, பாலகிருஷ்ணா, ஜுனியர் என்.டி.ஆர், சித்தார்த், ரவி தேஜா போன்ற முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளார். மலையாள படமொன்றில் மம்முட்டியுடன் நடித்துள்ளார். இந்நிலையில் சார்மிக்கு தற்போது படவாய்ப்புகள் குறைந்துள்ளன. எனவே இயக்குநர்களை அணுகி வாய்ப்பு கேட்டு வருகிறார். தெலுங்கு இயக்குநர் ஹரீஷ் சங்கர் தனது படத்தில் சார்மியை நடிக்க வைப்பதாக கூறினார்.

தனது அலுவலகத்துக்கு வந்து கதை கேட்கும்படியும் அழைத்தார். இதை நம்பி சார்மி அவரது அலுவலகத்துக்கு சென்றபோது அங்கு சார்மிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த நடிகை சார்மி, தன்னிடம் தகாத முறையில் நடக்க முயன்ற இயக்குனரை ஆவேசமாக தாக்கினார். இந்த விடயம் தெலுங்கு பட உலகில் பரவி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ரஜனி கமல் இணைந்து நடித்த நினைத்தாலே இனிக்கும் 2013இல்

ரஜினி, கமல் இணைந்து நடித்த படம் 'நினைத்தாலே இனிக்கும்' படம் 2013ஆம் ஆண்டு பெப்ரவரி, மார்ச்சில் வெளியாகுமென தெரிகிறது. 1979ஆம் ஆண்டு வெளியான இப்படத்தில் கதாநாயகியாக ஜெயப்பிரதா நடிக்க, கே.பாலச்சந்தர் இயக்கினார்.

இப்படத்தில் இடம் பெற்ற 'நம்ம ஊரு சிங்காரி', 'ஆனந்த தாண்டவமோ', 'பாரதி கண்ணம்மா', 'சம்போ சிவ சம்போ', 'எங்கேயும் எப்போதும்', 'யாதும் ஊரே யாவரும் கேளீர்', 'இனிமை நிறைந்த உலகம் இருக்கு' போன்ற பாடல்கள் பட்டி தொட்டியெங்கும் கலக்கின.

இந்த படம் தற்போது டிஜிட்டலில் புதுப்பிக்கப்பட்டு உள்ளது. இதற்கான பணிகள் மும்பை ஸ்டுடியோக்களில் நடந்து முடிந்துள்ளன. படத்தை திரைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. எனவே பெப்ரவரி அல்லது மார்ச் மாதம் வெளிவரும் என தெரிகிறது.

## மீண்டும் ஓமனக்குட்டன்

பில்லா படத்திற்கு பின்னர் பார்வதி ஓமனக்குட்டன் ஜவுளி கடை, நகைக் கடை திறக்க ஆரம்பித்தார். மிகவும் கவர்ச்சியாக போஸ் கொடுத்து போட்டோ சிடிக்களை ஊடகங்களுக்குக் கொடுத்தார். ஒன்றும் வெற்றியாகவில்லை. மீண்டும் மும்பைக்கே சென்று விட்டார். இந்த நிலையில் நதிகள் நனைவதில்லை என்ற சிறு பட்ஜெட் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். இது காமராஜ், அய்யாவழி படங்களை இயக்கிய நாஞ்சில் பி.சி.அன்பழகன் இயக்கும் படம். இந்தப் படத்திற்காக பார்வதி பெற்றிருக்கும் சம்பளம் 20 லட்சம் என்கிறார்கள்.



## இன்னும் 10 வருடங்கள் சினிமாவில் இருப்பேன்

லேசா லேசா படத்தில் ஹீரோயினாக அறிமுகமானவர் த்ரிஷா. அப்படி
அவர் நடிக்க வந்து 10 ஆண்டுகளை கடந்து விட்டார். மௌனம் பேசியதே
படத்தில் நடித்தபோதே சினிமாவை விட்டு வெளியேற இருந்தவர்,
விக்ரமுடன் நடித்த சாமி படத்தின் ஹிட் காரணமாக, சினிமாவில்
நிலையான நடிகையாகி விட்டார். அதோடு நடிக்க வந்தது முதல் இப்போது
வரை தனது உடல்கட்டை ஸ்லிம்மாக பாதுகாத்தும் வருகிறார். இதனால்
வளர்ந்து வரும் ஹீரோக்களுடன் நடிப்பதற்கு அவரது தோற்றம் திரையு
லகை கவர்ந்துள்ளது.


இதற்கிடையே ராணாவுடன் காதல், கல்யாணம் போன்ற கிசுகிசுக்களில்
சிக்கியிருந்தவர், இப்போது அதிலிருந்து மீண்டு விட்டார். தமிழில் மூன்று
படம், தெலுங்கில் 2 படம் என ஒப்பந்தமாகி இப்போது படுபிஸியாக இருக்
கிறார் த்ரிஷா. இந்த நிலையில், தன்னிடம் நெருங்கிப் பழகும் சிலவளர்ந்து
வரும் நடிகைகள், எப்போது நடிப்புக்கு முழுக்குப்போடப் போகிறீர்கள்? என்று
த்ரிஷாவைக்கேட்டதற்கு, அப்படியொரு ஐடியாவே இல்லை. இன்னும் 10
வருசத்துக்கு சினிமாவில் தொடர்ந்து நடிக்கப்போகிறேன் என்கிறாராம்.
மார்க்கெட்டில் தக்க வைத்துக்கொள்ள என் உடல்கட்டையும் இப்படியே
பராமரிக்கப் போகிறேன். அது என்னால் முடியும் என்றும் சொல்லி
மார்தட்டுகிறாராம்.

## அனுஷ்காவுக்கு ஏற்பட்ட கிராக்கி

ஹீரோக்களின் விருப்பமான நடிகையான அனுஷ்கா அடுத்தாண்டு இறுதி வரை படங்களில் ஒப்பந்தமாகியுள்ளாராம்., அவரிடம் செல்லும் தயாரிப்பாளர்களிடம், 2014இல், ஷூட்டிங் வைக்கலாமா எனக் கேட்கிறாராம் அனுஸ்கா. தமிழ், தெலுங்கில் அனுஷ்காவுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியை பார்த்து, பாலிவுட்டிலிருந்து, அவருக்கு அழைப்பு வந்து கொண்டே இருக்கிறது. ஆனாலும், பாலிவுட் எல்லாம், நமக்கு சரிப்பட்டு வராது என ஒரே வார்த்தையாகக் கூறி விடுகிறார். பாலிவுட் மீது, ஏன் இந்த பாராமுகம் என, அனுஷ்காவிடம் கேட்டால், தென் மாநில மொழி படங்களில் நடிப்பதே, திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இந்த புகழை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறேன் என்கிறாராம்.



படம் : சித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரற்று கிடக்கும் முள்ளியவளை பொதுச்சந்தை

(முல்லைத்தீவு)

முள்ளியவளை பொதுச்சந்தை பல குறைபாடுகளுடன் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட குறித்த பொதுச்சந்தையானது மீள்குடியேற்றத்தின் பின் கடந்த 2010 ஆம் ஆண்டு மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தையில் ஆறு கிராம சேவையாளர்கள் பிரிவை சேர்ந்த 10 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெற்று வருகின்ற நிலையில் சந்தை நிலையத்திற்கு சீமெந்து இடப்படாமையால் மண்ணிலேயே கொள்வனவு, விற்பனை என்பன இடம்பெற்று வருகின்றன.

இச்சந்தைக்கு சுற்றுவேலி இன்மையால் கட்டாக்காலி மாடுகள் சந்தையினுள் பெரும் சிரமங்களை ஏற்படுத்துவதுடன் இரவு வேளைகளில் இச்சந்தை மாட்டுப்பட்டியாகவும் காணப்படுகின்றது. இப்பொது சந்தையில் இருந்து ஒரு வருடத்தில் இருபது இலட்சம் ரூபாவை கரைதுறைப் பற்று பிரதேச சபைக்கு வருமானமாக பெற்றுக்கொள்கின்றது.

கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்படாமையினால் மழை காலத்தில் கழிவுகள் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகி டெங்கு போன்ற நோய்கள் ஏற்படக் கூடிய அபாய நிலையும் உள்ளது.

இச்சந்தையில் மின்சார வசதி, காவலாளி என்பன இல்லை. கிணறு காணப்படுகின்றபோதும் அவை சுத்திரிக்கப்படாமையால் பயன்படுத்த முடியாமல் உள்ளது.

குறித்த சந்தையில் மலசலகூடம் காணப்படுகின்ற போதும் பாவிக்கமுடியாத நிலையில் துர்நாற்றம் வீசுகின்றது.

சுட்டவசதி இச்சந்தைக்கு போதாதுள்ளது. தளபாட வசதியில்லை. அத்துடன் வியாபாரிகள் மற்றும் கொள்வனவாளர்கள் குப்பைக்குள்ளேயே வந்து செல்லவேண்டிய நிலையில் குப்பைகள் அகற்றப்படாதுள்ளது. எனவே, வியாபாரிகளதும் நுகர்வோரதும் நலன் கருதி எதிர்வரும் 2013 ஆம் ஆண்டிலாவது மேற்குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து தர ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# ரேடியற்றர் கொதி நீராவி சாரதியை பதம் பார்த்தது

(யாழ்ப்பாணம்)

வாகன இயந்திர வெப்ப கதிர்த்தியிலிருந்து (ரேடியேற்றர்) வெளியேறிய நீராவியினால் எரிகாயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் யாழ்.நகர பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் உதயகுமார் (வயது48) என்ற வாகனச் சாரதியே பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் ஹயஸ் வாகனத்தை செலுத்திய பின் இயந்திர வெப்பக்கதிர்த்தியினுள் நீர் ஊற்றுவதற்காக குறித்த நபர் அதன் மூடியை திறக்க முயன்ற வேளையில் திடீரென மூடி கழன்று வெளியேறிய கொதி நீராவியானது சாரதியின் கைப்பகுதி, முதுகுப்பகுதிகளில் பட்டதன் காரணமாக எரிகாயங்களுக்கு உள்ளானதுடன் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (அ)

# சர்வதேச நட்புறவை இலங்கை சமநிலையில் பேணவேண்டும்

## முன்னாள் பேராசிரியர் ராம்சாரி சுட்டிக்காட்டு

இலங்கை அனைத்து நாடுகளினுடனான நட்புறவையும் சமநிலையையும் பேணவேண்டுமென லண்டன் பொருளியல் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரும் சிங்கப்பூரில் உள்ள மக்கள் கொள்கை தொடர்பாளருமான ராம்சாரி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவித்தவை வருமாறு, இலங்கையின் வெளிநாடு மற்றும் பொருளாதார கொள்கை சமநிலையில் இல்லை. சீனா இலங்கையின் முக்கிய நட்பு நாடாக காணப்படுகின்ற நிலையில் இந்தியா போன்ற பழைய நட்பு நாடுகளை இலங்கை புறக்கணிப்பதாக தோன்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலை இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பின்னடையை ஏற்படுத்துவதாக உள்ளது.

இதேவேளை, இலங்கையின் 60 வீத ஏற்றுமதிகள் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் இடம் பெறுகின்றன.

இந்நிலையில் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளிற்கு இலங்கையின் உறவு தேவைப்படுகின்ற அளவிலும் பார்க்க அந்த நாடுகளின் உறவு இலங்கைக்கு மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு 6 வீதமே ஏற்றுமதி இடம் பெறுகின்ற போதும் இந்தியாவின் இராஜதந்திர உறவு இலங்கைக்கு மிக அவசியம் என பேராசிரியர் சுட்டிக்காட்டினார். (ந-8)

# நீதிமன்ற அனுமதியுடன் கொலைக்குற்றவாளிகள் இத்தாலி பயணம்

(கொழும்பு)

மீனவர்கள் இருவரை சுட்டுக்கொலை செய்த வழக்கில் தொடர்புடைய இத்தாலிய மாலுமிகள் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று இத்தாலி செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் கொண்டாட சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு சென்ற அவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி விடுவோம் என்று உறுதிமொழி அளித்துள்ளனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த பெப்ரவரி மாதம் கேரள கடல் எல்லை அருகே இத்தாலி சரக்கு கப்பல் வந்தது. இதில் பாதுகாப்பிற்கு வந்த இத்தாலிய வீரர்கள் லத்தூர் மாசிமிலானோ, சல்டோர் கிரோன் இருந்தனர். அப்போது எதிரே வந்த மீனவர்களை கடற்கொள்ளையர் என நினைத்து துப்பாக்கியால் சுட்டதில் தமிழக மற்றும் கேரளாவை சேர்ந்த 2 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து அவர்கள் இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் இருந்து வந்தனர்.

இதற்கிடையே கிறிஸ்மஸ் பண்டிகை வருவதால் தங்கள் குடும்பத்துடன் கொண்டாட வேண்டி இந்திய மத்திய அரசிடம் நீதிமன்ற அனுமதி வழங்குமாறு கேட்டனர்.

இதனையடுத்து நீதிமன்றம் ரூபா 6 கோடியை காப்பு பணமாக செலுத்தி எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்குள் திரும்பி விட வேண்டும் என்று உத்தரவிட்டது.

இதன்படி இரு வீரர்களும் நேற்று அதிகாலையில் இத்தாலியில் இருந்து வந்த சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு சென்றனர்.

கிறிஸ்மஸ் விழாவுக்கு செல்வதில் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறிய வீரர்கள் மத்திய அரசுக்கு தங்களின் நன்றியை தெரிவித்துக் கொண்டனர். (ந-11)

# பரீட்சை வினாத்தாள் வெளியானமை தொடர்பில் அறிக்கை எங்கே?

## இலங்கை ஆசிரியர் ஒன்றியம் கேள்வி

கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் முன்கூட்டி வெளியானமை தொடர்பிலான அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை என இலங்கை ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சாதாரண தரப்பரீட்சையின் விஞ்ஞானம் பகுதி ஒன்று வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடு செய்யப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையிலும் கல்வி அமைச்சு இது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாரிய முறைகேடுகளை மூடி மறைத்து நியாயம் கற்பிக்க பரீட்சைத்திணைக்களம் மீண்டும் முயற்சித்து வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

விசாரணை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ளது. (ந-2)

# அமைச்சர் குணரட்ன எனது பணிகளை தடுக்கிறார்

## கீதா குமாரசிங்க குற்றச்சாட்டு

ஆளும்கட்சி அமைச்சரினால் இடையூறுகள் ஏற்படுதுவதாக ஆளும் கட்சி தொகுதி அமைப்பாளரான கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

பென்தர தொகுதி அமைப்பாளரான கீதா குமாரசிங்கவிற்கு அமைச்சர் குணரட்ன வீரக்கோன் இடையூறு ஏற்படுத்திவருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


கடந்த 3 ஆண்டுகளாக அமைச்சர் தமக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக குற்றம் சுமத் தியுள் ளார்.

பிரதேசத்தின் அபிவிருத்திக்காக தாம் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் அமைச்சர் தடைகளை ஏற்படுத்திவருவதாக கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் மேம்பாட்டுக்காக இந்த அநீதிகளை தாம் பொறுத்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்யத்திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ந-2)







கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் உருவச்சிலை திறப்புவிழா நேற்றைய தினம் காலை 10.30 மணியளவில் நீர்வேலி வாலைக்குலை உற்பத்தி விற்பனை கூட்டுறவுச்சங்கத்தின் முன்னால் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கோப்பாய் கோமானின் உருவச்சிலை, பெயர்ப்பலகை ஆகியவற்றை திறந்து வைப்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுரையாளர்களை இணைக்க நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்/ பலாலி ஆசிரிய கலாசாலைகளில் வெற்றிடமாகவுள்ள விரிவுரையாளர் பணிக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறும்.

மேற்படி விடயமாக விண்ணப்பித்தவர்களது தகைமைகள் மத்திய கல்வி அமைச்சால் பரிசீலிக்கப்பட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியவர்களுக்கு மட்டும் நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் தொழில்சார் பாடத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு மட்டும் நேர்முகப் பரீட்சை கடிதங்கள் அனுப்பப்படவில்லை. அது தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்காகத் தெரிவானவர்களது பெயர், விபரம் ஆகியவற்றை கலாசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 19 வருடங்களின் பின்னர் சந்தேக நபர்கள் கைது

(யக்கலமுல்ல)

யக்கலமுல்ல, நாக்கியாதெனிய பகுதியில் 19 வருடங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் கொல்லப்பட்ட நபர் ஒருவரின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 1993 ஆம் ஆண்டு 70 வயதுடைய நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டு முண்டமாக மட்டும் வீசப்பட்ட நிலையில் பொலிஸார் கண்டுபிடித்தனர். இதனையடுத்து மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் தலைப் பகுதி மலசலகூடம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

இதனையடுத்து கொலை செய்யப்பட்ட நபரின் மகன் தனது தந்தை காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் காலி குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வந்த விசாரணைகளின் அடிப்படையில் 19 வருடங்களுக்கு பின்னர் கொலை செய்யப்பட்ட நபரின் மகனும் மருமகனும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# முதலாவது விண்வெளி வீரன் 5 ஆண்டுகளில் பயணமாவான்

## நம்பிக்கை வெளியிடுகிறார் விதாரண

(கொழும்பு)



தனது முதலாவது விண்வெளி வீரனை இன்னும் 5 ஆண்டுகளில் இலங்கை அனுப்பும் என்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முதலாவது தொலைத்தொடர்பு செயற்கைக்கோளான (செற்றலைட்) சுப்றீம்செற்-1 ஐ இலங்கையானது சீனாவுடன் இணைந்து கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பிற்பகல் 3.43 மணிக்கு விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவியது.

சீனாவின் சீசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்ட இந்த செயற்கைக் கோளானது தனது ஆரம்ப வயதிலேயே இருக்கின்றது. இந்நிலையில் சீனாவுடன் இணைந்து இன்னும் 7 ஆண்டுகளில் முதலாவது விண்வெளி வீரனை இலங்கை அனுப்பி வைக்கும். அத்துடன் மேலும் இரண்டு செயற்கைக்கோள்கள் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் தயாரிக்கப்படும். அதில் ஒன்று அடுத்த வருடம் விண்ணில் ஏவப்படும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# தொலைபேசி அழைப்புக்களால் மூக்குளித்தது வ.ம.திணைக்களம்

(கொழும்பு)

உலக அழிவு தொடர்பில் அறிந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள் காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டதாக வளிமண்டலவியல் திணைக்கள பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உலக அழிவு தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட வதந்தி மற்றும் பொய்ப் பிரசாரங்களை நம்பி அச்சமடைந்த மக்கள் இவ்வாறான தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலக அழிவுக்கு வழிவகுக்கும் இயற்கை அனர்த்தங்கள் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் அறிந்து கொள்வதற்காக மேற்படி மக்கள் நேற்று முன்தினம் பெருமளவிலான தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தியிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சில இணையத்தளங்கள் உலக அழிவு தொடர்பிலான வதந்திகளை பரப்பி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. எப்படியிருப்பினும் நேற்று முன்தினமானது வழமையை போன்று எந்தவித ஆபத்துமின்றி முடிவடைந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சட்டம் ஒழுங்கை பேணாது அபிவிருத்தியை எட்டமுடியாது

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தாது அபிவிருத்தி இலக்குகளை எட்ட முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு தராதரம் பாராது தண்டனை விதிக்கப்பட வேண்டும். அரசியல் தலையீடு காரணமாக சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் சிரமம் ஏற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டவுடன் அவர்களது உறவினர்கள் அரசியல்வாதியை நாடுகின்றனர். அரசியல்வாதி பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துகின்றார்.

இதனைத் தவிர்க்க முடியாது. இதனை அரசியல் தலையீடாகவும் கருத முடியாது. கிராமங்கள் மற்றும் நகரங்களிலிருந்து பொலிஸ் நிலையங்கள் அகற்றப்பட்டால் பாரிய குற்றச் செயல்கள் இடம்பெறும் என்றார். (எ-11)

# சபாநாயகருக்கு நீதிமன்றம் அழைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவுகளுக்கு எதிராக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் தனக்கு இருப்பதாக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்நிலையில் எதிர்வரும் 2013 ஜனவரி மூன்றாம் திகதி நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கும் தெரிவுக்குழு அங்கத்தவர்களுக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சபாநாயகரும் நாடாளுமன்ற தெரிவுக் குழு உறுப்பினர்களும் பிரதம நீதியரசரின் உரிமைகளை அவ மதிக்கும் வகையில் செயற்படக்கூடாதெனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

தற்போதைய நிலைமை மற்றும் எந்தவொரு நடவடிக்கையும் குழப்பமானதொரு நிலைமையை தோற்றுவிக்கலாம் எனவும் நீதிமன்றம் குறிப்பிட்டது. (எ-11)

# சீன பிரஜைகள் 100 பேர் கொழும்பில் கைது

(கொழும்பு)

இணையத்தை பயன்படுத்தி பணமோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக சீன பிரஜைகள் 100 பேர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். இம் மோசடி குறித்து சீன பொலிஸார் வழங்கிய தகவலினை தொடர்ந்து நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்படி பிரஜைகளை கைது செய்துள்ளனர்.

இணையத்தை பயன்படுத்தி சீனக் கணக்குகளிலிருந்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக குறித்த 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி.பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (அ-2)

# துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட நிறைவேற்றுக்குழுக்கூட்டம் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே நாவலயிலுள்ள விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் சட்டத்தரணிகள் மீதான அச்சுறுத்தல்களுக்கு எதிராக தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் சுயாதீன நீதிமன்றத்தை பாதுகாப்பது குறித்தும் விரிவாக இந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. (அ-2)

# புதையல் தோண்டிய இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

குருநாகல் நாரமல பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய இருவர் நாரமல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலையடுத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது. குறித்த நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாரமல பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)





திருநெல்வேலி சிமாட்கிட்ஸ் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த கலை நிகழ்வு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் மழலைகளின் கலை நிகழ்வினையும் கலந்து கொண்ட விருந்தினர்கள், பார்வையாளர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 02.12.2012-20.06.2014

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

## கடகம்



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

**பத்தாமிடத்தில் கேதுவர பதவியும் உதவியும் தேடிவரும்!**

60/100

**கட்டளையிட்டால் செய்யக் காத்திருக்கும் பலபேரைக் கைக்குள் வைத்திருக்கும் கடக இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் வளர்ந்து- தேயும் கிரகமாக விளங்குவதுதான் உங்கள் இராசிநாதனான சந்திரன். எனவே, வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கும். மனதுகாரகன் என்று சந்திரன் வர்ணிக்கப்படுகிறார். எனவே, சிந்தனையாற்றலால் நீங்கள் சிறப்புக்களை பெறுவீர்கள். மதிப்பும் மரியாதையும் மிக்கவர்களாக விளங்குவீர்கள்.

கூட்டாளிகள் கொஞ்சம் மாறினால் வேறொரு கூட்டை உடனடியாக மாற்றிக் கொண்டுவிடுவீர்கள். பாட்டாளிகளின் பிரச்சினைகள்லிருந்து பார்லிமென்ட் பிரச்சினைவரை உங்களுக்கு தெரியாததே கிடையாது. விதியை நினைத்து வாழாமல் மதியை நினைத்து மதிப்போடு வாழக்கற்றுக் கொண்டவர்கள் நீங்கள். ஒரு காரியத்தை முடிக்க யார்ரை, எப்படி நாடவேண்டும் என்ற கலையை கற்று வைத்திருப்பீர்கள். அதனால்தான் நீங்கள் எதிலும் வெற்றி காண முடிகிறது.

பிடிவாத குணம் உங்கள் பிறவிக்குணமாகும். கடிவாளம் போடாத குதிரையைப்போல் சுற்றித்திரிவீர்கள். படிப்படியாக முன்னேறுவது உங்களுக்குப்பிடிக்காது. திடீர் முன்னேற்றத்தையே விரும்புவீர்கள். ஏற்ற- இறக்கம் வாய்ந்த வாழ்க்கையைப் பெற்ற உங்களுக்கு இந்த இராகு- கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை எல்லாம் கொடுக்கப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

**நலம்யாவும் கொடுக்கும் நான்காமிடத்து இராகு!**

**பதவி வாய்ப்பை கொடுக்கும் பத்தாமிடத்து கேது!**

இதுவரை விருச்சிக இராசியில் சஞ்சரித்து வந்த இராகுவும் இடபராசியில் சஞ்சரித்துவந்த கேதுவும் வான்வெளி பயணத்தில் 02-12-2012 அன்று பின்னோக்கி வந்து வாழ்க்கையை வசந்தமாக்கப் போகிறார்கள். வருங்காலத்தைப் பற்றி நீங்கள் கண்ட கனவெல்லாம் நனவாகப்போகிறது. இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு முதல் எண்ணற்ற மனிதர்களுக்கு வழிகாட்டுகின்ற வாய்ப்புவரை வந்து சேரப் போகிறது.

நாலில் இராகு சஞ்சரிக்கும்போது அது அர்த்தாஷ்டம இராகுவாக அல்லவா மாறும். அது எப்படி நன்மையை செய்யும்? என்று நீங்கள் நினைக்கலாம் அல்லவா? ஆரம்பத்தில் அது உச்ச சனியோடு சேர்க்கை பெறுகிறது.

ஆடியோடித் திரிந்த உடம்பில் ஆரோக்கிய குறைபாடு உருவாகலாம்.

கோடி, கோடியாய் சேர்த்த பணத்தில் கொஞ்சம் விரயமாகலாம். மாடி கட்டுவதும், மனை கட்டுவதும், பூமி வாங்குவதும் பிள்ளைக்கு நகை வாங்குவதும் என்று விரயங்கள் வந்து



கொண்டேயிருக்கும். வந்த விரயங்களை வகைப்படுத்தி சொந்த வீடு கட்டுவது முதல், சுயதொழில் செய்வது வரை யோசித்து செய்வது நல்லது.

கூடஇருக்கும் கூட்டாளிகள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவார்கள்ா என்பது சந்தேகம்தான். கூட்டாளிகளிடம் நீங்கள் ஒரு பொறுப்பை கொடுத்தால், அதை செய்யமுடியவில்லையே என்று அவர் கையை விரிப்பார். நீங்களே மீண்டும் செய்யும் சூழ்நிலை உருவாகும்.

பெற்றோர் வழியில் அனுசரித்து செல்வதே ஆதாயம்தரும். உற்றார், உறவினர் உங்கள் நெருக்கத்தை புரிந்து கொண்டு பகையை வளர்ப்பர். நீங்கள் அனுசரித்து செல்வதன்மூலமே ஆதாயத்தை அடைய முடியும். சொத்துக்களை கண்காணித்துக் கொள்வது அவசியமாகும்.

பத்திர பதிவுகளை செய்ய நினைப்பவர்கள், பார்த்து செய்வது நல்லது.

தினால் நிம்மதி காண இயலும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குடும்பத்தை விட்டுப் பிரிந்து நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். கடல் கடந்து செல்லும்வாய்ப்பு வருபவர்கள் சுயஜாதகத்தைப் பார்த்து முடிவெடுத்துக் கொள்ளலாம். நீங்கள் சென்ற சிலமாதங்கள் கழித்துகுடும்பத்தை கூட்டிச் செல்லும் வாய்ப்பும் கிட்டும்.

வியாபரம் செய்பவர்கள் அனைவரையும் அனுசரித்துச்செல்வது நல்லது முன்கோபத்தைக் குறைத்து எதிரிகளை வசமாக்கிக் கொண்டால் வந்த வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலும்.

**10 ஆம் இடத்துக்கேது பலன் தருமா?**

10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் பணிகளில் ஏற்பட்ட தொய்வுகள் அகலும். முத்தான வாழ்க்கை அமையவும் முன்னேற்றங்கள் வந்து சேரவும் பத்தொடு பதினொராவது ஆளாக நீங்கள் இல்லாமல் முதலாளாகவும் வருவதற்கு நீங்கள் எடுத்தமுயற்சிகள் கைகூடும் நேரம் இது. தொழில் தொடங்கத் தீட்டிய திட்டங்களை நிறைவேற்றவது கேதுவின் கையில் தான் இருக்கிறது. ஆனால், சில சமயங்களில் தடுமாற்றங்களையும் சந்திக்க வைக்கும்.

அதிகாரிகளை நம்பி செய்த சில காரியங்கள் அப்படியே நிற்கலாம். எனவே நாளைக்கே நிறைவேற்றுகிறேன் என்று நண்பர்களுக்கு வாக்குறுதி கொடுக்கவேண்டாம். கீர்த்தி

என்பதால் இதுபோன்ற காலங்களில் விநாயகர் கவசம் பாடி விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது. நாக கவசம் பாடி இராகு-கேதுக்களை வழிபட்டால், யோக வாய்ப்புகள் வந்துசேரும்.

பொதுவாக 10ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கும்போது அரசியல்வாதிகளாக விளங்குபவர்களுக்கு சில திருப்பங்கள் ஏற்படும். தித்திப்பான செய்தி வந்துசேரும். அவர்களின் விருப்பம் நிறைவேறும். வெற்றிக்கு வித்திடும் விதத்தில் அரசியல் வாழ்க்கை அமையும். அதேநேரத்தில் மறைமுக எதிர்ப்புகளையும் நீங்கள் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் மாற்றுக் கருத்துடையோர் எண்ணங்களை மாற்ற முயற்சிக்கவேண்டிய நேரமிது. பெற்றோர்களின் உடல்நலத்தில் திடீர் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும் பிரச்சினை தரும் வாகனத்தை மாற்றிவிட்டு புதிய வாகனங்கள் வாங்குவதன்மூலம் பொருளாதாரநிலை உயரும். ஞானகாரகனைப் பலப்படுத்த ஆனைமுகப் பெருமான் படத்தை அருகிலேயே வைத்துக் கொள்ளுங்கள்.

**பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!**

துலாம் இராசியில் சஞ்சரிக்கும் இராகு, குருகாலில் சஞ்சரிக்கும் பொழுது எதிரிகள் உதிரியாவர். எதிர்பார்த்த உத்தியோகம் கிடைக்கும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். அலைமோதுவதுபோல கவலைகள் வந்துமோதினாலும்நிலை தடுமாறாமல் நீங்கள் தன்னம்பிக் கையோடு இருந்து காரியம் சாதிப்பீர்கள்.

இராகு சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் அதிகரிக்கலாம். எதிலும் விழிப்புணர்ச்சியும் கூடுதல் கவனமும் செலுத்துவது நல்லது. உறவினர் பகை உருவாகலாம். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களின் எண்ணிக்கை உயரும்.

ராகு செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். பிள்ளைகளின் கல்யாண ஆசைகளை நிறைவேற்றுவீர்கள் பிரச்சினை தந்த பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். அவர்களின் எதிர்கால நலன்கருதி திட்டங்கள் தீட்டி அதை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**பாதசாரப்படி கேதுதரும் பலன்கள்!**

மேட இராசிக்குள் அடியெடுத்து வைக்கும் கேது சூரியன் சாரத்தில் முதலில் சஞ்சரிக்கிறார். அதேசமயம் பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள் மனதளவில் செய்து முடித்த காரியங்களை மறநிமிடமே செய்து முடிக்க இயலும்.

கேது சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கும். மாற்றுக்கருத்துடையவர்களை மேலும் வளரவிடாமல பார்த்துக்கொள்வது நல்லது. கூட்டாளிகள் பிரியலாம். பெண்வழிப் பிரச்சினைகள் தலைதூக்கும். பெரிய மனிதர்கள் உதவுவதாகக் கூறி கையை விரிப்பர். கேது சுய சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது. புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். பொன் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். பிறர் கண்படும் விதத்தில் வளர்ச்சி ஏற்படுவது அறிந்து நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

# வருங்காலக் கனவுகள் நனவாகும்; வாழ்க்கை வசந்தமாகப்போகிறது

மே 2013க்கு மேல் குருவால் பார்க்கப்படுகிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் போது துன்பம் உங்களை நெருங்கவிடாமல் செய்யும். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்ற நிலையை உருவாக்கும்.

இருப்பினும் இராகு-கேது பெயர்ச்சியையொட்டிய தினங்களிலோ, அல்லது 30 நாட்களுக்குள்ளோ உங்களுக்கு அனுகூலம் தரும் நட்சத்திரம், நாள் பார்த்து சர்ப்பசாந்தி வழிபாடுகளை செய்ய வேண்டும். சுய ஜாதக அடிப்படையில் ஆலயங்களை தேர்ந்தெடுத்துக்கொள்வது நல்லது. பொதுவாக 4இல் இராகு சஞ்சரிக்கும்போது சுகஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதால் அலைச்சலை அதிகரிக்கச் செய்யலாம். அன்றாட வாழ்க்கையில் எந்தவொரு காரியத்தையும் ஒருமுறைக்கு இருமுறை செய்ய வைக்கலாம். எனவே, பின்விளைவை சிந்தித்து யோசித்து செய்வது நல்லது.

சுபச் செலவுகள் அதிகரிக்கும், சொல்லை செயலாக்கிக் காட்டிட கடைசிநேரம்வரை காத்திருக்கக் கூடிய சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகலாம். தேவையற்ற அலைச்சலை தவிர்த்துக் கொள்வது நல்லது. ஆவல்களை குறைத்துக் கொண்டு அன்றாட பணிகளில் மட்டுமே கவனத்தை செலுத் தரும் கேது கடைசி நேரத்தில்தான் காரியத்தை முடித்து வைக்கும்.

செயல் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது, சில நன்மைகளையும் உங்களுக்கு வழங்குவார். புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டேயிருக்கும். கூட்டு முயற்சிகளை விட்டுவிட்டு தனித்தியங்கலாமா என்று யோசிப்பீர்கள். ஆற்றல் மிக்கவர்களை உங்களுக்குப் பின்னணியாக வைத்துக்கொண்டு மாற்றங்களைக் காண்பீர்கள். ஏமாற்றங்களை உங்களுக்குத் தந்தவர்கள் உங்களுக்கு எதிரில் வந்து மன்னிப்புக் கேட்பர்.

சாமி துணையோடு நீங்கள் சகல காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள்

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

4ஆம் இடத்து இராகுவால் நலன்களும் வளங்களும் வந்துசேரவும் 10 ஆம் இடத்துக் கேதுவால் பாக்கியங்கள் அனைத்தும் கைகூடவும் அருகில் இருக்கும் சிவாலயத்திற்கு சென்று திங்கள் தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

சுயஜாதகத்தில் இராகு-கேதுக்களின் சாரபலமறிந்து பரிகாரம் செய்வதோடு அபிராமிஅம்மன் அமிர்தகடேஸ்வரரை யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

318

## மாயமந்திரவாதி



பலநூற்றாண்டுகளுக்கு முன் காளி வர்மன் என்பவன்பிரம புத்திர நதிக் கரையில் இருந்த ஒரு காட்டின் சிறு கிராமத்தில் இருந்தான். அவனது தந்தை சந்திரசீல மன்னனின் படையில் போர் வீரனாகப் பணியாற்றி ஒருபோரில் இறந்துபோனான். அப்போது காளி வர்மனின் வயது பத்து. அவனது தாயும் அவனது தன் கணவன் இறந்தது கேட்டு மாரடைப்பால் இறந்துபோனாள். காளி வர்மனை அவனது தந்தையின் நண் பன் பல பத்திரன் தன் வீட்டில் வைத் துக்கொண்டு போர்க்கலையைக் கற் பித்தான்.

காளிவர்மன் இருபதாவது வயதை அடைந்ததும் பலபத்திரன் அவனிடம் காளி நீ இந்த ஊரைவிட்டு தலை நகரு க்குப்போய் அங்கு அரசாங்க வேலை யில் சேர்ந்துகொள் என்றான். காளி வர்மனுக்கு அப்படிப்பட்ட ஆசை இரு ந்த போதிலும் அவனுக்கு மன்னன் ஜீதகேது என்றால் சற்றும் மரியாதை இல்லை. ஏனெனில் மன்னன் மக்க ளிடமிருந்து வரிமட்டும்தான் வசூ லிப்பதில் குறியாக இருப்பதாயும் மக் களுக்கு எவ்வித வசதியும் செய்து கொடுப்பதில்லை என்றே அவன் எண் ணினான். மேலும் நாட்டில் கொள்ளை, கொலை அதிகரித்துக்கொண்டே போக மன்னன் அவற்றைத்தடுக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

இதைக்காளிவர்மன் பலபத்திர னிடம் கூறி மன்னன் ஜீதகேது ஆளத் திறமையற்றவன்.தொடை நடுங்கி அவனு டைய படையில் சேர்ந்து பணிபுரிவதை அவமானமாகக் கருதுகிறேன் என்றான். கிழ பலபத்திரனும் நிதானமாக மன் னன் தன் அதிகாரிகளை நம்பியே ஆட்சி புரிகிறான். இந்த மன்னனின் தந்தை யின் ஆட்சியில் உன் தந்தைபோன்ற நேர்மையானவர்கள் பணிபுரிந்தார்கள். ஆனால் இந்த ஜீதகேதுவை நேர்மை யற்ற அதிகாரியே இருக்கிறார்கள். அதனால்தான் நாட்டின் நிலைமை மோசமாகிவிட்டது என்றான்.

காளிவர்மனும் இந்த நிலைமை யைப் பார்த்துக்கொண்டு எல்லோரை யும் போல நானும் கைகட்டி வாய் திற

### அம்புலிமாமா கதைகள்

வாமல் இருக்கவாவேண்டும்? என்று கேட்டான். பலபத்திரனும் வேண் டாம். உன் தந்தை இறக்குமுன் விருப்பத் தைக்கூறிவிட்டு கண்மூடினார். அதைச் சொல்லும்முன் நீ என்னுடன் உள்ளே வா என்று கூறி தன் வீட்டிற்குள் அழைத் துச்சென்றான். அங்கு ஓர் அறையின் கத வைத்திறந்து காளிவர்மனை அறைக் குள் அழைத்துச் சென்றான். அறை யில் பலவித வாள், ஈட்டி, கவசம் என்றெல்லாம் இருந்தன. அவற்றில் ஒரு வாள் மட்டும் தங்கப் பிடி கொண்டதாக இருந்தது. பலபத்திரன் அந்த வாளை எடுத்து காளிவர் மனின் இடுப்பில் கட்டி காளி நீ சத்திரி யன். இதை உன் இடுப்பில் கட்டி நீ உண்மையான சத்திரியனாக நடந்து

கொள்ள வேண்டும் என்று உன் தந்தை உன்னிடம் சொல்லச்சொன்னார் என்றான்.

காளிவர்மன் அங்கிருந்த கவசத்தை எடுத்து அணிந்துகொண்டான். அப்போது அவன் தன் உடலில் ஏதோ ஒரு சக்தி புகுந்துவிட்டது போல உணர்ந்தான். அவன் வாளை உறையிலிருந்து உருவி என் தந்தையின் நோக்கம் புரிந்துவிட்டது. நாட்டின் நிலையை சீர்திருத்த வேண் டும். அம்முயற்சியில் நான் இறங்குகி றேன் என்றான். அதுகேட்டு பலபத்தி ரன் மகிழ்ந்து காளிவர்மன் தலைநகரு க்குப், போவதற்கான ஏற்பாட்டைச் செய் தான். மறுநாள் காளிவர்மன் கவசமணி ந்து இடுப்பில் வாளைக்கட்டிக் கொண்டு வழிச்செலவிற்காக நூறு தங்க நாண யங்களோடு குதிரை மீது அமர்ந்து தன் ஊரிலிருந்து புறப்பட்டான்.

காளிவர்மன் போகவேண்டிய வழி ஒரு காட்டினுள் இருந்தது. உச்சிவேளை வரை பயணம் செய்த அவன் பசி எடுத்ததும் ஓரிடத்தில் உட்கார்ந்து தான் கொண்டுவந்த உணவைச்சாப்பிட்டான். பின்பு தாகம் தீர்த்துக்கொள்ள எங்காவது ஏரி, ஓடை என்று இருக்கிறதா என்று சற்றுத்தூரம் போய்ப் பார்த்தான். அப்போது ஒரு மரத்தின் மீதிருந்து யாரோ முனகும் குரலைக் கேட் டான். அப்போது தலைநிமிர்ந்து அவன்



பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அந்த மரத்திலிருந்து ஒரு கிழவன் பொத் தென்று கீழே விழுந்தான்.

காளிவர்மன் தன் குதிரையிலிருந்து இறங்கி அக்கிழவனருகே சென்றான். அவ்ன் அக்கிழவனிடம் இந்தத் தள் ளாதவயதில் மரத்தின்மேல் ஏன் ஏறி னீர்கள்? என்று கேட்டான். கிழவனும் உன்னைப்பார்த்தால் மன்னனின் படைவீரன் போலத்தெரிகிறது. நீ வரி வசூலிக்க வந்தாயா? என்று மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கக் கேட்டான்.

காளிவர்மனும் நான் படைவீரன் இல்லை. படையில் சேர தலைநகருக் குப் போய்க்கொண்டிருக்கிறேன். ஆமாம் நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே என்று கேட்டான். கிழவனும் எங்களூரில் கொள்ளைக் காரர் கள் புகவே நான் பயந்து ஓடிவந்து இந்த மரத்தின்மேல் ஏறி மறைந்து கொண் டேன் என்றான். காளிவர்மனனும் தாத்தா இங்கு கொள்ளைக்காரர்கள் இருக்கி றார்களா? பகலில்கூட கொள்ளையடிக் கிறார்களா? என்று கேட்டான். கிழவ னும் என்னூருக்குள் கொள்ளைக்காரர் கள் புகுந்து கொள்ளையடிப்பதும் அப் போது ஊரார் ஊரைவிட்டு ஓடிப் போவ தும் வழக்கமாகிவிட்டது. கொள்ளைக் காரர்கள் போனபின் ஊரார் திரும்பி வந்து தம் வீடுகளைச் சரிசெய்து கொண்டு வசிப்பார்கள் என்றான்.

அப்போது காளிவர்மன் கொள் ளைக்காரர்களைப்பற்றி யாரும் மன்ன னிடம் புகார் செய்யவில்லையா? என்று கேட்டான். கிழவனும் புகாரா? கொள் ளைக்காரர்கள்தான் கொள்ளையடிக் றார்கள் என்றால் அரசாங்க வீரர்களும் அவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல. அவர்களும் அவ்வப்போது வந்து வீட்டிலும் வயலிலும் உள்ள தானியங் களை எடுத்துக்கொண்டு போய்விடுகி றார்கள். எங்கள் நிலை இப்படியுள் ளது என்றான்.

இச்சமயத்தில் நான்கு கொள்ளைக் காரர்கள் அங்குவந்துவிட்டார்கள். அவர்கள் காளிவர்மனைப்பார்த்து ஓ! நீ வரி வசூல் செய்யவந்தவனா? மரியாதை யாக நீ வைத்திருக்கும் பணப்பையை எடு த்து கீழே வைத்துவிட்டுப்போ என்று மிரட்டினார்கள். காளிவர்மனும் பய ந்தவன்போல அவர்களைப் பார்த்த வாறே தன் குதிரை அருகே போய் அதன் மீதிருந்த சிறு உணவு மூட்டையை எடுத்து தரைமீது வைத்தான். கொள் ளைக்காரர் களில் ஒருவன் ஆவலுடன் எடுக்கப் போனான். அப்போது காளிவர் மன் வாளை உருவி அவன்மீது பாய்ந்து அவனது தலையை வெட்டிய தோடு இரு கொள்ளைக் காரர்களைத் தாக்கி அவர்களையும் குத்திக்கொன்றான்.

நான்காவது கொள்ளைக்காரன் தப்பியோட முயலவே காளிவர்மன் அவனைப்பிடித்து உலுக்கி ஓங்கி ஒரு உதைவிட்டான். கொள்ளைக்கா ரன் அலறியவாறே கீழே விழுந்தான். அவனை இழுத்துக்கொண்டு காளி வர்மன் கிழவனருகே வந்தான். இதை யெல்லாம் கண்ட கிழவன் காளிவர் மனைப்பார்த்து மகனே! என்னவீரம்! என்ன தைரியம் மூன்று கொள்ளைக்காரர்களைக்கொன்று நான்காவது பேர்வழியை குற்றுயிராக இழுத்து வந்திருக்கிறாயே. உன் போன்ற ஓர் இளைஞனை பார்த்ததேயில்லை. எங்களூர் இளைஞர்களில் யாருமே துணிந்து கொள்ளைக்காரர்களைத் தாக்கியதேயில்லை என்றான் நடுநடுங் கும் குரலில்.

காளிவர்மனும் அப்படியானால் நான் உங்களூர் இளைஞர்களுக்கு போர்க் கலையில் பயிற்சியளித்துவிட்டு தலைநகருக்கு செல்கிறேன். எனக்கு உன்னூருக்குப் போக வழிகாட்டு. இந்தக்கொள்ளைக் காரனை இழுத் துக்கொண்டு என் குதிரையுடன் உன் பின்னாலேயே வருகிறேன் என்றான். இதற்குள் கிழவனின் ஊர்க்காரர்கள் சிலர் அங்கு வந்தார்கள்.

அவர்களைக்கண்ட காளிவர்மன் உங்கள் எல்லோருக்கும் கை, கால் கள் நன்றாகத்தானே இருக்கின்றன. கொள் ளைக்காரர்கள் உங்கள் ஊருக் குள் வந்த போது நீங்கள் எல்லாம் ஒன்று கூடி அவர்களை எதிர்த்து அடித்து விரட்டாமல் பயந்து ஓடிவிட் டீர்களே! உங்களுக்கு வெட்கமாய் இல்லை? என்று கேட்டான். அதைக்கேட்டு அவர்கள் எல்லோரும் தலை குனிந்து கொண்டார் கள். கிழவன் நடந்ததை எல்லாம் அவர் களிடம் கூறி இந்தச் சுற்றுவட்டார இளைஞர்கள் எல்லாம் இந்த வீரனை தலைவனாக ஏற்று போர்க்கலையைக் கற்க வேண்டும். அப்போது கொள்ளைக் காரர்களை அழிக்கமுடியும். எவ்வளவு நாட்களுக்குத்தான் நாம் கொள்ளைக் காரர்களுக்குப் பயந்துகொண்டே யிருப்பது என்றான்.

காளிவர்மனும் பெரியவர் சொல்லி விட்டார். அதன்படி நடந்து கொள் ளைக்காரர் பயமே இல்லாது செய் யுங்கள். இந்தக்கொள்ளைக்காரனை விசாரித்தால் கொள்ளைக்காரர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்துவிடும். நான் சில நாட்கள் உங்கள் ஊரிலேயே இருந்து இப்பகுதியில் இருந்து இப் பகுதியிலுள்ள இளைஞர்களு க்கு போர்க்கலைப் பயிற்சியளிக்கிறேன். அவர்களைப்பிடித்து ஒழிக்கட்டும் என்றான்.

எல்லோரும் அதன்படி நடப்பதா கக்கூறி காளிவர்மனைத் தன்னூ ருக்கு அழைத்துச்சென்றார்கள். அப்பகுதி முழுவதிலும் இளைஞர்களுக்கு காளி வர்மன் பயிற்சியளிக்கப்போவது அறிவிக் கப்பட்டது.பல இளைஞர்கள் பயிற்சி பெற அந்த ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். காளிவர்மனும் அவர்களுக்கு போர்க் கலையில் நல்ல பயிற்சியளித்தான். அதன் பின் காளிவர்மனின் தலைமையில் கொள் ளைக்காரர்களை வேட்டையாடிப் பிடித்து ஒழிக்கும் வேலை ஆரம்பமாகியது. பல கொள்ளைக்காரர்கள் கொல்லப்பட்டார் கள். சிலர் பிடிபட்டார்கள். வேறு சிலர் தப்பி அண்டைநாட்டிற்கு ஓடிப் போனார்கள்.

இதனால் திருப்தியடைந்த காளி வர்மன் அந்த ஊராரிடம் விடை பெற் றுக்கொண்டு தலைநகருக்கு புறப்பட் டான். பதினைந்து நாட்கள் பயணஞ் செய்து அவன் ஒருநாள் உச்சிவேளை யின் போது சந்திரசீலா நகர எல்லையில் அடி யெடுத்துவைக்கையில் அரசாங்க வீரர்கள் அவனைச்சூழ்ந்து கொண்டார்கள். அவர்களின் தலைவன் அவனைப்பார்த்து கோபமாக அடே! நீதான் காளிவர்மன் என்பவனா? கொள்ளைக்காரர்களை அண்டை நாட்டுக்கு விரட்டிய சூரப்புலி நீதானா? என்று தன் வெறுப்பைக் காட்டிய வாறே கேட்டான்.

காளிவர்மனும் ஆஹா! கொள்ளைக் காரர்களை நம் நாட்டிலிருந்து விரட் டிய எனக்கு இப்படியொரு வரவே ற்பா? எனது நற்பணிக்கு இதுவா பரிசு? என்று கேட்டான். அதற்கு அத்தலை வன் அடே! நீ செய்தது நற்பணி யல்ல. ராஜதுரோகம். ஓடிப்போன கொள் ளைக்காரர்கள் அண்டை நாட்டில் கொள் ளையடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்நாட்டு மன்னனோ நம் மன்னர்தாம் கொள்ளைக்காரர்களைத்தூண்டிவிட்டு அவ்வாறு செய்யச்சொன்னதாக எண்ணி நம்நாட்டின்மீது படையெடுத்து வரப்போகிறானாம். இப்படிப்பட்ட நிலைமை உருவானதற்கு நீதான் காரணம் என்றான். காளிவர்மன் இதென்ன பிதற்றல்? நான் துரோகியில்லை எனக்கூறவே நான்கு வீரர்கள் அவனைப்பிடித்து அவனது கை, கால்களைக் கட்டி குதிரைமீது போட்டுக்கொண்டு உற்சாகத்துடன் சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உரிமைக்காக நாம் மட்டுமே குரல் கொடுக்க வேண்டியுள்ளது

## அனைவரும் ஒன்றிணைய வேண்டும் வலியுறுத்கிறார் சிறிதரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுடைய அனைத்தையும் காலம் காலமாக அழித்து வரும் பேரினவாத அரசு தற்போது தமிழர்களின் கல்வியினையும் அழிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது பொருளாதாரம் சுரண்டப்படுகின்றது. நிலம் அபகரிக்கப்படுகின்றது. தமிழர்களின் ஜனநாயக குரல் நசுக்கப்படுகின்றது. எமது மனித வளம் அழிக்கப்பட்டு வருகின்றது. இவை எல்லாவற்றினையும் மேற்கொண்டு வரும் அரசு தற்போது மீண்டும் தமிழர்களின் கல்வியை கொலை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அதன் வெளிப்பாடுதான் யாழ். பல்கலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைதியின்மை, மாணவர்களின் கைதுகள், மாணவர்களை விடுவிக்கும் வரையில் பல்கலை. செயற்படாது. இதனால் தமிழர்களின் கல்வியே பாதிப்படையப் போகின்றது.

கிளிநொச்சியில் இராணுவத்தில் சேர்த்துக் கொல்லப்பட்ட 13 பெண்களுக்கு உளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிவில் அமைப்புக்கள், வர்த்தக மன்றங்கள், பெருமளவிலான பெண்கள் அமைப்புக்கள் எல்லாம் உள்ளன.

ஆனால், ஒரு அமைப்புக் கூட இப் பெண்களுக்காக குரல் கொடுக்கவில்லை என்பதுதான் வேதனையான விடயம்.

எமது சகோதரிகள், எமது இரத்த உறவுகளுக்கு குரல் கொடுப்பதற்கு யாரும் இல்லையா?

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருக்கக் கூடிய ஓரளவான ஒற்றுமையினை கூட தமிழர் பிரதேசங்களில் முஸ்லிம்களை வலுக்கட்டாயமாக குடியமர்த்தி சீர்குலைக்கப்படுகின்றது. இந்த அரசாங்கம் தற்போது யாழ். பல்கலைக்கழகம் மட்டும் இயங்காத நிலையில் உள்ளது.

ஆனால், நாட்டின் அனைத்து பல்கலைக்கழகமும் இயங்குகின்றது. எமது மாணவர்களின் விடுதலைக்காக நாமே போராட வேண்டியவர்களாக உள்ளோம். எனினும் யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் மட்டும் தற்போதும் இயங்குகின்றது. இதற்கு அப்பீடத்தில் உள்ள விடுதியின் அச்சுறுத்தல் பாணியிலான, செயற்பாடே காரணமாகும்.

ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்திற்கு கூட இவ் அரசு வன்முறையினை பிரயோகித்து அடக்கப்பார்க்கின்றது.

தமிழ் மக்களின் உரிமைக்காக போராட வேண்டியவர்கள் நாங்கள். எனினும் மக்கள் வாக்களித்து உயர்த்தி விட்ட எம் பிரதேச தலைவர்கள், மாகாண சபைத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இவ்வாறான உரிமை கோரும் போராட்டங்களில் கலந்து கொள்வதில்லை. எதிர்வரும் காலங்களில் இவ்வாறு இல்லாது அனைவரும் பங்கு பற்றி எமது உரிமைகாக உரத்த குரல் கொடுக்க வேண் டும் என அ வர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# பாரத லக்ஸ்மன் கொலை; சந்தேக நபர்களுக்கு பிணை

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சுமார் ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை அனுபவித்து வந்த சந்தேக நபர்களில் ஐவருக்கு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.

தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மஞ்சுள பிரசாத் ஹெட்டியாராச்சி, கே.ஏ.லங்கா ரசாஞ்ஜன, நாலக்க சஞ்சீவ, தரிந்து அசங்க மற்றும் பாரத லக்ஸ்மனின் பாதுகாப்பு உத்தியோகத்தரான ஆர்.காமினி ஆகியோருக்கே இவ்வாறு பிணையில் செல்ல அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. (அ-2)




★ 1783-ஜோர்ஜ் வோஷிங்டன் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகினார்.

★ 1914-முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்துப் படைகள் கெய்ரோவில் தரையிறங்கின.

★ 1916-முதலாம் உலகப் போர்: எகிப்தின் சினாய்க் குடாவில் கூட்டுப் படைகள் துருக்கியப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் வெற்றி பெற்றன.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய இராணுவம் வேக் தீவைக் கைப்பற்றியது.

★ 1947-முதலாவது டிரான்சிஸ்டர் பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

★ 1948- பிரதமர் டோஜோ உட்பட ஏழு ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளுக்கு டோக்கியோவின் சுகோமோ சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

★ 1954-முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

★ 1958-டோக்கியோ கோபுரம் உலகின் மிகப் பெரிய இரும்பினாலான கோபுரம் திறக்கப்பட்டது.

★ 1972-நிக்கராகுவா நாட்டின் தலைநகர் மனாகுவாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

★ 1972-தென்னமெரிக்காவில் ஆண்டீஸ் மலைத் தொடரில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிர் தப்பிய 16 பேர் 73 நாட்களுக்குப் பின்னர் காப்பாற்றப்பட்டனர்.

★ 1979-சோவியத் படையினர் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர்.

★ 1986-எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம் டிக்ரூட்டன், ஜீனாயோகர் ஆகிய விமானிகளுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.

★ 1990-88% சிலொவேனிய மக்கள் யூகோசெலாவியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

★ 2004-தெற்குப் பெருங்கடலில் உள்ள மேற்குறி தீவில் 8.1 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 2005-அசர்பைஜான் விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் பக்கூ நகரில் வீழ்ந்து நொருங்கியதில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2005-சாட் சூடானுடன் போரை அறிவித்தது.

### பிறப்புக்கள்

★ 1807-அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய உரோமன் கத்தோலிக்க மறைப்போதகர் (இ.1870)

★ 1902-சரண் சிங், இந்தியக் குடியரசின் 7 ஆவது பிரதமர் (இ.1987)

### இறப்புக்கள்

★ 1907-பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியியலாளர் (பி.1824)

★ 1972-அந்திரே தூப்பொலியெவ், சோவியத் விமான வடிவமைப்பாளர் (பி.1888)

2004-பி.வி.நரசிம்மராவ், ஒன்பதாவது இந்தியப் பிரதமர் (பி.1921)

**பி.வி.நரசிம்ம ராவ்**



பி.வி. நரசிம்ம ராவ் இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக பணியாற்றியவர். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இவர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர். தென் இந்தியாவைச் சேர்ந்த முதல் இந்தியப் பிரதமர் இவரே.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான ராவ் 1962 தொடக்கம் 1971 வரை மத்திய அமைச்சரவையில் பங்கு வகித்ததுடன் 1971 தொடக்கம் 1973 வரை ஆந்திர பிரதேச மாநிலத்தின் முதல்வராகவும் பதவி வகித்தார். பின்னர் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து மத்திய அமைச்சராக விளங்கினார்.

1991 இல் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராவ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வாண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ராவ் பிரதமரானார். ஐந்து ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்தார். 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததால் இவர் பதவி இழக்க நேர்ந்தது. தனது 83 ஆவது வயதில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ராவ் மாரடைப்பால் காலமானார்.

# இயற்கை அனர்த்தத்தை அடுத்து தலதாமாளிகையில் பூசை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலையை அடுத்து தெய்வ ஆசி வேண்டி கண்டி சிறி தலதாமாளிகையில் விசேட சமய நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு இன்று தலதாமாளிகையில் இடம்பெறவுள்ளது.

நாட்டின் தற்போதைய இயற்கை அனர்த்தம் மற்றும் இன்னும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக மூன்று பீடங்களையும் சேர்ந்த மகா நாயக்க தேரர்களது ஆலோசனைப்படி இது நடைபெறவுள்ளது.

தலதாமாளிகையின் மங்குல் மடுவயில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியா, பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் சீனா உள்ளிட்ட பல நாடுக ளைச் சேர்ந்த பௌத்த மத குருமார்கள் இதில் பங்குகொள்ளவுள்ளனர். (அ-2)

# தனியார் ஊழியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும்

## தொழில் அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சின் செயலாளர் டபிள்யூ. ஜே.எல்.யூ.விஜயவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி அமுலுக்கு வரும் வகையில் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான வர்த்தமானி பிரசுரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பள கட்டுப்பாட்டுச் சபையுடன் கடந்த சில மாதங்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாக சம்பள அதிகரிப்பு சாத்தியப்பட்டுள்ளது. இதன் மூலம் பெரும்பாலான தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் 30 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட சதவீதத்தால் அதிகரிக்கும்.

சம்பளக் கட்டுப்பாட்டு சபைகளுடன்தொடர்ந்துபேச்சுவார்த்தைகள்முன்னெடுக்கப்படுகின்றன. அவை பூர்த்தியானதும் சம்பளம் மேலும் அதிகரிக்கும் என தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமுத்திரத்தில் தொடரும் ஆதிக்கப்போட்டி

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் நான்கு நாள் இலங்கைப் பயணத்தை 19.12.2012 ஆரம்பித்துள்ளார். இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாக கடந்த ஜூன் முதலாம் திகதி பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், ஜெனரல் பிக்ரம் சிங் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது பயணம் இதுவாகும்.

இவர் இந்திய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை விரிவுபடுத்திக் கொள்வதற்காக நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிஅஇருந்தார்.

அவையெல்லாம் இந்தியாவுடன் தரைவழி எல்லைகளைக் கொண்ட நாடுகள் என்ற வகையில், தரைவழி எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பிலுள்ள இராணுவத்தின் தளபதி என்ற வகையில் அதற்கு அதிக முக்கியத்துவம் இருந்தது.

ஆனால், இலங்கையுடன் தரைவழி எல்லை எதையும் இந்தியா கொண்டிராத நிலையில் இந்திய இராணுவத் தளபதியின் இந்தப் பயணம் அதைவிட முக்கியத்துவம் வாய்ந்ததாக புதுடெல்லியால் பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக 2010 செப்ரெம்பரில் அப்போதைய இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி.கே.சிங் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதற்குப் பின்னர் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் கழித்தே, இந்திய இராணுவத் தளபதி ஒருவர்



இலங்கைக்கு வந்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர, இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி.கே.சிங், கொழும்பு வந்தபோது இருந்த சூழலை விடவும் வித்தியாசமானதொரு சூழ்நிலையில்தான் இப்போதைய இந்திய இராணுத் தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் இங்கு வந்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, புதுடெல்லிக்கு பயணம் மேற்கொண்டதை அடுத்து இந்திய இராணுவத் தளபதி மேற்கொள்கின்ற ஒரு சம்பிரதாய ரீதியான பயணமாக மட்டும் இதைக்கொள்ள முடியாது.

ஏன்னெறால், இந்திய இராணுவத் தளபதியின் வருகையின் நோக்கம், சம்பிரதாய விடயங்களுக்கு அப்பாற்பட்டது என்பதை புதுடெல்லியில் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் வெளியிட்ட தகவல்களில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

கடந்தவாரம் காலியில் நடந்த 28 நாடுகள் பங்குகொண்ட கடற்பாதுகாப்புக் கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, இந்து சமுத்திரத்தில் சீனாவின் தலையீட்டை நியாயப்படுத்திக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் சீனாவின் இராணுவ, பொருளாதார, அரசியல் தலையீடுகள் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளால் அச்சுறுத்தலுடன் பார்க்கப்படுவதாகவும் அவர் சாடியிருந்தார்.

இந்தியத் தரப்பினால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமைந்திருக்க முடியாத அந்த உரை நிகழ்த்தப்பட்ட சில நாட்களில் இந்திய இராணுவத் தளபதியின் வருகை நிகழ்ச்சி நிரல் பொருந்திப்போனது ஆச்சரியமானதே.

சீனா தொடர்பாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச வெளியிட்ட கருத்துக்கும் இந்திய இராணுவத் தளபதியின் இந்தப் பயணத்துக்கும் எவரேனும் முடிச்சுப் போடமுடியாது. இரண்டும் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டவை.

ஆனால், சீனா, இந்தியா என இரண்டு நாடுகளின் இராணுவ ஒத்துழைப்பு உதவிகளையும் பெற்றுக்கொள்வதில் இலங்கை உறுதியாகவே உள்ளது. இப்போதைய நிலையில் அரசியல், இராஜதந்திர ரீதியாக புதுடெல்லிக்கும் கொழும்புக்கும் இடையில் ஒருவித ஊடல் இருந்தாலும் பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற விவகாரத்தில் அத்தகைய நிலை இல்லை என்றே கருதலாம்.

ஏனென்றால், சீனாவுடன் நெருக்கமாக உள்ள இலங்கையை எப்போதும் தன் பிடியில் இருந்து நழுவாமல் பார்த்துக் கொள்வதற்கு இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்பே உதவும் என்று இந்தியா வலுவாக நம்புகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது இலங்கைக்கு சீனாவே பிரதான ஆயுத விநியோக நாடாக இருந்து வந்தது. ஆனாலும் இந்தியாவினது பாதுகாப்பு ஒத்துழைப்பும் உதவிகளும் இலங்கைக்கு அவசியம் தேவைப்பட்டன.

தற்பாதுகாப்பு ஆயுதங்கள் என்ற வகையில் இந்தியாவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஆயுதப் பங்களிப்புக்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் வான்படையின் அச்சுறுத்தல் எழுந்தபோது எல்-70 ரகத்தைச் சேர்ந்த 24 விமான எதிர்ப்புப் பீரங்கிகள், இந்திரா இரகத்தைச் சேர்ந்த இருபரிமாண ரேடர்கள், 10 கண்ணி வெடிப் பாதுகாப்பு வாகனங்கள், 11 கண்காணிப்பு ரேடர்கள் என்பனவற்றை இலங்கைக்கு இந்தியா வழங்கியிருந்தது.

கடலில் பாதுகாப்பை வலுப்படுத்த ஆழ்கடல் ரோந்துப் படகுகளையும் கடற்புலிகளின் நடமாட்டங்கள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களையும் இலங்கையுடன் இந்தியா பகிர்ந்து கொண்டது. அதுதவிர, விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட்ட படையினரின் கணிசமானோர் இந்தியாவில் பயிற்சி பெற்றவர்கள்தான்.

மாலைதீவு, மொறிசியஸ், மொங்கோலியா, பொட்ஸ்வானா, உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான் போன்ற பல நாடுகளின் படையினருக்கு இந்தியா பயிற்சி அளித்து வருகின்ற போதும், அவர்கள் எல்லோரையும்விட இலங்கைப் படையினருக்கே இந்தியா அதிக பயிற்சிகளை வழங்குகிறது.

இந்தியாவின் வெவ்வேறு பயிற்சி நிலையங்களில் ஆண்டுக்கு 800 தொடக்கம் 900 வரையான இலங்கைப் படையினர் பயிற்சி பெறுகின்றனர்.

டேராடூன் இராணுவப் பயிற்சி மையம், மிசோராமில் கிளர்ச்சி முறியடிப்பு மற்றும் காட்டுப் போர் முறைப் பாடசாலை, மகாராஷ்டிராவில் உள்ள ஆட்லறிப்பயிற்சிப் பாடசாலை ஆகியவற்றில் இலங்கை இராணுவத்தினருக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இப்போதும் அளிக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டில் 820 இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளித்த இந்தியா, இந்த ஆண்டில் 870 படையினருக்குப் பயிற்சி அளிக்கிறது. இந்தியாவில் மட்டுமன்றி, கண்டியில் கடந்த 2009 பெப்ரவரியில் இராணுவப்புலனாய்வுப் பாடசாலையை உருவாக்குவதற்கும் இந்தியா உதவியது. அங்கு இந்திய இராணுவத்தின் 10 குழுக்கள் பிற்சிகளை அளித்து வருகின்றன. இந்த உதவி, அடுத்த ஆண்டு



டிசெம்பர் வரை தொடரும்.

இதற்கிடையே, இந்திய- இலங்கை இராணுவங்களின் சிறப்புப் படையினரின் 21 நாள் போர்ப்பயிற்சிகள் இந்தியாவில் இப்போது இடம்பெற்று வருகின்றன. ஹிமாசல் பிரதேசத்தில் உள்ள நஹான் என்ற இடத்தில் இந்தப்பயிற்சிகள் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகின. வரும் 24 ஆம் திகதி முடிவடையவுள்ளன. கிளர்ச்சி முறியடிப்பு அனுபவங்களை இதில் இரு நாட்டுப்படையினரும் பகிர்ந்து கொள்கின்றனர்.

இவ்வாறு எல்லா மட்டங்களிலும் இந்தியா-இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு உறுதியானதாக இருந்தாலும், அதில் இந்தியா திருப்தி கொள்ளவில்லை. காரணம், சீனா மற்றும் பாகிஸ் தானுடன், இலங்கை கொண்டுள்ள நெருக்கமான உறவுகள்தான்.

இந்தியாவுக்கு போட்டியாக இந்த நாடுகள், இலங்கையுடன் நெருங்கிப் போகின்றன. அல்லது உதவிகளை அள்ளி வழங்குகின்றன. இந்தப் போட்டியை சமாளித்து இலங்கையை தன்பக்கத்தில் வைத்துக் கொள்வதற்கு இந்தியா தன்னாலான முயற்சிகளை எடுத்து வருகிறது.

அதனால்தான், தமிழ்நாட்டின் எதிர்ப்புகளையும் மீறி இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளை இந்தியா வழங்கி வருகிறது. சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளை நெருங்கவிடாமல் தனது அரவணைப்பில் இலங்கையை வைத்துக்கொள்ள இந்தியா எவ்வளவு முயன்றாலும் அதில் வெற்றி பெறுவது இலகுவான காரியமல்ல. ஏனென்றால், இந்துசமுத்திரத்தின் முத்தாக உள்ள இலங்கை இந்து சமுத்திரத்தில் ஆதிக்கப்போட்டியில் குதித்துள்ள சீனாவுக்கும் மிக முக்கியமானது. எனவே, இலங்கையைக் கைக்குள் போட்டுக்கொள்வதற்கு இந்த நாடுகளுக்கிடையில் நடக்கும் போட்டி முடிவுக்கு வந்து விடப்போவதில்லை. இது தொடரப்போகிறது. இதையே இலங்கையும் விரும்பும்.

சீனா, பாகிஸ்தான் உறவுகளை உடைத்துக்கொள்வது ஒன்றும் சுலபமில்லையென்பது இந்திய இராணுவத் தளபதிக்கு இப்போதைய இலங்கைப் பயணம் கண்டிப்பாக உணர்த்துவதாக அமையும்.

கே.சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு 5 இலட்சம் அமெ.டொலர் ஒதுக்கீடு

## அமெரிக்க அரசாங்கம் வழங்கியது

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகளால் மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களை தடுப்பதற்கும் அவை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் அமெரிக்க அரசாங்கம் 5 இலட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியாக வழங்கியுள்ளது.

முல்லைத்தீவில் மீளக்குடியமர்ந்த சமூகங்களை சேர்ந்தவர்கள் இந்த வாரம் முதல் சர்வதேச அபிவிருத்திகளை ஐக்கிய அமெரிக்க முகவர் அமைப்பு மற்றும் ஆயுதக் களைவு மற்றும் குறைப்பிற்கான இராஜாங்க திணைக்கள அலுவலகம் ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்ட கண்ணிவெடி அபாயக் கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்றவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் யுனிசெப் நடைமுறைக்கிடப்படும் கண்ணிவெடி அபாயக் கல்வியானது பாதுகாப்பான மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தை மீள நிலைநிறுத்துதல் ஆகியவற்றுக்கு துணைபுரியும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருகின்றதொன்றாகும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

முன்னாள் மோதல் வலயங்களில் வாழும் சமூகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கண்ணிவெடி அபாயக் கல்வியானது முதற்தேவையானதொன்றாகும்.

கண்ணிவெடி சூழ்ந்த பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மற்றும் அங்கு சென்று வருகின்ற மக்கள் ஆகியோருக்கு கண்ணிவெடி அபாயக்கல்வியை வழங்குவதனூடாக வரக்கூடிய ஆபத்தை குறைப்பதே எமது நோக்கமாகும் என யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜேம்ஸ் பெட்னர் தெரிவித்தார்.

மோதலால் பாதிக்கப்பட்ட வலயங்களில் அதிகமான குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வரும் நிலையில் கண்ணிவெடி மற்றும் யுத்தத்தில் வெடிக்காத பொருட்களினால் எதிர்கொள்ளக்கூடிய அபாயங்களும் அதிகரிக்கும்.

இதனால் தொடர்ச்சியான கண்ணிவெடி அபாயக்கல்வியானது குடும்பங்களை பாதுகாப்பதற்கு அவசியமானதாகும் என யுனிசெப் அமைப்பின் பிரதிநிதி ரேஸா ஹொஸைனி தெரிவித்தார்.

இந்த முயற்சியானது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான கண்ணிவெடி பிரதேசங்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கும் சமூக மற்றும் பாடசாலைகளை மையமாக கொண்ட கண்ணிவெடி அபாயக் கல்வியை வழங்கவும் கிராமங்களுக்கான கண்ணிவெடி செயற்றிட்டத்தை வடிவமைக்கவும் துணைநிற்கும் என்றும் குறித்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

## பண்டிகை காலத்தில் விசேட போ.வ.சேவை

(கொழும்பு)

பண்டிகைக்காலத்தையொட்டி மேலதிக பேருந்துகள் மற்றும் புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி 24 மணிநேரமும் செயற்படும் வகையில் நேற்று முன்தினம் முதல் தூரஇடங்களுக்கான மேலதிக பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கூறியுள்ளது.

உற்சவ காலத்தில் பயணிகளிடம் கூடுதல் கட்டணம் அறவிடும் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதனை கவனிக்க கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த உள்ளதாகவும் ஆணைக்குழு தலைவர் றொசான் குணவர்த்தன கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரை மேற்படி விசேட பேருந்து இடம்பெறும். இதேவேளை பண்டிகைக்காலத்தையொட்டி 6 மேலதிக புகையிரதங்கள் சேவையில் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

## பண்டிகைக்காலத்தில்

# அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படமாட்டாது

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நத்தார் மற்றும் புத்தாண்டு காலப் பகுதியில் எந்தவொரு அத்தியாவசிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இக்காலப்பகுதியில் எந்தவொரு அத்தியாவசியப்பொருட்களுக்கும் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களுக்கு மூன்று மாதங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் எம்மிடம் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொருட்களை பதுக்கி செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு எவராவது முயற்சி செய்வாராயின் அவர்களை தேடிக் கண்டுபிடிப்பதற்கும் விசேட வேலைத் திட்டமொன்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருட்களின் விலையை அதிகரித்தல், காலம் கடந்த பொருட்களை சந்தைப்படுத்தல், பொருட்களின் நிறையை குறைத்து விற்றல், தரம் குறைந்த பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

தற்போது எமது கையிருப்பில் சீனி 50 ஆயிரம் மெற்றிக்தொன்கள், பி வெங்காயம் 30 ஆயிரம் மெற்றிக் தொன்கள், பருப்பு 20 ஆயிரம் மெற்றிக் தொன்கள், அரிசி சுமார் 3 இலட்சம் மெற்றிக் தொன்கள் உட்பட சகல பொருட்களும் உள்ளன.

இவை எமது நாட்டுக்கு மூன்று, நான்கு மாதங்களுக்கு போதுமானவை என்றும் அவர் கூறினார்.

நத்தார் மற்றும் புத்தாண்டு காலப் பகுதியில் அத்தியாவசியப் பொருட்களை சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

நாட்டு மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை பெற்றுக் கொடுப்பதே இந்நிலையங்களின் பிரதான பணி என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# ஆஸி. செல்ல முயற்சித்தவர்கள் சிலாபக் கடற்பரப்பில் கைது

(சிலாபம்)

சட்டவிரோதமாக படகுமூலம் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த 26 பேர் சிலாபம் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மீன்பிடி படகொன்றில் சட்டவிரோதமாக பயணித்துக் கொண்டிருந்த போது நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இந்தப் படகில் சிங்களவர்களும் தமிழர்களும் பயணம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஐந்து பெண்களும் ஏழு சிறுவர்களும் அடங்குகின்றனர். யாழ்ப்பாணம், மாரவில, நீர்கொழும்பு, சிலாபம், வவுனியா ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மோதர துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# பாடப்புத்தகங்கள் சேதமாகிய மாணவர்களுக்கு புத்தகங்கள்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு ஆகியவை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் சேதமடைந்திருக்குமாயின் அம்மாணவர்களுக்கு புதிய பாடப் புத்தகங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாகாண கல்வி வலயங்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஊடாக இது தொடர்பான விபரங்கள் தற்போது திரட்டப்படுவதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் திஸ்ஸ ஹேவா விதாரண கூறியுள்ளார்.

குறித்த அனர்த்தம் காரணமாக சேதமடைந்துள்ள பாடப்புத்தகங்களின் முழுமையான விபரத்தை இந்நடவடிக்கை மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என நாம் நம்புகின்றோம் என்றும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்து கிடைக்கப்பெறும் விபரங்களுக்கு ஏற்ப பாடப் புத்தகங்களை விநியோகிக்கவென தனியான பிரிவொன்றை நேற்று முன்தினம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் ஆரம்பித்ததாகவும் இதற்கு பொறுப்பாக விநியோகப் பிரிவின் உதவி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)






தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர் கழக சம்மேளன உறுப்பினர்களுக்கான மூன்று நாட்கள் தலைமைத்துவப் பயிற்சி அண்மையில் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பயிற்சியில் கலந்து கொண்ட நிர்வாக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தனங்கிளப்பு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சக்கணக்கான மக்கள் வன்னியில் கொல்லப்படவில்லை

## பி.பி.சி.செய்தியாளரின் குற்றச்சாட்டை மறுத்தது இராணுவம்

(கொழும்பு)

**போர் இடம்பெற்ற காலத்தில் படையினர் இலட்சக்கணக்கான தமிழ் ஆண்,பெண்களை கொலை செய்வதாக பி.பி.சி. ஊடகவியலாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.**

எனினும் இந்த குற்றச்சாட்டுகள் பிழையானவையென இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு பிரான்சிஸ் ஹரிசன் இலங்கையை விட்டு வெளியேறி விட்டார். லண்டனில் உள்ள பத்து பேர் வழங்கிய போலி தகவல்களின் அடிப்படையிலேயே இந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சாட்சியாளர்கள் வன்னிப் போரின் போது எந்த இடத்தில் இருந்தார்கள் என்பதினை நிரூபிக்குமாறு சவால் விடுக்கின்றோம்.

சாட்சியாளர்களில் முருகன் என்ற நபர் கடற்புலி வீரராவார். இவர் பிரான்ஸுக்கு தப்பி சென்றுள்ளார். இந்நிலையில் பிரான்சிஸ் ஹரிசனின் இந்த குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என உயர் இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கருத்து வெளியிட்டிருந்த பி.பி.சி செய்தியாளர் பிரான்ஸிஸ் ஹரிசன் ஈழம் சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் என தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூலில் இலங்கையில் போர் நடைபெற்ற போது 4 ஆண்டுகள் அங்கு இருந்தேன்.போருக்கு பின்னர் அங்கிருந்த பலர் அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர்.மிகவும் கொடூரமான இறுதிக் கட்டப் போரை நேரில் பார்த்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளான 10 பேரை நேரில் சந்தித்து அவர்களுடைய அனுபவங்களை புத்தகமாக எழுதினேன் என குறிப்பிட்டிருந்தார்.

மேலும் யுத்தம் நடைபெற்ற மாவட்டங்களான முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகியவற்றின் மக்கள் தொகை குறித்த புள்ளி விபரத்தை திரட்டியதாகவும் கூறியிருந்தனர்.

இதன்மூலம் 2006 இல் அங்கு எவ்வளவு மக்கள் வாழ்ந்தார்கள். போருக்கு பின்னர் 2010இல் உள்ள மக்கள் எவ்வளவு பேர் என்ற விடயத்தை ஒப்பிட்ட போது ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 104பேரை காணவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, ஜெனீவாவில் 14 ஆவது பூகோள கால மீளாய்வு கூட்டத்தொடரில் முன்னதான மனித வுரிமை அமைப்புக்கள் கூட்டமொன்றை நடத்தியிருந்தது. இதில் ஸ்கைப் இணையத்தளத்தில் உரையாற்றிய மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பு ஒரு இலட்சத்து 46 ஆயிரம் தமிழ் மக்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது

(அ-2)

# சீரற்ற காலநிலையால் 29 பேர் உயிரிழந்தனர்

நாட்டில் சீரற்ற காலநிலையால் பலியானவர்களின் எண்ணிக்கை 29 ஆக உயர்ந்துள்ளதுடன் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும் 24 ஆக அதிகரித்துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவநிலையம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலையினால் 16 மாவட்டங்களில் 80 ஆயிரத்து 534 குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சத்து 64 ஆயிரத்து 116 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடைமழை, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்களினாலேயே இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.இவர்களில் 56 ஆயிரத்து 677 பேர் தற்காலிக முகாம்களில் இன்னும் தங்கியிருப்பதாகவும் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் குறித்த நிலையம் அறிவித்துள்ளது.

(அ-2)

# மழையால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்கு திரும்புகிறது

மழை வீழ்ச்சி குறைந்து வரும் நிலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மலையகம் மற்றும் வடமேல் மாகாணங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

வெள்ளம் வடிந்து வருவதால் போக்குவரத்துகள் வழமைபோல இடம்பெறுவதோடு இடம்பெயர்ந்த மக்கள் படிப்படியாக வீடுகளுக்கு திரும்பி வருவதாக இடர் முகாமைத்துவ நிலையம் கூறியது.

சிலாபம் உடப்பிற்கு அருகில் உள்ள ஆணையிறக்கம் ஆற்றுவாய் வெட்டப்பட்டு வெள்ளம் கடலுக்கு பாய்ச்சப்படுகிறது.

இதேவேளை, வெள்ளம் மற்றும் மண்சரிவினை தொடர்ந்து 82 ஆயிரத்து 687 குடும்பங்களை சேர்ந்த 3 இலட்சத்து 28 ஆயிரத்து 913 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 15 ஆயிரத்து 589 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 744 பேர் 174 தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளதோடு இந்தத் தொகை நாளையாகும் போது மேலும் குறைவடையும் என இடர் முகாமைத்துவ நிலைய பேச்சாளர் சரத் லால் குமார கூறினார்.

வெள்ளத்தினால் தொடர்ந்து கிழக்கு மாகாண மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.இங்கு 54 ஆயிரத்து 685 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 11 ஆயிரத்து 775 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.இதில் 8 ஆயிரத்து 237 பேர் 41 தற்காலிக முகாம்களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் வடிந்து வருவதையடுத்து மக்கள் வீடுகளை கழுவி துப்புரவு செய்வதிலும் தோட்டங்களை சுத்திகரிப்பதிலும் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.வீதிகள், கடைகளில் உள்ள சகதிகளை அகற்றும் ப[illegible]களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு மண்சரிவினால் சேதமான பகுதிகளும் திருத்தப்படுவதாக அறியவருகிறது.

(ந-2)

# கனகபுரம் பிரதான வீதியை கவனிக்க யாருமில்லையா?

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரம் பிரதான வீதி( டிப்போ சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் வீதி நடந்து செல்வோர், வாகனங்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்போர் அனைவரும் சறுக்கி விழுந்து விபத்துக்கு உள்ளாகின்றனர்.

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மேற்குறித்த வீதியில் திடீரென சறுக்கி விழுந்த போது ஜெயபுரத்தில் இருந்து வந்த தனியார் பேருந்து திடீரென பிறேக் அடித்ததால் சறுக்குண்டு கரையில் ஒதுங்கி புதைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதுபோன்று பல விபத்துக்கள் இப்பாதையில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இதனால் தூர கிராமங்களில் இருந்து வரும்பொதுமக்களும் இவ்வீதியை அண்மித்த பகுதியில் உள்ள மக்களும் மிகவும் அவலத்திற்கு உள்ளாகின்றனர்.

போர்ச் சூழலில் மிகவும் பாதிப்படைந்த இம்மக்களுக்கு போக்குவரத்திற்கான வாய்ப்புக்கள் கூட கிடைக்கவில்லையே என அவ்வீதியை பயன்படுத்தும் மக்கள் கவலை அடைகின்றனர்.

வடக்கின் வசந்தத்தின் மூலம் இங்கு எல்லா வசந்தமும் கிடைத்துள்ளதாக அரசியல்வாதிகளால் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளூர் வீதிகளில் சில கொங்கிறீட் வீதிகளாக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுள்ளன.

ஆயினும் முக்கியமான தேவைகளை கருத்தில் கொண்டு கிளிநொச்சி நகரத்திற்கு வரும் மக்களும் இங்கிருந்து வேறு கிராமங்களுக்குச் செல்லும் மக்களும் விமானத்தில் பறந்துதான் அவ்வீதியைக் கடக்க வேண்டுமென விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீதி புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுத்து பல மாதங்கள் ஆகியும் சீர்செய்யப்படாமையால் மக்கள் இவ் அவலநிலையை சந்தித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

எனவே, உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ-3-254)

# 20 நபர்களிடம் வாக்குமூலம்


(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் குறித்து இதுவரையில் சுமார் 20 பேரிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் விஜயதாச எம்.பியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரது துப்பாக்கிகளையும் பொலிஸார் பரிசோதனைகளுக்காக கையகப்படுத்தியுள்ளனர்.

மேலும் சுவர்களிலிருந்து கைவிரல் அடையாளங்களையும் பதிவு செய்து கொண்ட பொலிஸார் அவற்றை அரசாங்க இராசயன பகுப்பாய்வு திணைக்களத்திடம் கையளித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ-2)





யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் வலிகாமம் வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## ஏமாற்றம்

பூவோடு வாழ்வேன்
பொட்டோடு இருப்பேன்
உன் மூச்சோடு
உறங்கி வசித்து வாழ்வேன்- என்று
நினைத்திருந்த வேளைதனில்
யுத்தமே
என் வாழ்வில் வந்து
சதி செய்து விட்டது

*க.செல்வமலர்*
*இடைக்காடு*

## மனைவி

அம்மாவிற்குப் பின்னர்
அரவணைத்து ஆறுதல் தந்து
அன்புகாட்டும் ஓர் ஜீவன்
மெழுகாய் தன்னை உருக்கி
வெளிச்சத்தில் எம்மை வைத்திருப்பவள்
வாழ்வின் இடையில்...
எம்முடன் இணைந்தாலும்
இறுதிவரை எம்வாழ்வில்
இரண்டறக் கலந்திருப்பவள்
மொத்தத்தில் இவளும்...
ஓர் அம்மாவே எமக்கெல்லாம்

*பழ. தவராசா*
*அல்வாய்*

## மரணப் போராட்டம்

கடல்கள் சூழ்ந்த மண்ணே!- பல
உடல்கள் புதைத்த மண்ணே!

காடு செழித்த மண்ணே!- சுடு
காடு கொழித்த மண்ணே!

சோலை கொண்ட மண்ணே!- பின்
பாலை கொண்ட மண்ணே!

புல்வெளிகள் முளைத்த மண்ணே- பின்
புதைகுழிகள் முளைத்த மண்ணே!

சில்,வண்டுகள் நிறைந்த மண்ணே!
போர் குண்டுகள் பொழிந்த மண்ணே!

வாழ பல வழிகள் தந்த மண்ணே!
பல வலிகள் தந்த மண்ணே!

மூன்று வேளையும் சிரித்த மண்ணே!- பின்
மூச்சடங்கிப்போன மண்ணே!

மலைகள் இல்லா மண்ணே!- பல
கொலைகள் கொழித்த மண்ணே!

புழுதி தோய்ந்த மண்ணே!- செங்
குருதி தோய்த்த மண்ணே!

*கு.மது*
*யாழ்ப்பாணம்*

## சிகரம் தொட்ட செந்தூரா

உயரம் பாய்வதில்
உயரத்திலுள்ள சிகரத்தை
தொட்ட செந்தூரனே
உனக்காய் ஒரு கவி

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை
ஆனால், இப்போது காத்திருக்கிறது
உனது இன்னோர் சாதனைக்கு- வரும்
சோதனைகளை சாதனைகளாக்கு

இன்று உலகில் தமிழர்களாய்
உன் பெயரும் உச்சரிக்கப்படுகிறது
தமிழனை தலை நிமிர்த்தினாய்- சிறந்த
தனையனாய் தமிழன்னைக்கு ஆனாய்

கடலைக் கந்தன் தமிழன் அவன்
யாழ்.மண்ணின் மைந்தன்- இன்று
மெல்பேர்ன் மண்ணில் உயரக்கோல் கடந்தாய்
யாழ்.மண்ணின் மைந்தனாய்

வாழ்க நீ நீடூழி தொடர்க உன் சாதனை
நாளை லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற
உசைன் போல்ட் போல...
நீயும் வெல்வாய் ஒலம்பிக்கில் வெல்வாய்

*கவிதாயினி*
*கிளிநொச்சி*

## இமயம் தொட...

உலக இச்சைக்குள்
சிக்கிய உறவுகளை
மாற்றப்பார்
அவர் மாறாவிடின்
உன்னைத் தேற்றப்பார்
உண்மை உணர்வுகளை
புரியாத மடையர் அவர்
ஒருநாள் உன்னைப் புரிந்திடுவார்
அதுவரை காத்திரு

மாவை. நா. கஜேந்திரன்

## எல்லா நாளும் கார்த்திகை

மனங்களை மயக்கும்
மகத்துவம் மிகு
மார்கழி மாதம்
கடந்து போய்க்கொண்டிருக்கிறது
ஆனால், என் மனமோ
எல்லா நாளும்
எதிர்காலக் கார்த்திகை
உன்னைப் பற்றியதாகவே
எண்ணம் கொண்டுள்ளது

*செ.ரவிசாந்*
*வீரமனை, குப்பிளான்*

# மௌனத்தின் தேடல் - 135



## ஓ மானிடனே!

உனக்கேன் இப்படி ஆசை!
இப்பூமியில் வாழ்வதற்கு
பாவப்பட்ட பூமியில்
பழி சுமப்பவர்கள் பலர்
பைத்தியக்காரனே!
நீயும் நானும் மடியலாம்!
இப்பூமித்தாய் மடியில் நண்பனே!
ஒருமுறை கையை விடு
நாம் மறுபிறவி எடுப்போம்!
புதிய வரலாறு எழுதுவோம்

வினோதன்
புங்குடுதீவு

## யார் வருவார்?

தரைநோக்கி விரைந்து வரும்
விண்கல்லின் உண்மைக்கதை
கல்நெஞ்சையும் கரையச் செய்யும்
இடைவழியில் தடைபோட்டு
நிலை நிறுத்தினால் கவலை போகும்

க.நாகராசா, நுணாவில்

## புரிந்து கொள்ளும்

கற்றுக்கொண்ட வலி
எம் தமிழர்களின் வாழ்வு
படித்து மறைந்த புதிர்
ஆட்சியின் கொடூரம்
உண்மையானவனின்
உயிர்கொண்ட வாழ்வும் ஆட்சியும்
வீரமும் கொண்ட
எம் தமிழ் இளைஞர்களில்
என்றும் சாகாதிருக்கும்

ஆர்.கே.மயூரி, குரும்பசிட்டி

## மாவீரன்

வீரத்தின் வீரனே
உன் சாதனை என்னவென்று சொல்வது
உன்னை வீரன் என்று சொல்லவா
இல்லை மாவீரன் என்று சொல்லவா

சி.வசந்தா
பிரசன்பற்று

## நம்பிக்கை

சுமையைக் கண்டு நீ
மனம் சோர்ந்து போகாதே!
மனிதா- உன்நம்பிக்கையை
கைவிடாதே
உன்சுமை நிச்சயம்
ஒருநாள்
சுகமாக மாறும்

ஞா.வதனி
குருநகர்

## மரணத்தை ஏற்கிறாயா???

வாழ்வின் சுமை
தூக்க வழியற்ற
மனிதருள்
உன் போன்ற
விண்கல் தூக்கும்
மனிதரும் உண்டா?
மனிதத்தின் மரணத்தை
தடுக்க உன் மரணத்தை
ஏற்கிறாயா???

ஜெ.கிஷோக்குமார்
அல்வாய்

## வீர விளையாட்டு

விண்ணிலிருந்து
பூமியை அழிக்க வரும்
எரிகல் இதுதானா?
இந்த அழிவில் இருந்து
மக்களைக் காக்க
கல்லை எதிர்த்து நிற்கும்
வீர மாவீரனே
நீ நீடூழி வாழ்க

பூ.பிரதீப்
திருநெல்வேலி

## நீ உயர்ந்தவன்

நாட்டை அழிக்கவந்த கல்லை
உன் அழிவைப் பாராமல்
தாங்கும் மனிதனே நீ
உள்ளத்தால் உயர்ந்தவன்

அ.மேரி அல்போன்சா
குருநகர்

## ஆணவம் கொள்கின்றாய்

மலையைக் கெல்லி
எலியைப்பிடிக்கும்
மாமல்லன் நானென
நெஞ்சை நிமிர்த்தாதே!
ஆணவம் அழிவைத்
தருமென
அறியாத சூரபதுமன்
அழிவு கண்டது
வரலாறப்பா

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## பலமான மனிதா

பாறையை தூக்கி
உடற்பலத்தை
காண்பிக்கும் மனிதா
குறைவற்ற வாழ்விற்கு
மனபலமும் தேவை
நிறைவோடு வாழ
உன்னால் முடிந்தவரை
சமுதாயத்தை தாங்கு

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## காப்பாயா

அழிவை நோக்கி
வந்த கல்லை
உன் கரத்தால்
தாங்குபவனே
உன் இனத்தை
அழிக்கின்ற சக்தியை
உன் சக்தியால்
காப்பாயா

அ. அன்ரன்
யாழ்ப்பாணம்

## வீர இளைஞன்

சீரற்ற கால மாற்றத்தினால்
வானில் உருவாகிய எரிகற்கள்
மண்ணில் வீழ்ந்து வாழும் உயிர்களை
அழிக்குமோ என அஞ்சியவேளை
பூமியில் விழவிடாது துணிந்து
தன்னிரு கைகளால் தாங்கி உயிர்களை
அழிவிலிருந்து காத்து நிற்கும் இவ்
வீர இளைஞனை வாழ்த்தி வணங்குவோம்

துரை. தென்மட்டுவில்

## ஏதை நினைக்கிறாய்

எதற்காக இதனை
தாங்குகின்றாய்
பலம் கொண்ட மனிதனே
பலத்தைக் காட்ட நினைக்கின்றாயா
இல்லை பாமரமக்களின்
உயிரைக் காக்க
நினைக்கின்றாயா

அ.றோபேட்
குருநகர்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -136



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 28.12.2012 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி நகரம் கற்பழிப்பு நகராக மாறிவருகிறது

## முதலமைச்சர் ஷீலாதீட்சித் தெரிவிப்பு

(புதுடில்லி)

டில்லியில் ஓடும் பேருந்தில் வைத்து மருத்துவ மாணவி கற்பழித்து வீசப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தலைநகர் டில்லியில் கற்பழிப்பு சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதால் முதல் மந்திரி ஷீலா தீட்சித்துக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கற்பழிப்பு சம்பவத்தை கண்டித்து பெரும்பாலான இடங்களில் பெண்கள் அமைப்பினர் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றார்கள். இந்த நிலையில் டில்லி கற்பழிப்பு தலைநகரமாக மாறிவருவதை முதல் மந்திரி ஷீலா தீட்சித் வேதனையுடன் ஒப்புக் கொண்டுள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் கூறியிருப்பதாவது,

எனது நகரம் (டில்லி) கற்பழிப்பு தலைநகரம் என்று கூறப்படுவதை விரும்பவில்லை. ஆனால் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் கற்பழிப்பு நகரமாகத்தான் மாறி வருகிறது. இந்த கற்பழிப்பு சம்பவம் மிகவும் கொடூரமானது.

எனக்கும் மகளும் மருமகளும் உள்ளனர். நகரத்தில் உள்ள அனைத்து பெண்கள் பற்றிதான் கவலைப்படுகிறேன். பாதிக்கப்பட்ட மாணவி சிகிச்சைபெறும் மருத்துவமனைக்குச் சென்றேன்.

அங்கு வைத்து பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் மற்றும் டாக்டரை மட்டும் சந்தித்து பேசினேன் என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் டில்லியில் பெண்களுக்கு எதிராக குற்றம் அதிகரித்து வருவதால் பெண்கள் தனியாக இந்தியாவுக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்க தூதரகம் இணையத்தளத்தில் அறிவுறுத்தி உள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் இந்தச் செயல் சரிதான் என்று ஷீலா தீட்சித் வேதனையுடன் ஒப்புக் கொண்டுள்ளார். (அ-2)

# நான்காவது முறையாக பதவியேற்கிறார் மோடி

குஜராத் முதல்வராக எதிர்வரும் 26ஆம் திகதி 4ஆவது முறையாக நரேந்திரமோடி பதவியேற்கிறார்.

புதிதாகத் தெரிவான பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம் நாளை மறுதினம் நடைபெறுகிறது.

அப்போது சட்டப்பேரவை பா.ஜ.க. தலைவராக மோடி தெரிவு செய்யப்படவுள்ளார்.

இந்த கூட்டத்தில் பா.ஜ.க. மூத்த தலைவர் அருண் ஜேட்லி பங்கேற்க' இருக்கிறார் என்று குஜராத் மாநில பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் விஜய் ரூபானி தெரிவித்தார்.

குஜராத், காந்தி நகரில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு நேற்று முன்தினம் வந்த மோடி தனது பதவி விலகல் கடிதத்தையும் அமைச்சரவை பதவி விலகும் கடிதத்தையும் ஆளுநர் கமலா பேனிவாலிடம் வழங்கினார்.

புதிய அமைச்சரவை பதவியேற்பதற்கான அரசியல் சாசன சட்ட ரீதியான நடைமுறைதான் இது. குஜராத்தில் மொத்தமுள்ள 182 தொகுதிகளில் 115 இடங்களை பா.ஜ.க. கைப்பற்றியது.

இது பொரும்பான்மைக்குத் தேவையானதை விட 23 இடங்கள் அதிகமாகும்என்பதுகுறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐந்து கர்ப்பிணிகள் உட்பட 16 கலைமான்கள் உயிரிழப்பு

ராஜஸ்தான் மாநிலத்தில் கோட்டா நகரில் அமைந்துள்ள வனவிலங்கு சரணாலயத்தில் பராமரிக்கப்பட்டு வந்த 16 கலைமான்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன.

வனவிலங்கு சரணாலய வைத்தியர் அகிலேஷ்பாண்டே தெரிவிக்கையில், அதிகமான குளிர் மற்றும் கல்லீரல் நோயால் மான்கள் பலியானதாக கூறியுள்ளார்.

இங்கு 21 மான்கள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் மோசமான பராமரிப்பு காரணமாக 16 மான்கள் பலியாகியிருப்பது கறுப்பு நாளாகும் என வனவிலங்கு ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதில் 5 பெண் கலைமான்கள் கர்ப்பிணியாக இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கணவரின் தற்கொலைக்கு காரணம் என்ன?

## நித்தியஸ்ரீ வாக்குமூலம்

தனது கணவர் தற்கொலை செய்து கொண்டது ஏன் என்று பிரபல பாடகி நித்தியஸ்ரீ வாக்குமூலம் அளித்துள்ளார்.

எனது கணவர் மகாதேவன் காரை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டபோது பற்றரியை மாற்றுவதற்கு செல்வதாகத்தான் சொல்லி விட்டுச் சென்றார்.

அடுத்த 10 நிமிடத்துக்குள் அவர் ஆற்றில் குதித்துவிட்டார் என்ற செய்தியை ஓட்டுநர் சுரேஷ் என்னிடம் கூறினார்.

என்னால் நம்பமுடியவில்லை. நானும் கோட்டூர்புரம் பாலத்துக்கு ஓடிச் சென்றடைந்தபோது அவரை தீயணைப்பு வீரர்கள் தேடிக்கொண்டிருந்தனர்.

அதற்கு மேல் என்னால் அங்கு நிற்கமுடியவில்லை. எப்படியும் அவர் உயிரோடு நல்லபடியாக வருவார் என்றுதான் நினைத்திருந்தேன்.

ஆனால் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி வந்தது. அவர் எதற்காக இந்த முடிவை எடுத்தார் என்று என்னால் சொல்ல முடியவில்லை.

எனது கணவர் அவரது தாயார் சாந்தா மீது அதிகமாக பாசம் வைத்திருந்தார். கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி எனது மாமியார் சாந்தா இறந்துபோன சோகம் கணவரை மனதளவில் மிகவும் பாதித்துவிட்டது.

எப்போதும் தாயாரை நினைத்தபடி மனஉளைச்சலால் பாதிக்கப்பட்டதற்காக அவருக்கு வைத்தியரிடம் சிகிச்சை அளித்து வந்தோம்.

தாயாரை பறிகொடுத்த சோகம் தான் அவரை இந்த முடிவுக்கு தள்ளிவிட்டது என்று நான் நினைக்கின்றேன்.

மற்றப்படி தனிப்பட்ட முறையில் அவருக்கும் எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றார். (ந-2)



நெற்பயிர் கருகியதால் சிவகாசி புதுக்கோட்டையில் இறந்த விவசாயி பாண்டி மனைவிக்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ ஆறுதல் கூறுவதை படத்தில் காணலாம்.

# பாரதச் செய்தி



டில்லியில் ஓடும் பேருந்தில் வைத்து இளம் பெண் ஒருவர் கொடூரமாக கற்பழிக்கப்பட்டதை கண்டித்து பெண்கள் அமைப்பினர் டில்லி ஜனாதிபதி மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்றதைப்படத்தில் காணலாம்.

# இறந்ததாக நினைத்த தந்தையை மீண்டும் சந்தித்த மகன்!

## 15 ஆண்டுகளின் பின்னர் இச்சம்பவம்

15 ஆண்டுகள் கழித்து இறந்து விட்டதாக நினைத்த தந்தையை மீண்டும் மகன் சந்தித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ராஜகோபாலன் கடந்த 1976ஆம் ஆண்டு டுபாய்க்கு வேலை தேடி சென்றார்.

இவர் 1984ஆம் ஆண்டு ஊர் திரும்பி தனது மனைவி, மகன்களை பார்த்துவிட்டு மீண்டும் டுபாய்க்கே புறப்பட்டு சென்றார்.

இதன்பின்பு தனது குடும்பத்தினுடனான உறவுகளை சற்று குறைத்துக் கொண்டார். ஏனெனில் ராஜகோபாலன் டுபாயில் ஒரு திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

மேலும் இந்தியாவில் உள்ள குடும்பத்தினர் ராஜகோபாலன் இறந்துவிட்டார் என நினைத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் அவர் இருதய பாதிப்பு மற்றும் பக்கவாத நோய் காரணமாக டுபாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அப்போது ராஜகோபாலனைப் பற்றிய விபரங்களை குடும்பத்தினருக்கு தெரிவிக்க வைத்தியர்கள் விரும்பினர். ஆனால் முகவரி எதுவும் கிடைக்காததால் இந்திய தூதரகத்தை நாடினர்.

அவர்கள் இந்தியாவில் உள்ள பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்க ராஜகோபாலனின் முதல் மனைவி இவ்விடயத்தை அறிந்தார்.

தனது கணவரை மீட்டுக்கொடுக்கும்படி வேண்டி மூத்த மகன் சுந்தர்ராஜனை அனுப்பினார்.

இந்நிலையில் அமீரக அமைப்பின் மூலமாக ராஜகோபாலன் கடந்த 17ஆம் திகதி காலை இந்தியா சென்றார்.

15 ஆண்டுகளுக்குப் பின்னர் இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட தந்தையை சந்தித்த மகன் அவரது கரங்களை வருடி வாஞ்சையுடன் வரவேற்ற காட்சி சென்னை விமான நிலையத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்சன் மண்டேலா ஆபத்தான நிலையில்

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி மண்டேலா மிக ஆபத்தான நிலையில் இருப்பதாக ஜனாதிபதி ஜேக்கப் சூமா தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா (வயது 94) உடல் நலம் பாதிக்கப்பட்டு 2 வாரத்துக்கு முன்னர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்ததையடுத்து மண்டலோவின் உடல் நிலை தேறி வருவதாக தகவல் வெளியானது. இதற்கிடையே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாநாட்டில் ஜனாதிபதி ஜேக்கப் சூமா கூறுகையில், மண்டேலாவின் நிலைமை கடுமையான கட்டத்தில் இருக்கிறது.

ஆனாலும் சிகிச்சைக்கு அவர் நன்றாக ஒத்துழைப்பு தருகிறார். எனவே சற்று சீரான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்று கூறியுள்ளார். (அ-2)

# வெளிவிவகார அமைச்சரை பரிந்துரைத்தார் ஒபாமா

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அடுத்த வெளிவிவகாரத்துறை அமைச்சர் பதவிக்கு ஜோன் கெர்ரியின் பெயரை ஒபாமா பரிந்துரைத்துள்ளார்.

அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை அமைச்சராக ஹிலாரி கிளின்டன் பதவி வகித்து வந்தார். இந்நிலையில் பதவிக்காலம் முடிவதையொட்டி புதிய வெளிவிவகாரத் துறை அமைச்சரை தெரிவு செய்யும் பணியில் ஜனாதிபதி ஒபாமா ஈடுபட்டு வந்தார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரும் வெளிவிவகார கமிட்டி செனட் உறுப்பினருமான ஜோன் கெர்ரியின் பெயரை ஒபாமா பரிந்துரைத்துள்ளார்.

ஒபாமாவின் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு உலக நாடுகளுக்கு பயணம் செய்துள்ள ஜோன் கெர்ரி அமெரிக்காவுடன் அதிருப்தி கொண் டிருந்த பல நாடுகளுடனான உறவை சீர்படுத்த பெரும் பங்காற்றியுள் ளார்.

குறிப்பாக அல்கொய்தா இயக்க தலைவர் ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் பாகிஸ்தான்- அமெரிக்கா இடையிலான கசப்புணர்வை மாற்ற ஜோன்கெர்ரி பெரும் பங்கு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)




# சடலத்தின் மீது சிறுநீர் கழித்த பாவகாரம்

## அமெ.படையினருக்கு அபதாரம்

படுகொலை செய்யப்பட்ட தலிபான்களின் சடலங்கள் மீது அமெரிக்க படையினர் சிறுநீர் கழித்தது பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் இறந்து கிடக்கும் தலிபான்களின் மீது அமெரிக்க படையினர் சிறுநீர் கழிப்பது போன்ற வீடியோ வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனையடுத்து உடனடியாக 3 அமெரிக்க கடற்படை வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் ஜோசப் சேம்பலின் என்பவரும் இக்குற்றத்தை செய்ததாகவும் புகைப்படத்திற்கு போஸ் கொடுத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

இவர் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டதால் இவரின் அதிகாரம் குறைக்கப்பட்டதோடு 500 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இந்தியர்களை மீட்க நடவடிக்கை

நைஜீரியாவில் கடற்கொள்ளையர்களிடமிருந்து கடத்தப்பட்ட 5 இந்தியர்களை மீட்க நைஜீரிய கடற்படை கப்பல் விரைந்துள்ளது.

ஜேர்மனியைச் சேர்ந்த எஸ்.பி. புருஸெல்ஸ் என்ற குறித்த கப்பல் நைஜர் டெல்டா பகுதியில் இருந்து 40 மைல் தொலைவில் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர்களில் 5 பேர் இந்தியர்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது

கடற்கொள்ளையர்கள் பயங்கர ஆயுதங்களுடன் இருப்பதாக தெரிவிக்கும் நைஜீரிய கடற்படை ,கடற் கொள்ளையர்கள் அந்த கப்பலை எங்கு பிடித்து வைத்திருக்கிறார்கள் என்பதை கண்டறிந்து பிணைக்கைதிகள் விரைவில் மீட்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளது. (அ-2)

# உக்ரைன், ரஷ்ய நாடுகளில் கடும் உறைபனி பொழிவு

## 200 பேர் உயிரிழப்பு



உக்ரைன், போலந்து, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் மிக கடுமையான உறைபனிக்கு 200 பேர் வரை பலியாகியுள்ளனர்.

மொஸ்கோவில் பெய்து வரும் உறைபனிக்கு கடந்த ஒரு வார த்தில் மட்டும் 56 பேர் பலியாகியுள்ளதுடன் 371 பேர் வரை வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற னர்.

உக்ரைனில் பெய்துவரும் உறைபனிக்கு 83 பேர் பலியாகியுள்ளதுடன் அவர்களில் 57 பேரின் சடலங்கள் வீதியோரம் கிடந்தன. இவர் கள் அனைவரும் வீடுகளின்றி வீதி யோரம் வசித்து வந்த ஏழை மக்கள் என கூறப்படுகின்றது.

இதேபோன்று கிழக்கு ஐரோப் பிய நாடான போலந்தில் 10 டிகிரி செல்சியஸ் அளவிற்கு உறைபனி பெய்கின்றது.

இப்பகுதியில் கடந்த ஒரு மாதத் தில் மட்டும் 49 பேர் குளிர்தாங்கா மல் பலியாகியுள்ளனர். இவர்களில் பெரும் பாலானவர்கள் வசிக்க வீடில் லாத ஏழைகள் ஆவர். (அ-2)

# மைக்கேல் ஜாக்சனின் கையுறைக்கு ஒருகோடி

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

மறைந்த முன்னாள் பிரபல பொப் பாடகர்மைக்கெல்ஜாக்சனின் கையுறை ஒன்று சமீபத்தில் அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் ஏலம் விடப் பட்டது.

அது ஒரு கோடிக்கு ஏலம் போனதாக ஏல மையத்தின் உரிமையாளர் நேட்டி சாண்டர்ஸ் தெரிவித்துள்ளார். திரில்லர் இசை ஆல்பத்துக்காக இவருக்கு கடந்த 1984 ஆம் ஆண்டு அமெரிக்கா இசை விருது வழங்கப்பட்டது.

அப்போது அவர் அணிந்து இருந்த கறுப்பு நிறு கையுறை தான் இந்த அளவு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை ஏலம் விடப்பட்டுள்ள மைக்கேல் ஜாக்சன் பொருட்களில் இந்த கையுறைதான் கூடுதல் விலைக்கு ஏலம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சோமாலியாவிற்கு அருகில் படகு கவிழ்ந்து விபத்து!

## 55 பேர் வரை பலியாகியிருக்கலாம்–ஐ.நா.

சோமாலியாவிற்கு அருகிலுள்ள கடலில் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 55 பேர் மூழ்கியுள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வட- கிழக்கு சோமாலியாவின் போஸாஸ்ஸோ துறைமுகத்திலிருந்து புறப்பட்ட படகே இவ்வாறு கவிழ்ந்துள்ளது. இப்படகில் அதிகளவான பயணிகள் பயணித்ததே விபத்திற்கு காரணம் எனவும் அகதிகளுக்கான ஐ.நா. முகாமையாளர் தெரிவித்துள்ளார். இப்படகில் சோமாலிய மற்றும் எதியோப்பியா நாட்டை சேர்ந்தவர்கள் பயணித்து இருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

மேலும் 23 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஐ.நாவின் ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது

## பான் கீ மூன் கண்டனம்

சூடானில் இருந்து விடுதலை பெற்றுவிட்டதாக கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட தெற்கு சூடானின் ஜோங்லெய் மாநிலத்தில் வைத்து ஐ.நா. உலங்கு வானூர்தியை இராணுவம் சுட்டு வீழ்த்தியது.

அதில் பயணித்த ரஷ்ய உறுப்பினர்கள் 4 பேர் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தெற்கு சூடான் அரசு உடனடியாக விசாரணை நடத்தி தவறு செய்தவர்களை தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஐ.நா. உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதை முதலில் மறுத்த இராணுவம் ரஷ்ய உலங்குவானூர்தியை சுட்டு வீழ்த்தியதாக கூறியது.

அதன்பின்னர் போராளிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றி வந்த சூடான் உலங்கு வானூர்தியென நினைத்து சுட்டதாக தெரிவித்தது.

நடந்த தவறுக்கு வருத்தம் தெரிவிப்பதாக இராணுவ செய்தித் தொடர்பாளர் பிலிப் ஆகர் தெரிவித்தார். (ந-2)

# எனது பெயரை கல்லூரிக்கு வைக்க வேண்டாம்- மலாலா

பாகிஸ்தானில் பெண்களின் கல்விக்காகவும் தலிபான்களுக்கு எதிராகவும் போராடிய மலாலா மீது தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதனையடுத்து பாகிஸ்தான் இராணுவம் வைத்தியசாலையில் கடுமையான காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த மலாலா தற்போது லண்டனில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் பாகிஸ்தானில் உள்ள பெண்கள் கல்லூரிக்கு மலாலாவின் பெயரை சூட்ட முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவை எதிர்த்து சுமார் 150 மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடத்தினர்.

மலாலாவின் பெயரை சூட்டினால் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும். அது எங்களுக்குத்தான் ஆபத்து என்று கூறினார்.

இந்நிலையில் தனது பெயரை சூட்டுவதற்கு மலாலாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இந்த முடிவை கைவிடும்படி வேண்டுகோளும் விடுத்துள்ளதாக கல்லூரி ஆர்வலர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.குருபரந்தாமன், அல்வாய்

வியாசர் சேர்!

இந்தக் காலத்தில் உறவுகளுக்கா, காதலுக்கா அதிக மதிப்புண்டு. இதில் எதை நேசிக்கலாம் ஐயா!

*காதலுக்கு மதிப்பிருக்கிறது. ஆனால் காதலிப்பவர்கள் சிலர் அதற்கு மதிப்பளிப்பதில்லை. உறவுகள் தான் என்றும் அழியாதது. அசைக்க முடியாதது.*

---

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

திருமண வாழ்க்கை என்பது சுகமானதா? சுமையானதா?

*திருமணம் என்பது ஒரு பாதாள உலகம். அந்த உலகிற்குள் சென்றவர் வெளியே வர ஒத்துழைப்பர் வெளியே உள்ளவர் உள்ளே போகத்துடிப்பர்.*

---

க.சி.சதாசிவம், மட்டுவில்

அன்பின் வியாசரே!

தாங்கள் ஒரு அரசியல் வாதியா?

*ஐயய்யோ அரசியல் எல்லாம் நமக்கு வேண்டாமப்பா. அரசியல் எண்டா கையத் தூக்க வேணும் கும்பிட வேணும் படத்துக்கு போஸ் குடுக்க வேணும் அதெல்லாம் நமக்கு சரிபட்டு வராதையா.*

---

சி.லக்ஷி, உடுவில்

வியா!

நீரும் நெருப்பும் நண்பர்களாக முடியுமா?

## உம் காதல் கதையை கொஞ்சம் கூறுங்களேன்?

*நீர் அணைக்காமலும் நெருப்பு சுடாமலும் இருந்தால் நிச்சயம் நண்பர்களாகலாம்.*

---

அனுஸ்கா, நுணாவில்

வியாசர் சேர்!

உம் காதல் கதையை கொஞ்சம் கூறுங்களேன்?

*காதல் என்று உருகினாள் ,பின் நட்பென்றாள், கண் இல்லையென்றாள், government Work இல்லை என்றாள், பல்சர் Bike இல்லை என்றாள், கதை சரியில்லை என்றாள், இதெல்லாம் இன்னொருவனிடம் இருக்கென்றாள், நான் சொன்னேன் அவனிடம் இல்லாததொன்று என்னிடம் இருக்கின்றது அதுதான் உண்மை அன்பென்று.*

---

இ.ஆரணி, கொக்குவில்

வியாசர் சேர்!

நம் நாடுதிருந்த வழி உண்டா?



*காணிப்பிரச்சினை தீர்ந்தாலே போதும் அரைவாசிப் பிரச்சினை தீர்ந்த மாதிரித் தான்.*

---

பொ. இளவரசி

அன்பின் வியாசரே!

காதலில் தோற்ற ஆண் தாடி வளர்ப்பான். அப்ப பெண் எதை ஐயா வளர்ப்பது?

*எதுவுமே வளராமல் இருந்தால் தான் பெண்ணுக்கு நல்லது.*

---

பா.மதனபாரதி, அல்வாய்

அன்பின் வியாசரே!

சிறிய தகப்பன் பெறாமகள் உறவு இவ்வுலகில் எப்படிப்பட்டது வியாசர் சார்?

*தகப்பன் மகள் என்பதற்கும் மேலான உறவுதான்.*

---

பிரகணன், யாழ்ப்பாணம்

வியாசர் சேர்!

யாழ்ப்பாணப் பெண்கள் ஆண்களிடம் அதிகம் எதிர்பார்ப்பது என்ன?

*அதிக Call அடிக்கடி SMS முடிஞ்சதும் Reload முடியாத...*
*இப்படி சொல்லிட்டே போகலாம்.*




எஸ்.பி. மதன்,வட அல்வையூர்

வியாசர் சேர்!

உலகிலேயே சிறந்த தொழில் எது மாமா?

## உலகிலேயே சிறந்த தொழில் எது மாமா?

*விருப்பமில்லாத மனைவியுடனும் விருப்பமில்லாத வேலையிலும் இருப்பது அர்த்தமற்றது என்பது முதுமொழி. மனதுக்குப் பிடித்த வேலை எதுவோ அதுதான் சிறந்தவேலை*

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# உடல் எடை குறைய வேண்டுமா???

இன்றைய நவீன உலகில் உடல் எடையால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. இவற்றிற்கு நமது உணவுப் பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை தான் காரணம். ஆனால், முள்ளைமுள்ளால்தான் எடுக்க வேண்டும் என்னும் பழமொழிக் கேற்ப உடல் எடையையும் உணவுகள் மற்றும் பழக்கவழக்கங்களாலேயே குறைக்கலாம்.

என்ன அது எப்படி முடியும் என்று கேட்கிறீர்களா? ஆம் முதலில் உடல் எடையை விரைவில் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தை தவிர்த்தால் இந்த உணவுகள் மற்றும் பழக்கவழக்கங்களால் நிச்சயம் குறைத்து உடலைச் சிக்கென்று வாழ்நாள் முழுவதும் வைத்திருக்க முடியும். இதை சிலர் நம்பமாட்டீர்கள். நம்பாதவர்களுக்கு கிரீன் டீ நடைப்பயிற்சி என்று ஏதாவது ஒரு செயலைக் குறிப்பிட்டு செய்தால் குறையும் என்று சொன்னால் மட்டும் தான் நம்புவீர்கள் என்றால் உடல்எடையை குறைத்துவிட்டு அந்த எடை குறைப்பதற்கான செயலை நிறுத்தி விட்டால் மறுபடியும் உடல் எடைதான் அதிகரிக்கும்.

எனவே, அந்த மாதிரியான செயல்களை நம்புவதை விட எப்போதும் நாம் செய்யும் செயல்களில் ஒரு சிலவற்றை தொடர்ச்சியாக செய்தால் நிச்சயம் உடல் எடை குறைந்துவிடும். சொல்லப்போனால் அந்த செயல்களால் நாம் சிலவற்றை சாப்பிட முடியவில்லையே என வருத்தப்படும் நிலையும் இருக்கும்.

இப்போது அந்த மாதிரியான செயல்கள் என்னவென்று பட்டியலிட்டுள்ளோம். அவை என்னவென்று படித்து தெரிந்து கொண்டு உடல் எடையை மெதுவாக குறைத்து சந்தோஷமாக வாழ்வோம்.

### உடலுக்கேற்ற எடை

உடல் எடையை குறைக்க உணவுக்கட்டுப்பாட்டில் இருக்க நினைக்கும் போது செய்ய வேண்டியது என்னவென்றால் உடல் திணிவுச்சுட்டி (BMI), உயரம், எடை போன்றவற்றை அளந்து பார்த்து நமது உடலுக்கு எவ்வளவு எடை இருக்க வேண்டும் என்று உணவு முறை நிபுணர்களிடம் ஆலோசனை பெற்று பின் அதற்கேற்றாற் போல் எடை குறைப்பதற்கான செயல்களில் ஈடுபட வேண்டும்.

### உணவு முறை வித்தியாசங்கள்

சிலர் உடல் எடையைக் குறைக்கின்றோம் என்று சாதாரணமாக உண்ணும் உணவிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக செயற்படுகின்றனர். அதாவது சில உணவுகளை திடீரென தவிர்ப்பது சில நேரங்களில் சாப்பிடாமல் இருப்பது என்று இருக்கின்றனர். இவ்வாறு திடீரென எந்த ஒரு செயலையும் செய்யக்கூடாது. எதுவானாலும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் விட வேண்டும்.

அதற்காக சாப்பிடாமலும் இருக்கக் கூடாது. சாப்பிடாமல் இருந்தால் உடல் எடை குறையாது. அதிகரிக்கத்தான் செய்யும். எனவே, சாப்பிட வேண்டும். ஆனால் அவற்றில் கவனமும் அளவும் இருக்க வேண்டும்.

### உடற்பயிற்சி

உடற்பயிற்சியை காலையில் செய்தால் தான் உடல் எடை குறையும் என்பதில்லை. எந்த நேரம் சரியானதாக உள்ளதோ அந்த நேரத்தில் தினமும் உடற்பயிற்சியை செய்து வந்தாலே உடல் எடையானது குறையும். எனவே, உடற்பயிற்சிக்கு எந்த ஒரு நேரமும் இல்லை. ஆனால் அவ்வாறு செய்யும் உடற்பயிற்சியை 30-45 நிமிடத்திற்கு மேல் செய்யக்கூடாது.

### ஸ்நாக்ஸ்

உணவு நேரத்தை தவிர மற்ற நேரங்களில் ஏதேனும் சாப்பிட வேண்டும் என்று நினைத்தால் அப்போது வேறு எந்த ஒரு சிற்றுண்டி உணவுகள், வறுத்த உணவுகள் போன்றவற்றை சாப்பிடாமல் அப்போது பிடித்த பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை சாப்பிட வேண்டும். அதிலும் அந்த பழங்கள் மற்றும் காய்கறிகளை வைத்து எவ்வகையிலும் செய்து சாப்பிடலாம் என்பதை தெரிந்து கொண்டு பசிக்கும் நேரம் அவ்வாறு செய்து சாப்பிடலாம். சொல்லப் போனால் அப்போது அவற்றை வைத்து சாண்ட்விச் செய்து சாப்பிடலாம்.

### ஆரோக்கியமற்ற உணவு

எப்போதுமே ஆரோக்கியமான உடல் எடையை குறைக்கும் உணவுகள் மட்டும் தான் சாப்பிட வேண்டும் என்று இருக்க வேண்டாம். இரண்டு அல்லது ஒரு வாரத்திற்கு ஒரு முறை வேண்டுமெனில் ஐஸ்கிறீம் போன்றவற்றை சாப்பிடலாம்.

ஏனெனில் அவற்றிலும் ஒரு சில சத்துக்கள் இருக்கலாம். எனவே, ஒருமுறை என்பதை நினைவில் வைத்துக் கொண்டு சாப்பிட்டால் நல்லது தான்.

### மன அழுத்தம்

மன அழுத்தம் கூட உடல் எடையை அதிகரித்து விடும். எனவே அவற்றை போக்க தினமும் ஒரு 30 நிமிடம் இசை கேட்பது அல்லது புத்தகம் படிப்பது அல்லது யோகா போன்றவற்றை செய்தால் அந்த மன அழுத்தத்தை குறைத்து விடலாம், உடல் எடையையும் அதிகரிக்காமல் செய்யலாம்.

### விளையாட்டு

வாரத்திற்கு ஒருமுறை பிடித்த விளையாட்டுக்களான டென்னிஸ், கால்பந்து, கைப்பந்து, ஜாக்கிங் போன்றவற்றை நண்பர்களுடனோ அல்லது குழந்தைகளுடனோ விளையாடலாம். இதனால் குழந்தைகள் அல்லது நண்பர்களுடன் நேரம் செலவழித்தது போல் இருக்கும். உடல் எடையும் குறையும் வாய்ப்பும் உள்ளது.

### தண்ணீர்

ஒரு நாளைக்கு குறைந்தது 10 டம்ளர் தண்ணீராவது குடிக்க வேண்டும். இதனால் உடலில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறி , நாம் செய்யும் அனைத்து செயல்களும் உடலில் தங்கி உடல் எடை குறையும். இல்லையெனில் அந்த அழுக்குகள் நாம் எடை குறைக்க சாப்பிடும் அனைத்து உணவுகளையும் அப்படியே வெளியேற்றி விடும். ஆகவே உடலில் உள்ள அழுக்குகளை வெளியேற்ற தண்ணீர் மிகவும் அவசியமானது.

# அழகின் இரகசியம்...

மனிதர்களில் இரண்டு ரகம் உள்ளது. எப்பொழுது பார்த்தாலும் சிரித்த முகத்துடன் எதையும் சுலபமாக எடுத்துக் கொள்பவர்கள் ஒரு ரகம். எதற்கெடுத்தாலும் பதற்றம் ஆகிகத்தித் தீர்ப்பவர்கள் ஒரு ரகம். சுலபமாக இருப்பவர்கள் என்றைக்கும் ஒரே மாதிரி இருப்பார்கள். அவர்களின் அழகு என்றைக்குமே மாறாது. உடல் நலத்திற்கும் எந்த தீங்கும் ஏற்படாது. காரணம் அவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் எப்போதும் சந்தோஷத்துடன் இருப்பதுதான். ஆனால் இரண்டாவது ரகமான பதற்றமானவர்கள் அழுது வடித்து கொண்டு வயதான தோற்றத்திற்கு தள்ளப்பட்டு விடுவார்கள். நோயும் எளிதில் தாக்கத் தொடங்கி விடும். அதற்குக் காரணம் அவர்களின் பதற்றம்தான் என்று ஆய்வு ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

### இயற்கை அழகு யாருக்கு

இயற்கை அழகு யாருக்கு கிடைக்கும்? என்கிற கோணத்தில் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ஒரு ஆய்வை மேற்கொண்டார்கள். 500 இற்கும் மேற்பட்ட இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடம் தினமும் அவர்கள் மேற்கொள்ளும் செயல்களில் இருந்து கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆய்வின் முடிவில் அடிக்கடி பதற்றமாக இருப்பவர்களைக் காட்டிலும் பதற்றம் ஆகாமல் எதையும் சுலபமாக எடுத்துக் கொண்டு சந்தோஷமாக வாழ்பவர்கள் புத்துணர்வாகவும் அழகாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

### அழகிற்கும் மனதிற்கும் தொடர்பு

அழகுக்கும் மனதிற்கும் நிறையவே தொடர்பு இருக்கின்றது. அந்த மனதை இயற்கையாக அதாவது பதற்றம் இன்றி வைத்துக் கொண்டால் முகமும் அழகாக இருக்கும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### சிந்தித்து செயற்பட....

அதனால் மனதை அமைதியாக வைத்துக் கொண்டு முதுமை நம்மை நெருங்காது விரட்டி விடுவோம்.

என்ன பதற்றமானவர்களே நடப்பது நடந்துதான் தீரும். அதை மனதில் எடுத்துக்கொள்ளாமல் சந்தோஷமாக இருங்க. ஆதலால் உங்கள் பதற்றத்தை தூக்கிப்போடுங்கள் அழகும் இளமையும் உங்களை நாடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை என்றும் தீமை என்றும் இல்லை. அவ் விதம் ஆக்குவது மனமே. -ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தேவலோகத்தில் நடந்த ஆண்டிறுதி மாநாடு

தேவலோகத்தில் ஆண்டிறுதி மாநாடு பிறவா யாக்கை பெரியோன் என்று போற்றப்படும் சிவன் தலைமையில் கூடுவதாகக் கற்பனை செய்தோம்.

உலகில் இருக்கக்கூடிய அனைத்து சமயங் களினதும் முழுமுதற் கடவுளர்கள் மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

இந்த ஆண்டில் நடந்த நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு தயாராக, துறை சார் தலைவர்கள் அங்கு பிரசன்னமாகி இருந்தனர்.

மாநாட்டின் சபாநாயகராக சித்திரகுப்தன் கடமையாற்றினார்.

உலக விவகாரங்கள் மற்றும் இலங்கை தொடர்பில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

சித்திரகுப்தன்: பரம்பொருளே! வணக்கம்.

முன்பு ஒருபோதும் இல்லாதவாறு இந்த ஆண் டில் இறைவழிபாடு பூலோகத்தில் அதிகரித்துள்ளது.

புள்ளிவிபரங்களின் படி உலகில் சிந்திக்கும் அறிவிற்கு உட்பட்ட வயதிலுள்ள சனத்தொகை யில் 94 சதவீதத்தினர் இந்த ஆண்டில் இறை வழிபாடு செய்துள்ளனர்.

இதற்கான காரணத்தை யமதர்ம தேவர் இச் சபைக்கு தெரியப்படுத்த வேண்டும்.

யமதர்மன்: சுவாமி! 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி உலகம் அழியும் என்ற கதையாலேயே கடவுளரை நினைக்காதவர்களும் மனதார வழிபட்டனர். இதன் காரணமாகவே வழிபாட்டு வீதம் அதிகரித்துள்ளது.

சித்திரகுப்தன்: சுவாமி! இலங்கையில் உள்ள மாத்தறையில் சிவப்பு மழை பெய்திருக்கிறது. இது பற்றி வர்ண பகவான் இச்சபைக்கு விளக்கம் தர வேண்டும்.

வர்ணபகவான்: சுவாமி 2009ஆம் ஆண்டில் வன்னிப் பிரதேசத்தில் பெரும்போர் நடைபெற்றது.

புதுமாத்தளன் என்ற இடத்தில் தமிழ் மக்கள் அநியாயமாக கொன்றொழிக்கப்பட்டனர்.

இதுகண்டு நாம் இரத்தக் கண்ணீர் வடித்தோம். புதுமாத்தளனில் நடந்த கொடூரத்திற்காக நாம் வடித்த கண்ணீரே மாத்தறையில் இரத்த மழை யாய் பெய்திற்று.

இதுகுறித்து இலங்கையின் தென்பகுதி மக்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுத்து அவர்களும் நிம்மதியாக வாழ வழிசெய்யாவிட் டால் மழை சிவப்பாகவும் பெய்யும் என்பதை இலங்கை ஆட்சியாளர்களுக்கு உணர்த்தவே அங்ஙனம் செய்தோம்.

சித்திரகுப்தன்: யாழ்ப்பாணத்தில் இப்போது குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது.

சிவன்: அப்படியா சங்கதி நல்ல சமாச்சாரம். யாழ்ப்பாணத்தார் குழந்தைகளை அதிகம் பெற்றுக்கொள்ள விரும்பமாட்டார்களே!

பிரமதேவரே! யாழ்ப்பாணத்தில் பிறப்பு வீதம் அதிகரிப்பதற்கு என்ன காரணம்?

பிரமன்: சுவாமி! யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர்களைவன்னிக்குஇடமாற்றம்செய்கிறாங்கள்.

வன்னி இடமாற்றம் ஆசிரியர்களுக்கு அறவே விருப்பமில்லை.

இந்த இடமாற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதாக இருந்தால் குழந்தைப்பேறு நல்ல தொரு காரணமாகும்.

ஆகவே! குழந்தைகளைப் பெற்று வன்னி இடமாற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள ஆசிரியர்கள் முடிவு செய்துவிட்டனர்.

அதன் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது.

கௌதம புத்தர்: இந்தச் செய்தியை இலங்கை அரசு அறிந்தால் அதற்கும் ஏதும் தடை போடலாம் என்பதால் பிரம்ம தேவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

யேசுபிரான்: இலங்கை ஆட்சியாளர்களைப்பற்றி புத்தபிரான் நன்றாகவே அறிந்து வைத்துள்ளார்.

சித்திரகுப்தன்: சுவாமி நேரம் மதியம் 12 மணியாகிறது.

தெய்வேந்திரமுகூர்த்தத்திற்காக இடைவேளை வழங்கப்படுகிறது.

# உச்ச நீதிமன்ற விளக்கத்தை அனைவரும் ஏற்க வேண்டும்

## ஐ.தே.க வலியுறுத்தல்

உச்ச நீதிமன்றத்தின் சட்ட விளக் கத்தை அனைத்து தரப்பினரும் ஏற் றுக் கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர் பில் அரசியல் சாசனத்தின் அடிப்படை யில் உச்ச நீதிமன்றம் சட்ட விளக்கம் அளித்திருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல் சாசனம் தொடர்பிலான சட்டவிளக்கங்களை அளிக்கும் ஏக போக அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே காணப்படுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள் ளார்.

நீதிமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றம் ஆகிய அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அதிகாரங் களைப் பயன்படுத்த வேண்டியது அவசி யமானது என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

அரசியல் சாசனத்திற்கு அதி உச்ச அதிகாரம் காணப்படுகின்றது என்பதே தமது நிலைப்பாடு என அவர் குறிப் பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்திற்கான அதிகாரங் கள் தொடர்பில் அண்மையில் திவி நெகும சட்டம் தொடர்பிலான சர்ச்சை யின்போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளதாகத் தெரிவித்துள் ளார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் பிரதம நீதியரசரை இழிவாக பேசியுள்ள தாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

24 வருட பாராளுமன்ற வாழ்க்கை யில் மிகவும் துரதிர்ஷ்டவசமான சம்பவ மாக தாம் இதனைக் கருதுவதாகவும் லக்ஸ் மன் கிரியல்ல குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# கடலை வாங்குவதைப் போல கண்ணிவெடி அகற்ற முடியாது

## 10 ஆண்டுகள் தேவைப்படும்-குணரட்ண

கடைகளில் கடலைவாங்குவதனைப் போன்று கண்ணிவெடி களை அகற்ற முடியாது என மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரகோன் தெரிவித்துள்ளார்.

கரந்தெனிய பிரதேசத்தில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக புதைக் கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்று வதற்கு பத்தாண்டு கால அவகாசம் தேவைப்படும். நேர்மையாக செயற் படும் தலைவர் ஒருவர் இருந்த காரணத் தாலேயே வடக்கு யுத்தத்தை வெற்றி கொள்ள முடிந்தது.

பயங்கரவாதிகள் 30 ஆண்டுகளாக அழிவுக்கு உட்படுத்திய பிரதேசங்களை ஒன்றிரண்டு நாட்களில் வழமைக்கு கொண்டு வர முடியாது.

வடக்கு கிழக்கில் இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உண் மையை மூடி மறைத்து குற்றச்சாட்டு களை முன்வைக்கின்றனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிகளை துரித கதியில் மேற்கொள்ள முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந-2)

## குடும்பஸ்தர் மீது தாக்குதல்

கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தலையில் படுகாயமடைந் துள்ளார்.

நேற்று மாலை 4.00 மணியள வில் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்ப வத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கே.யோகராஜா (வயது 51) என்பவரே காயமடைந்தவராவார்.

இனந்தெரியாத சிலரே இவர் மீது தாக்குதலை மேற்கொண்டதாகத் கூறப்படுகிறது.

தலையில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-8)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### நல்லூரான் திருவடி

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக் காமெடி- கிளியே
கவலை எல்லாம் போகுமெடி

எத்தொழிலை செய்தாலென்
ஏதவக்தை பட்டாலென
கர்த்தன் திருவடிகள்- கிளியே
காவல் அறிந்திடடி



# இயேசுவின் பிறப்பில் நாம் வாழ எம்மை சாத்தியமாக்குவோம்

திருவருகைக் காலத்தில் இருக்கும் நமக்கு இது கிறிஸ்து பிறப்பு விழா வுக்கு முன்னான கடைசி ஞாயிறு இன்றாகும். இது மனித உடலேற்பு மறைபொருளான கிறிஸ்து பிறப்புக்கு அழைத்துச் செல்கிறது.

வாழ்வில் நிகழ்வுகள் எம் எதிர் பார்ப் புக்களுக்கு மாறாகச் செல்லும் போதும் வாழ்வின் நிகழ்வுகள் எம் அமைதியைக் குலைக்கும்போதும் நாம் செல்கின்ற பாதை தெளிவாக இல்லாத போதும் நாம் நினைத்துக் கொள்வது கடவுள் இல்லை என்று. ஆனால் பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல் லோரும் என்னிடம் வாருங்கள். நான்

### பரமபிதா காட்டிய பாதை

உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என்நுகம் அழுத்தாது. என் சுமை எளி தாயுள்ளது என்று எம்மிடம் வரும் இயேசு கூறுகின்றார். எல்லாவற்றையும் கொண்டு வெற்றிடத்தை நிரப்பத் துடிக் கும் எமக்கு ஒரு நிறைவான வழியைக் காட்டுகின்றார் இயேசு. அவரது ஒளியில் நாம் எப்போதும் நடக்க வேண்டுமெனில் இறை வார்த்தையின் வழி நடக்க வேண் டும்.

அநீதியான ஆடம்பரச் செயல்கள், இரக்கமற்ற அதிகாரம், நியாயமற்ற பொரு ளாதார நெருக்கடி எனக் கூக் குரலிடும் உலகின் பல பகுதிகள் இயேசுவின் போதனையில உண்மை அர்த தத்தைக் காணமுடியும்.

நீதியும் பிறரன்பும் உண்மையும் நேர்மையும் அதிகாரமும் மதித்தலும் ஒன்றுக்கொன்று இணைந்து செல்ல வேண்டும். அத்துடன் எம் வார்த்தைகள் இன்றும் நம் வாழ்வுடன் இயைந்து செல் பவைகளாக இருக்க வேண்டும். இருப் பவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். இன்று அளவுக்கதிகமாக வைத்திருக்கும் நிலை மற்றும் அளவுக் கதிகமாகத் துன்புறும் நிலை என்ற இந்த இரு நிலைகளுக்கும் இடையே யுள்ள இடைவெளியை நீக்குவதற்கு நீதி எமக்கு அழைப்பு விடுக்கிறது. நேர்மையுடனும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தாமலும் அயலவர் மீது அன்புடனும் நடக்க வேண்டிய தேவை யில் நாம் உள்ளோம்.

நுகர்வுக் கலாசாரத்தில் தன் மகிழ் வைத் தேடிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில், கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் காத்திருந்து எவ்விதம் கொண்டா டப்போகிறோம் என்பது ஏக்கம் நிறைந்த கேள்வி வருகையும், காத்திருத்தலும் நமது அன்றாட வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

வருகை மகிழ்ச்சியையும், காத்திருத் தல் நம்பிக்கையுடன் கூடிய சுகத்தை யும் தருகின்றது.

நாம் பல வேளை பலரின் வருகைக் காக காத்திருந்த போது ஏமாற்றம் தான்எஞ்சியிருந்தது.



ஆனால் இறைவாக்கினர் கள் வாயிலாக பேசிய இறைவன் இறுதியிலே மனித உரு நமக்காக நம் முடன் வாழ வருகின்றார். அவர் நம்மிடம் கேட்பது என்ன? அன்பு மட்டும்தான் அதைத் தர நமது மனம் ஏன் மறுக்கி றது? இறையன்பும், பிறரன்பும்தானே நாம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளை கள். என்னை அன்பு செய் இறையன்பு. உன்னை அன்பு செய்வதுபோல் உன்

**ம.பிரான்சீஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

அயலவனையும் அன்பு செய். பிறரன்பு இவை தானே இயேசு நமக்கு கொடுத்த கட்டளைகள்.

இதனை கடைப்பிடிக்க நாம் தவறு வது ஏன்? காரணம் சுயநலம்.

இருளிலும் இறப்பின் பிடியில் இருப் போருக்கு ஒளிதரவும் நம் முடைய கால் களை அமைதி வழியில் நடக்கச் செய்ய வும், நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும், விண்ணிலிருந்து விடி யல் நம்மைத் தேடி வருகிறது.

எனவே இயேசுவின் பிறப்பில் நாம் வாழ எம்மை சாத்தியமாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலந்தை இளைஞர் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பதிவுக்கு உட்பட்ட சரசாலை தெற்கு இலந்தை திடல் இளைஞர் கழகத்தினால் நடத்தப்படும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்று சனிக்கிழமை சரசாலை தெற்கு இலந்தை திடல் இளைஞர் கழக விளையாட்டு மைதானத்தில் கழகத்தின் செயலாளர் கே.சசிதரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இப்போட்டியானது தொடர்ந்து 10 நட்கள் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிக்கு உட்பட்ட இளைஞர் கழகங்கள் 0774115681 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மாபெ ரும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற முடியும் என கழகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்போட்டியில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குனர் த.ஈஸ்வரராஜா, இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமலதாஸ், மாவட்ட சம்மேளன தலைவர் எஸ்.செந்தில்குமரன், நிஸ்கோ முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (3-37)

# காற்பந்து


யாழ்.காற்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களின் 22 வயதுப் பிரிவினருக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

அடுத்தமாதம் 11, 12, 13 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள மேற்படி காற்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் 15 விளையாட்டுக் கழகங்களின் அணிகள் பங்குபற்றவுள்ளதாக் காற்பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

# நியூலோரியர்ஸ் வி.க.கரப்பந்தாட்டம்; புத்தூர் கலைமதி அணி வெற்றி

நியூலோரியர்ஸ் விளையாட்டுக்கழகம் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியுள்ளது.

பன்னாலை கணேசா அணிக்கும் புத்தூர் கலைமதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணி 25:16, 25:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது.



சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கான பரிசினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் வெற்றிக்கிண்ணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# உதயதாரகை வி.க. வெற்றி

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சோ ஆ நிறுவனத்தின் வேலைத்திட்ட கிராமங்களை சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உதயதாரகை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியுள்ளது.

இப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் இரணைப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி போட்டியிட்டது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இறுதியில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் இளம்பறவைகள் அணியை வீழ்த்தி சம்பியனாகியது.

# நியூபைட் அணி வெற்றி

கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றில் நியூபைட் அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டி யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் நியூபைட் அணியை எதிர்த்து சன்சைன் அணி களமிறங்கியது. அதிரடியாக ஆடிய நியூபைட் அணி 6:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

# சங்கானை ஞானவைரவரை வீழ்த்தி பிரம்படி வி.கழகம் சம்பியன்

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பிரம்படி விளையாட்டுக்கழகம் 20 ஓட்டத்தால் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது

இப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற் றிருந்தது. இதில் சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது. யாழ்.மாவட்டத்தில் இருந்து இப்போட்டியில் 40 அணிகள் பங்குபற் றியிருந்தன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பிரம்படி விளையாட்டுக்கழகம் 78 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனை தொடர்ந்து 79 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என களமிறங்கிய சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் 59 ஓட்டத்தினை பெற்று 20 ஓட்டத்தினால் தோல்வியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்து தொடரைச் சமன் செய்தது

இந்திய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 2-வது இருபது-20 போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்று மும்பை வான்கடே சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.




இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 177 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக விராட் ஹோலி, தோனி ஆகியோர் 38 ஓட்டங்களையும், சுரேஸ் ரெய்னா ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அவ் இலக்கை 20 ஓவர்களில் முடிபில் 4 விக்கெட்டுக்களினை இழந்து பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக லம்ப் 50 ஓட்டங்களினையும், மோர்கன் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களினையும், ஹேல்ஸ் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக யுவ்ராஜ் சிங் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணியின் தற்போதைய இருபது-20 அணித்தலைவர் இயன் மோர்கன் தெரிவானதுடன், தொடரின் சிறப்பாட்டக்காரராக இந்திய அணியின் யுவ்ராஜ் சிங் தெரிவு செய்யப்பட்டார்.

## சர்வதேச விசா...

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் மேலும் தெரிவிக்கையில், குற்றங்களைச் செய்தவர்களை தண்டிப்பதற்கு முழுமையான சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்கு அவர்களைக் கொண்டு செல்ல வேண்டும்.

2008-2009-ல் இடம்பெற்ற படுகொலைகளை விசாரிக்க இலங்கை அரசாங்கம் உத்தரவிட்ட விசாரணைகள் போதுமானவையல்ல.

விசாரணைகள் விடுதலைப்புலிகளை மட்டுமல்லாது இருதரப்பையும் உள்ளடக்கியதாக இடம்பெறவேண்டும்.

விடுதலைப்புலிகளும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பலரைக் கொன்றதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இது தனியே 2009ம் ஆண்டு விவகாரம் மட்டுமல்ல.

மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன.

அது இப்போதைய பிரச்சினையும் கூட.

இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன.

அந்நேரங்களில் இலங்கையின் நிலைமை தொடர்பாக இந்தியா பெரும்பாலும் வாயை மூடிக் கொண்டு அமைதியாகவே இருந்தது.

ஆனால் இந்தியா புதிதாக கவனிப்பதற்கான நேரம் இப்போது வந்துவிட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-11)

## நீதியின் சுதந்திரத்தை...

எல்லா மட்டங்களிலும் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டாலே நீதித்துறை சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படும் என்றும் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் சாதாரண சட்டங்களுக்கு கட்டுப்படும் சட்டத்தின் ஆட்சி கடைப்பிடிக்கப்படாது போனால் ஒரு அரசின் நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று கூறுகளும் உருப்படியாக இயங்க முடியாமல் போகும் என்றும் அதனால் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்கின்ற அடிப்படை சமத்துவக் கோட்பாடு மீண் டும் சீர்செய்ய முடியாதளவுக்கு பாதிக்கப்பட்டு விடும் ஸ்ன்றும் ஷிராணி பண்டாரநாயக்க கூறினார்.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள எந்தவொரு நபருக்கும், தன்தரப்பு வாதத்தை முன்வைக்குமளவுக்கு முறையான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்பதையும் ஷிராணி பண்டாரநாயக்க நாட்டின் நீதிபதிகளின் முன்னால் வலியுறுத்தினார்.

அரசியலமைப்பின் 13-ம் சரத்தின் 3-ம் உப பிரிவின் படி, குற்றஞ்சாட்டொன்றை எதிர்நோக்கியுள்ள எந்தவொரு நபருக்கும் முறையான நீதிமன்றம் ஒன்றின் முன்னால் நீதியான விசாரணை கிடைக்க வேண்டும் என்ற உரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளதை தலைமை நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

நீதிபதிகள் எவ்வித சலனமும் இன்றி எவ்வித அழுத்தங்களும் இன்றி பாதுகாப்பாக செயற்பட முடிந்தால்தான் நீதி உரிய முறையில் உறுதிப்படுத்தப்படும் என்று கூறிய ஷிராணி, நீதிபதியொருவர் அச்சமோ, பக்கச்சார்போ இல்லாமல் எல்லா வகையான அழுத்தங்களிலிருந்து விடுபட்டவராக இருக்க வேண்டுமானால் நாட்டின் சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையும் அதனை உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ந-11)

## திருப்பி அடித்தால்...

வில்லை. இவ்வாறு நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் ஆக்ரோசமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழனுக்கு என்ன நேர்ந்தாலும் கண்டு கொள்ளாத இந்திய ஊடகங்கள், டில்லியில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதற்கு இந்தியாவின் அனைத்து ஊடகங்களும் எதிர்த்து குரல் கொடுக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் மற்றும் பல மணி நேர மின்வெட்டு என்பவற்றைக் கண்டித்து சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாம் தமிழர் கட்சியின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே சீமான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்,

ஈழத்தில் நமது பெண்கள் இலங்கை இராணுவத்தினரால் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொல்லப்பட்டதை இந்திய நாட்டின் ஒரு ஊடகமும் கூட கண்டிக்கவில்லையே ஏன்?

தமிழன் அடிபட்டால் அதனை தட்டிக் கேட்க ஒருவரும் இல்லை. ஆனால் தமிழன் திருப்பி அடித்தால் அதனை பயங்கரவாதம் என்று சர்வதேசம் கூறுகிறது. இது நியாயம்தானா?

தமிழினமும், தமிழ்நாடும் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை கையில் எடுத்துக் கொண்டு தீர்வு காண எந்த அரசும் வரவில்லை.

இந்த நிலையை மாற்ற வேண்டும். நம் பிரச்சினைகளை கையெடுக்க மறுக்கும் அரசுகளை நாம் கைப்பற்ற வேண்டும் அது மட்டுமே தமிழினம் சந்தித்துவரும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தரும் என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளும், உறுப்பினர்களும், ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ந-11)

## 1 1/2 இலட்சம் இராணுவ...

யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினுடனான சந்திப்பின்போது யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க வடக்கில் 15 ஆயிரம் இராணுவத்தினரே நிலைகொண்டு உள்ளதாக கூறியுள்ளார்.

அவர் கூறுவதுபோல் வடக்கில் 15 ஆயிரம் இராணுவம் காணப்படுமாயின் 15 ஆயிரம் இராணுவத்தினருக்கு ஏன் இத்தனை படை முகாம்கள்? பிரிகேட்கள்? பற்றாலியன்கள்? இத்தனை காணி அபகரிப்புக்கள், இத்தனை காணி உரிமை கோரல்கள் ஏன்? என அவர் கேள்வி எழுப்பினார்.

தமிழர்களிற்கு அரசியல் சமஷ்டி உரிமை 1947-ம் ஆண்டு முதல் கோரப்பட்டு வருகின்றது. இன்றும் அது கிடைக்கவில்லை. அதனை பெறுவதற்காக அமைதியான முறையில் போராடினோம், சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டோம்.

ஆனால் அவையாவும் பேரினவாத அரசினால் ஆயுதம் கொண்டு அடக்கப்பட்டன. எமது உரிமை தோற்கடிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் அகிம்சை போராட்டம் ஆயுத ரீதியில் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்பதற்காகவும் ஆயுதப் போராட்டத்தினை ஆயுத ரீதியாகத்தான் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காக எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

அதுவே பின்னர் வட்டுக்கோட்டைத் தீர்மானமுமாகியது. தற்போது எமது ஆயுத வழிப் போராட்டமும் அடக்கப்பட்டு விட்டது. நாம் சர்வதேசத்தினை நம்பியே இருக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

சமஷ்டி அரசியல் முறைக்காக அன்று தொடக்கம் இன்றுவரை போராடி வருகின்றோம். ஈழத்தமிழர்களுக்காக தமிழகத்தில் குரல் கொடுக்கிறார்கள். புலம்பெயர் தேசங்களில் போராட்டம் நடத்துகின்றார்கள்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் சமஷ்டி அரசியல் உரிமை பெறுவது தொடர்பில் எவ்வாறான இறுக்கமான நிலையில் உள்ளது என்பது எனக்கு தெரியவில்லை.

எமக்கு கட்சி முக்கியமில்லை. கட்சித் தலைவர்கள் முக்கியமில்லை. தமது உயிர்களை கொடுத்து அந்த வீரர்கள் எதற்காக போராடினார்களோ அந்த விடுதலை எமக்கு வேண்டும்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் பல நாடுகளின் துணையுடன் ஒடுக்கப்பட்டது. எந்த நாடுகளை கொண்டு எம்மை அழித்தார்களோ அந்த நாடுகளும் இவ் அரசிற்கு எதிராக மாறுவது திண்ணம்.

யாழ்.பல்கலைக்கழகம் இராணுவ அடக்குமுறைக்குள் இருக்கின்றது என்று சர்வதேசத்திற்கு தெரியும். 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் வன்னி மக்களுக்காய் கொண்டு வரப்பட்டு தற்போது அது சிங்கள, முஸ்லிம் மக்களிற்கும் பகிரப்படுகின்றது - இது என்ன விதத்தில் நியாயம்?

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் என்ன நடக்க போகின்றது என்பது எமக்குத் தெரியாது.

அதில் இந்தியாவின் நிலைப்பாடு இவ்வாறு இருக்கப் போகின்றதென்பதையும் உறுதியாகக் கூறிவிட முடியாது.

எமக்குள்ளே காணப்படும் கருத்து வேறுபாடுகளை களைந்து எமது பிரதேச சபை உறுப்பினர்கள் முரண்பாடுகளினை நீக்கிவிட்டு நாம் எல்லோரும் ஒட்டுமொத்த தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (ந-4)

## ஜனவரி 30ஆம் திகதி...

9 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றபோதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் வன்னி மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்ற 316 ஆசிரியர்களதும் இம் முறை வன்னி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ள 183 ஆசிரியர்களுமாக 499 ஆசிரியர்களது இடமாற்றம் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகவும் இம்மீளாய்வுகள் 5 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் உள்ளடங்கலாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் அடங்கிய இடமாற்ற சபை மேற்படி இடமாற்றத்திற்குரிய மீளாய்வை எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்குள் நடத்தி ஜனவரி 30ஆம் திகதிக்குள் இட மாற்றங்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இடமாற்றங்கள் உடன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் வலயக் கல்வித் திணைக்களங்களுக்கிடையிலான உள்ளக இடமாற்றங்கள் அந்தந்த வலயக் கல்வி இடமாற்ற சபை ஊடாக நடைபெற்று அதுவும் ஜனவரி 30ஆம் திகதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதிபர்களுக்கான இடமாற்றங்கள் முறையாக தயாரிக்கப்பட்டு ஆளுநரின் மேற்பார்வையின் பின் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஆசிரியர்களது சம்பளப்பண நிலுவை கொடுப்பதற்கான 130 மில்லியன் ரூபாயினை திறைசேரி ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு ஆளுநருடைய மேற்பார்வைக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அவர் அதை ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-3,15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி,
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள புதிய வீடு
(1 ½ பரப்பு)
விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0757100884

## காணி விற்பனைக்கு

கச்சேரி வீதி, நல்லூரில்
கிணறு சுற்றுமதிலுடன்
கூடிய காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:0757100884

## தேவை

ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் உடனடியாக நிரந்தர வேலை வாய்ப்புக்கள் கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜாம், கோடியல், யோகம், பிஸ்கட், புத்தகம், கிளவுஸ் போன்வற்றுக்கு உற்பத்தி / லேபல் பொதியிடல் பிரிவுக்கு ஆண், பெண் 17 -50 உடனடியாகத் தேவை.

சம்பளம் 18000/-, 32000/- உணவு, தங்குமிடம் சகாய விலையில் (தம்பதியினர், குழு, நண்பர்கள் ஒரே தொழிற்சாலையில்)

(சி-1875) 0776165099, 0778287666


## சிறுபான்மை...

அதன்மூலமாக இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு வழங்கப் பட்டிருக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் நான் எடுத்துக்காட்டி இருக்கின்றேன் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவரது அமைச்சு காரியாலயத்தில் நடைபெற்ற முஸ்லிம் பிரமுகர்களினுடனான சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவர்கள் ஒரு சிறு எண்ணிக்கையை கொண்டவர்கள். அவர்களைப்பற்றி தூக்கிப் பிடித்து நாங்கள் செயற்படுவதால் அவர்களை வீரர்களாக்கும் செயலையே நாங்கள் செய்வதாகிவிடும்.

பாதுகாப்பை பற்றி முஸ்லிம்கள் அச்சப்பட தேவையில்லை. இணைய தளங்களில் இத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் வெளி நாடுகளில் இருந்து கொண்டு செயற்படுகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்தது செயற்படும் அவர்களின் இணையத் தளங்களை முடக்குவது முடியாதகாரியமாக உள்ளது.

இந்த நாட்டிலிருந்து செயற்படும் அவ்வாறான இணையத் தளங்களை பற்றிதகவல்களைதந்தால் அவற்றிற்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசித்து பார்க்கலாம் என்றார். (ந-11)

## இராஜதந்தி...

வராகவும்,

மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் இஸ்ரேலுக்கான இலங்கையின் பிரதித்தூதுவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என அறியப்படுகிறது. (ந-11)


புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை வைர வியாபாரிகள்
இல.217 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6083, 0714182480

## நீங்களும் மின்இணைப்பாளராகலாம்

கட்டணம்: ரூ.11,500 Electrical wiring

முதல் 10 பேருக்கு விசேட விலைக்கழிவு

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வருமானம் தரக்கூடிய 100% தொழில் உத்தரவாதம் வழங்கப்படும்

Electrical Engineer இன் வழிகாட்டலில்...
அடிப்படை முதல் தெளிவான விளக்கங்களுடன் பாடநெறி கற்பிக்கப்படுவதுடன் ஆய்வுகூடப் பயிற்சியையும் (Practical) உள்ளடக்கியது.

பாடநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.
முழுநேரம்/பகுதிநேர வகுப்புகள் உடனடியாக ஆரம்பம்

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
0212224728, 0777444225

(C-1878)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வல்லிபுரம் கனகசிங்கம்

(முன்னாள் நேரக்கணிப்பாளர் - காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை)

திதி: 23.12.2012

எம் குடும்பத் தலைவரே
காலம் ஓடிவிட்டதே உங்களைப் பிரிந்து
ஆண்டொன்று ஆகிவிட்டதே
நம்பமுடியவில்லை - எங்களால்
எம்கூட நீர் இல்லை என்பதை
ஆனாலும் என்றும் உம் பிரிவை மறவாத
நினைவுகளுடன்.....

தோற்றம் : 01.01.1929
மறைவு: 05.01.2012

புலமை கல்வி நிறுவனம்,
இணுவில் வீதி, மானிப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(1190)

## வருடாந்த தேருநர் இடாப்புப் பதிவை உறுதிப்படுத்தல் - 2012

**இனிமேல் சிக்கல் கொள்ளத்தேவையில்லை !**

**இது உங்களால் முடியும் !!**

2011 ஆண்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பை உங்களால் **www.slelections.gov.lk** எனும் இணையத்தளத்தை அணுகுவதன் மூலம் உங்கள் பெயர் அதில் இடம்பெற்றுள்ளதா என்பதை அறிய முடியும்.

தற்போது 2012ம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பைத் தயார்செய்யும் பணி நிறைவுபெறும் கட்டத்திலுள்ளது.

தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தும் செயற்பாடு டிசம்பர் மாத இறுதியில் இடம்பெறும். புதிய ஆண்டில் இவ்விடாப்பை பார்வையிட முடியுமான இடங்கள்.

- தேர்தல் செயலகம் கொழும்பு
- மாவட்ட தேர்தல் பணியகம்
- பிரதேச செயலகம்
- உள்ளூராட்சி மன்றங்கள்
- கிராம உத்தியோகத்தர் பணியகம்

2012 இடாப்பை **www.slelections.gov.lk** எனும் இணையத்தளத்தினூடாகவும் அறிந்து கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கும், உதவிக்கும் எம்முடன் கீழ்வரும் இலக்கங்களினூடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் 0112 514 441- 0112 514 442
யாழ்ப்பாணத்தில் 0779 239 362 - 0779 353 080
வன்னியில் 0776 513 729 நுவரெலியாவில் 0775 757 189
ஏனைய மாவட்டங்களுக்கு 0758 086 565 - 0783 831 199

பஃவ்ரல், 12/3, றொபற் றெறஸ், றொபற் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.

பஃவ்ரல்

Activity supported by the Canada Fund for Local Initiatives
Activité réalisée avec l'appui du Fonds canadien d'initiatives locales
Canada

(சி-1877)


## சுந்தர்சன் நிறுவனத்தில் மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 50 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

**1 ஆம் பரிசு** - Single Door Fridge - திரு. P. முருகவேல் - சங்கரத்தை
**2 ஆம் பரிசு** - Washing Machine - திரு. T. ஆனந்த் - யாழ்ப்பாணம்
**3 ஆம் பரிசு** - Microwave Oven - திரு. B. அகிபன் - வட்டுக்கோட்டை

**4 - 10 ஆம் பரிசில்கள்** - Mixture Grinder
P. முகுந்தன் - நவாலி / S. கணபதிப்பிள்ளை - சுழிபுரம் / J. பவளலோசினி - வவுனியா / K. சிவலோகநாயகி - இணுவில் / U. அபிஷன் - நவாலி / பாலமுருகன் - மானிப்பாய் / T. நரேந்தன் - கரவெட்டி

**11 - 20 ஆம் பரிசில்கள்** - Pedestal Fan
V. சுவேதா - இளவாலை / K. கருணா - நவாலி / P. சிறீதரன் - சுழிபுரம் / Barakath Traders -யாழ்ப்பாணம் / R. வரதன் - வட்டுக்கோட்டை / S. குணலிங்கம் - சித்தங்கேணி / A.F. றொஷானி - யாழ்ப்பாணம் /K. பாலகிருஷ்ணன் - சுழிபுரம் /M. சுவீற்சன் - பாசையூர் /S. மார்க்கண்டு - சாவகச்சேரி

**21 - 30 ஆம் பரிசில்கள்** - Mobile Phone
S. கணேஷ்குமார் - உடுவில் / S. தனுஷன் - அச்சுவேலி / N. திருமோகனதாஸ் - வட்டுக்கோட்டை / J. சதீஸ்குமார் - இணுவில் / T. நேசரம்யா - நவாலி / S. ஜெயசீலன் - யாழ்ப்பாணம் / V. ஜெகதாம்பிகைபாகன் - மல்லாகம் / R. சசிகலா - அச்சுவேலி / Y. ஆதவன் - யாழ்ப்பாணம் / J. றேமன் - இளவாலை

**31 - 40 ஆம் பரிசில்கள்** - Water Filter
K. சிவரூபன் - பருத்தித்துறை / R. பாஸ்கரன் - கோண்டாவில் / S. கிருபாகரன் - மீசாலை / R. சந்திரபாலன் - மாதகல் / J. யாழினி - கொக்குவில் / A. இந்துதாஸ் - சண்டிலிப்பாய் / S. கிஷோக்குமார் - இளவாலை / V. றேமண்ட் - ஆனைக்கோட்டை / S. சிவகுமாரன் - கொக்குவில் / V. ஜெயந்தி - ஆனைக்கோட்டை

**41 - 50 ஆம் பரிசில்கள்** - Toaster
S. சாந்தி - சுழிபுரம் / B. பிரதீபன் - கொக்குவில் / N. சிவகுமார் - சாவகச்சேரி / R. சிவகுமார் - மானிப்பாய் / T. ஜீவிதன் - சண்டிலிப்பாய் / R. சாந்தரூபி - சண்டிலிப்பாய் / T. கிருபன் - மானிப்பாய் / S. அம்புஜன் - கோப்பாய் /T. தக்சிகன் - சிந்துபுரம் / V. கந்தசாமி - சண்டிலிப்பாய்




## ராசி சில்க்ஸ்

70,71 A நவீனசந்தை, யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் 01.01.2013 முதல்

**ராசி கலக்சனின்**

இல.199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் பிரமாண்டமான காட்சியறையுடன் இணைகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

இடமாற்றம் 2013 முதல்

T.P: 021 222 5571

(சி-1876)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.